கண்ணா பிண்ணா கதைகள்

ரா.கி. ரங்கராஜன்

உரிமைப் பதிப்பு

முதற் பதிப்பு - 2007
இரண்டாம் பதிப்பு - 2008

© ஆசிரியர்

விலை: ரூ. 60-00

அல்லயன்ஸ் கம்பெனி

ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Typesetting : Raghavendra Computers, Chennai 600 018 &
Chengamalam Enterprises, Chennai-4

Printed by : Kay Em Packaging Industries, Chennai-5

அல்லயன்ஸூம் ஆறு தொகுப்பும்

கதை எழுதும் ஆசை வருவதற்கு முன்னால் கதை படிக்கும் ஆசை வர வேண்டும். அந்த ஆசையை என்னுள் விதைத்தவர் அல்லயன்ஸ் நிறுவனரான அமரர் குப்புசாமி ஐயர்.

1942ஆம் ஆண்டு 'கதைக் கோவை' என்ற சிறுகதைத் தொகுப்பை அவர் வெளியிட்டார். அந்த நாளில் பிரபல மாக இருந்த ஒவ்வொரு எழுத்தாளரிடமும் ஒவ்வொரு சிறு கதை வாங்கி அதில் பிரசுரித்தார். தடிமனான கறுப்புக் காலிகோ அட்டை, தெளிவான பெரிய அச்செழுத்து. வெவ் வேறு எழுத்தாளர்கள் எழுதியவையாகையால் நடை, உத்தி, பாவம், கதை, சம்பவம் என்று எல்லா அம்சங்களிலும் வெவ்வேறான ருசிகள் நிறைந்திருந்தன.

கும்பகோணம் காந்தி பார்க்கிற்கு எதிரில் இருந்த சாது சேஷய்யா லைப்ரரியில் அந்தத் தொகுப்பை விழுந்து விழுந்து படித்தேன். அவற்றைப் போன்ற சிறு கதைகள் எழுத வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. கல்கி, தேவன், எஸ்.வி.வி. போன்ற எழுத்துலக ஜாம்பவான்கள் அந்த ஆசையை வளர்த்து என்னைக் கதை எழுத வைத்தார்கள். அமரர் எஸ்.ஏ.பி. என்னை ஊக்கி, வாய்ப்பும் வசதியும் தந்து, கதை, கட்டுரை, துணுக்கு என்று ஆயிரக்கணக்கில் எழுதிக் குவிக்கும்படி செய்தார்.

அன்றைக்குக் கதைக் கோவையை வெளியிட்ட அதே அல்லயன்ஸ் ஸ்தாபனம் இன்று என்னுடைய இந்த ஆறு

கதைக் கோவைகளை வெளியிட்டுள்ளதை ஆண்டவனின் லீலை என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்வது?

அல்லயன்ஸ் ஸ்ரீநிவாஸன் மகா சுறுசுறுப்புக்காரர். ஆர்வத்துடன் பாடுபட்டு இத்தொகுப்புக்களைக் கொண்டு வந்திருக்கிறார். பிரசுரப் பொறுப்பை அவரிடம் முழுக்க முழுக்க விட்டிருக்க வேண்டிய நான், யோசனை என்ற பெயரில் அடிக்கடி தலையிட்டு எண்ணற்ற தொல்லைகள் தந்தேன். பெரிய மனதுடன் அவர் அவற்றைப் பொறுத்துக் கொண்டார்.

இந்தத் தொகுப்புக்களுக்கு முன்னுரைகள் எழுதித் தந்த சுஜாதா, இந்திரா பார்த்தசாரதி, திலகவதி, கிரேஸி மோகன் ஆகியோர் என்னிடம் மிக்க அன்பு கொண்டவர்கள். குறைகளைக் கண்டு கொள்ளாமல் நிறைகளைப் பாராட்டியிருக்கிறார்கள். மிக்க நன்றி.

நண்பர் வாதூலனுக்கு நன்றி சொல்லத் தனியே ஒரு புத்தகம் எழுத வேண்டும். நான் ஒரு சிறுகதை எழுத்தாளன் என்பதை நிலைநாட்ட வேண்டும் என்பதில் வெறியாக இருந்ததோடு, கிடைக்காது என்று நான் முடிவு கட்டி விட்ட பல பழைய கதைகளைத் தேடியெடுத்துத் தூசி தட்டித் தந்த அந்த நல்லவருக்கு என் நெஞ்சார்ந்த ஆசீர்வாதங்கள்.

அண்ணா நகர்
சென்னை - 40
02.11.2007

ரா.கி. ரங்கராஜன்

என்னுரை

இந்தச் சிறுகதை(!) தொகுப்புக்கு முன்னுரை எழுதித் தரும்படி யாரைக் கேட்கலாம் என்று யோசித்தேன். யாரையும் கேட்கப் பயமாயிருந் தது. 'என்னை இன்ஸல்ட் பண்ணுகிறாயா?' என்று சீறுவார்கள் என்ற பயம். கடைசியில் இந்தக் கதைகளின் தனித் தன்மையை ரசித்துப் பாராட்டக் கூடியவர் ஒரே ஒருவர்தான் இருக்கிறார் என்று உணர்ந்தேன். அது நான் தான்.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் அமெரிக்காவிலிருந்து 'ஸாட்டர்டே ஈவனிங் போஸ்ட்' என்ற வாரப் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. வழ வழப்பான காகிதத்தில் ஒரு தொடர்கதை, இரண்டு சிறு கதைகள், நிறைய கட்டுரைகள் கொண்டதாக, பளபளப்பான வண்ண அட்டை போட்ட இந்தப் பத்திரிகையில், புதுமையான சிறுகதை ஒன்று அடிக்கடி வந்து கொண் டிருந்தது. ஒரு யந்திர உற்பத்திக் கம்பெனி, தன் விற்பனைப் பிரதிநிதியாக ஓர் இளைஞரை ஊர் ஊராக அனுப்பும். அவர் அங்கே கிடைத்த சிக்கலான அனுபவங்களைத் தலைமை அலுவலகத்துக்கு எழுதி அனுப்புவார். சிக்கலைச் சமாளிப்பது எப்படி என்று அவர்கள் சொல்வார்கள். அதன்படி இவர் செய் வார். கதை மொத்தமும் கடிதங்களிலேயே நகரும். எல்லாமே வேடிக்கையான கதைகள்தான்.

அமரர் எஸ்.ஏ.பி. 'இது போல நீங்கள் ஒரு கதை எழுதுங்கள்' என்று பணித்தார். காதலையும் ஹாஸ்யத்தையும் மையமாக வைத்து நான் எழுத லானேன். யாருக்கு யார், எந்த முகவரியிலிருந்து எந்த முகவரிக்கு எழுது கிறார்கள் என்று முதல் சில கதைகளில் விவரம் (கற்பனையாகத்தான்) தந்தேன். பிறகு வேடிக்கைதான் முக்கியமே தவிர, விவரம் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தேன். ஒரே ஊருக்குள், ஒரே பேட்டைக்குள், ஒரே தெருவுக் குள், ஏன் ஒரே வீட்டுக்குள்கூட இந்தக் கடிதப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. எந்த லாஜிக்கும் இல்லாத கன்னா பின்னா கதைகள் இவை. ஆசிரியர் எஸ்.ஏ.பி. க்கு இந்தக் கோமாளித்தனம் பிடித்திருந்தது. 'இந்த வாரம் நீங்கள் ஒரு கடிதக் கதை எழுதுங்கள்' என்று சொல்லி விட்டுப் போய் விடுவார். அவை களைப் பார்க்கவும் மாட்டார். படிக்கவும் மாட்டார். அச்சில் ஏறி விடும்.

பெருமகனாரான அந்தத் திருமகனாரின் காலடிகளில் இந்தத் தொகுப்பை யும் மற்றத் தொகுப்புக்களையும் நெஞ்சார்ந்த நன்றியுடன் வைக்கிறேன்.

23.10.2007 இங்ஙனம்
சென்னை - 40 ரா.கி. ரங்கராஜன்

ஆச்சரியம் ஒன்றும் இல்லை! அற்புதம்!

ரா.கி. ரங்கராஜன் அவர்களுக்கு வயது 80 நிறைவு பெற்று விட்டது.

வயது ஏற ஏற அவரது சிந்தனை வளமும் பெருகிக் கொண்டே வருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை! ஆனால், அந்தச் சிந்தனையில் புதுமையின் மெருகு கூடிக் கொண்டே வருவதுதான் அற்புதம்!

இவர் குமுதம் பத்திரிகையில் ஊழியம் பார்த்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை! ஆனால், அமரர் எஸ்.ஏ.பி. அவர்கள் மீது மாறாத பக்தி கொண்டிருப்பதுதான் அற்புதம்!

இவர் தமிழில் 1500க்கும் மேற்பட்ட கதைகள் எழுதி யிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், எல்லா வற்றையும் சுவை குன்றாமல் எழுதியிருப்பதுதான் அற்புதம்!

இவர் குமுதம் பத்திரிகையிலிருந்து ஓய்வு பெற்றிருப்ப தில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், அதற்குப் பிறகும் விகடனில் கதைகள், துக்ளக்கில் டெலி விமரிசனம், அண்ணா நகர் டைம்ஸ் வட்டார இதழ்கள்-இப்படி பல பத்திரிகைகளில் பற்பல தலைப்புகளில் இன்றும் எழுதுவதுதான் அற்புதம்!

இவர் பல புனை பெயர்களில் எழுதியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லா மல், வெவ்வேறு எழுத்தாளர்களைப் போல, எழுத்து நடை யில் மாற்றம் காட்டியிருப்பதுதான் அற்புதம்!

இவர், புத்தகங்களை வெளியிடுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், ஒவ்வொரு புத்தகத்திற்கும் இவர் கொடுக் கும் தலைப்புதான் அற்புதம்!

இவரது சிந்தனையில் பிறக்கும் சம்பவங்களில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், அதை இவர் எழுதிய விதங்கள் தான் அற்புதம்!

இவர் காதல் கதைகள், திக் திக் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குடும்பக் கதைகள், ட்விஸ்ட் கதைகள், கன்னா பின்னா கதைகள் என்று விதவிதமாக எழுதியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்ல; ஆனால், அந்தந்த தலைப்புக்கு ஏற்ப, கதை களில் உண்மைத் தன்மை பொருந்தியிருப்பதுதான் அற்புதம்!

இவரது எழுத்துப் பணியில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், அதில் இவர் காட்டும் சிரத்தைதான் அற்புதம்!

மேலை நாட்டு இலக்கியங்கள் பலவற்றை இவர் தமிழில் எழுதியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், அவைகளைத் தேர்வு செய்து எல்லாம் பிரபலமடையும் விதத்தில் தந்திருப்பதுதான் அற்புதம்!

இவர் ஏராளமான நண்பர்களைக் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால், அந்த நண்பர்கள் ஒவ்வொரு வரும் இவர் மீது கொண்டுள்ள மரியாதையும் பாசமும்தான் அற்புதம்.

இவரது நூல்களை அல்லயன்ஸ வெளியிடுவதில் ஆச்சரி யம் ஒன்றும் இல்லை; ஆனால், நம் நிறுவனர் குப்புஸ்வாமி ஐயர் முதலாவது 'கதைக் கோவை' தொகுப்பை வெளியிட்ட காலம் தொட்டு, அவர் மீது இவர் கொண்டுள்ள மதிப்புதான் அற்புதம்!

மொத்தத்தில்...

ரா.கி. ரங்கராஜன் அவர்கள் ஆச்சரியம் கலந்த அற்புத மான மனிதர்.

அல்லயன்ஸ் ஸ்ரீநிவாஸன்

பொருளடக்கம்

1.	மீரா கே பிரபு	11
2.	கதாநாய்	21
3.	கொஞ்சம் இரு	32
4.	இந்தப் பிரேம மாலாவையா... ஏமாற்ற முடியும்?	41
5.	சிவகாமியின் சப்தம்	50
6.	டெல்லி மெஷின்	61
7.	கூடை ஒன்று ஆள் இரண்டு	67
8.	என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர்	74
9.	மணி என்ன ஆகிறது?	88
10.	அச்சுப் பிழை!	96
11.	பூனை பிடித்தவள் பாக்கியம்	107
12.	வீணா, என் காதல் வீணா?	114
13.	வெள்ளையனே! வெளியேறு!	124
14.	தொண்டையடிப்பொடி!	133
15.	அம்மா, வராதே!	143
16.	கேட்டாயா?	149
17.	சபாஷுக்கு ஒரு சபாஷ்	159
18.	காதல் பைனாகுலரில் தெரியும்	167

1. மீரா கே பிரபு

ரெயில்வே காரியாலயம்
திருமண்ணூர்

செல்வி மீரா தேவி,
9, செக்கு மாட்டுத் தெரு,
திருமண்ணூர்.

அம்மணி,

தாங்கள் நேற்றைய தினம் எம்மிடம் நேரில் கொடுத்த புகார் சம்பந்தமாகக் கீழ்க்கண்ட விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1. சேலத்திலிருந்து தங்கள் மாமா மூன்று டஜன் மல்கோவா மாம்பழங்கள் அனுப்பியதாகவும், ஆனால் சரியாக இரு பத்தேழு பழங்களே தங்கள் கைக்கு வந்து சேர்ந்ததாகவும் சொன்னீர்கள். அனுப்பப்பட்டவை மூன்று டஜன்தான் என்பதற்கு அத்தாட்சி எதுவும் தாங்கள் தரவில்லையென்றாலும், எடை மூலம் சரிபார்த்துக் கொள்ளலாம். ஆனால் —

2. தாங்கள் பழக்கூடை இல்லாமல் வெறுங்கையாக — மன்னிக்கவும், அழகுப் ்பையும் கையுமாக — வந்தீர்கள். கேட்டதற்கு, "இருபத்தேழு பழங்களையும் சாப்பிட்டாகி விட்டது. எடைக்கு எதைக் காட்டுவது?" என்றீர்கள். ஏன் தாங்கள் முப்பத்தாறு பழங்களாகவே சாப்பிட்டுப் புகார் செய்ய வந்தீர்கள் என்று நாங்கள் கொள்ளக் கூடாது? மேலும் —

3. இந்த மாதிரி, உறவுக்காரர்கள் உறவுக்காரர்களுக்கு அனுப்பும் பழவகைகளைப் பற்றித் தங்களைவிட, ரெயில்வே இலாகாவினரான எங்களுக்கு அதிகம் தெரியும். சும்மா 'அனுப்பு, அனுப்பு' என்று துளைத்தெடுத்து, ஆனால் அதற்குண்டான பணத்தைத் தரும் உத்தேசம் எதுவும் இல்லாத உறவுக்காரர்களுக்காக அனுப்பப்படும் பழங்களின் தரத்தைப் பற்றி நாங்கள் நன்கு அறிவோம். அடுத்த முறை கேட்காமல் இருக்க வேண்டும் என்பதை முன்னிட்டு, கதுப்பை விட நாரும், இனிப்பை விடப் புளிப்பும் அதிகமுள்ள வகைகளே இந்த ரகத்தில் அனுப்பப்படும். அத்தகைய பழங்களைத் தன்மானமுள்ள எந்த ரெயில்வே சிப்பந்தியும் கண்ணாலும் பார்க்க மாட்டார். திருடி விட்டார்கள் என்று கூறுவது அபாண்டம் மட்டுமல்ல; அவதூறும் கூட.

எனவே, தங்கள் புகாரைப் பற்றி மேல் நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ள இயலாதிருப்பதற்கு வருந்துகிறோம்.

டி. பாஸ்கர்
பார்சல் குமாஸ்தா

உயர்திரு பாஸ்கர் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் கூறியிருக்கும் சமாதானம் வெகு வினோதமானது. ஐயா, உலகத்திலே நம்பிக்கை வைத்துத்தான் வாழ்க்கை நடக்கிறது. இருபத்தேழு பழங்கள் வந்தது என்று நான் சொன்னால், இருபத்தேழு பழங்கள்தான் வந்தது என்று நீங்களும் நம்பினால்தான் உண்டு. இல்லாவிட்டால், பரஸ்பரம் இரண்டு தரப்பிலும் அர்த்தமற்ற ஐயங்கள் ஆயிரம் கிளம்பும்.

உதாரணமாக — நான் அன்று ஸ்டேஷனுக்கு வந்து, "பார்சல் குமாஸ்தா யார்?" என்று போர்ட்டரை அதட்டிக் கேட்டபோது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள், நினைவிருக்கிறதா?

மேஜை மீது பிளாஸ்டிக் தட்டில், அழகாக நறுக்கி வைக்கப்பட்ட மாம்பழத் துண்டுகள் எங்கிருந்து வந்தன? ஏன் என்னுடைய 'காணாமற் போன' கோஷ்டியைச் சேர்ந்ததாக இருக்கக் கூடாது?

அப்படி நான் கேட்கவில்லை. ஏன்? நம்பிக்கைதான். மாமா அனுப்பிய பழத்தின் நிறத்தைப் போலவே இருந்தால் போதுமா? அதே மாதிரிப் பழம் இந்தப் பட்டிக்காட்டிலும் கூடக் கிடைக்கலாம் என்று நான் நம்பினேன். அதைப் பற்றிக் கேள்வி போடவேயில்லை. எதற்குச் சொல்கிறேன் என்றால், மனிதனுக்கு மனிதன் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதற்காகத்தான். மற்றபடி, உங்கள் இஷ்டம்போல் என் புகாரைக் கிழித்துக் கூட்ஸிலே போடுங்கள். ஆட்சேபணை இல்லை.

மீரா தேவி

பி.கு. : என் மாமாவுக்கு நான் முன்னதாகவே பணம் அனுப்பினேன். அவரும் மகா யோக்கியர். வீண் பழி சுமத்த வேண்டாம் அவர் மீது.

அம்மா மீராதேவி!

சத்தியம்! சத்தியம்! கிலோ கற்பூரம் வாங்கிக் கொளுத்தி அடிக்கிறேன். என் பேச்சை நம்புங்கள். போர்ட்டர் பொன்னு சாமி தன் 'மச்சான்' கொண்டுவந்து தந்ததாகச் சொல்லி எனக்குக் கொடுத்த பழம் அது. அவனுக்கு 'மச்சான்' யாரும் கிடையா தென்பது (உண்மையில், அவனுக்கு மனைவியே கிடையா தென்பது) இன்று குறுக்கு விசாரணைக்கப்புறம்தான் தெரிய வந்தது. ஆயினும், மேற்படி பழம் தங்கள் கூடையிலிருந்து எடுக்கப்பட்டதுதான் என்பதற்கு இது ஆதாரமாகாது.

நிற்க. தாங்கள் நம்பிக்கையைப் பற்றிக் குறிப்பிட்ட சில பொன்மொழிகள் ரெயில்வே இலாகாவுக்குப் பொருந்தாது. எல்லாம் இங்கே பிரத்தியட்ச ஆதாரத்தின் பேரில் நடைபெறு கின்றன. உங்கள் உபதேசப்படி, ரயில் எப்படியும் அடுத்த ஸ்டேஷனுக்குத்தானே போகும் என்று நம்பிக்கை வைத்து எஞ்ஜின் டிரைவர் கண்ணைக் கொஞ்சம் மூடிக் கொண்டால் என்ன கதியாகும்? யோசித்துப் பாருங்கள்.

இத்துடன் இந்தக் கடிதப் போக்குவரத்தை முடித்துக் கொண்டிருப்பேன். ஆனால் நீங்கள் விட மாட்டீர்கள் போல் இருக்கிறது. ஆகவே, தயவுபண்ணி நாளை மறுநாள் காலை 10 மணி சுமாருக்கு மீண்டும் நேரில் ஸ்டேஷனுக்கு வாருங்கள். புகார் இன்ஸ்பெக்டர் நாளை விஜயம் செய்கிறார். அவரிடம் நேரிலேயே உங்கள் கட்சியை எடுத்துச் சொல்லலாம் — நீங்கள் விரும்பினால்.

பாஸ்கர்

★

பாஸ்கர் அவர்களுக்கு,

டாணென்று பத்து அடிக்கும் போது நான் வந்து நிற் கிறேன். உங்களைப் போன்ற சிப்பந்திகளை ரெயில்வே

இலாகாவிலிருந்து ஒழித்துக் கட்டும் பணியை ஆற்ற ஒரு வாய்ப்புக் கிடைத்தது. காணாமற்போன முக்கால் டஜன் மல்கோவாவும் வாய்க்கெட்டினாற்போல் மகிழ்ச்சி தருகிறது.

மீரா

★

ஹே மீரா!

அவசரம்! அவசரம்! இக்கடிதத்தைப் பியூன் மூலம் நேரில் அனுப்பியிருப்பதைக் கொண்டே ஊகிக்கலாம். சொன்னபடி வரவேண்டாம், வேண்டாம்! டாம்! டாம்! மற்றவை பிற்பாடு.

பாஸ்கர்

★

ஐயா பாஸ்கர்!

உமது உத்திரவுப்படியெல்லாம் நகர நானென்ன பார்சலா? கட்டாயம் வந்தே தீருவேன்.

மீரா

★

மீரா!

ஐயையோ! இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காதே! அப்படியே பிளாட்பாரம் ஓரமாக மறைந்து விடு. மேஜை எதிரே, புகார் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருக்கிறார். உன் புகாரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். 'இந்த அம்மாகூட இங்கே எங்கேயோ கண்ணிலே பட்டாங்க' என்று போர்ட்டர் பொன்னுசாமி வேறே என் காலை வாரிவிட்டிருக்கிறான். ரொம்ப ஆபத்தான நிலைமை. இதை என் அந்தரங்கப் பியூன் மூலம், ரசீது கொடுத்து அனுப்பு கிற பாவனையில் ரகசியமாக அனுப்பியிருக்கிறேன். வேண் டாம். தலைகாட்டாதே!

பி.கு. : கொஞ்சம் இரு. வாசல்புறத்தில் பொன்னுசாமி நிற்கிறான். உன் தலை தெரிந்தால் என் தலை போகும். பிளாட்பாரத்தில் ஒரு வண்டி நிற்கிறதல்லவா? அதில் நுழைந்து மறுபக்கம் இறங்கிப் போய்விடு. உதவு. உபகாரம் செய். ஆயுசுக்கு நான் உன் அடிமை.

பா.

★

விபூதிப்பட்டணம்

பாஸ்கர் —

விபூதிப்பட்டணத்தில் அனாதையாய் நிற்கிறேன் —கடிதம் தொடருகிறது — பணம் தேவை — உடனே அனுப்புக.

மீரா

★

பணம் வருகிறது — விபூதிப்பட்டணத்தில் என்ன விசேஷம்? — அறுபது மைல் கடந்த மர்மம் என்ன?

பாஸ்கர்

★

விபூதிப்பட்டணம்

பாஸ்கர்,

ஜல்லிக் கற்கள் அடங்கிய நாலு பார்சல் கட்டு உமது வலது கால் கட்டை விரலில் விழ வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொண்டு இக்கடிதத்தைத் தொடங்குகிறேன்.

உமக்காக மனமிரங்கி, ரயிலில் ஏறினேன் — மறுபுறத்தில் இறங்க. இறங்கவில்லை — இறங்க முடியவில்லை. கதவண்டை கூட்டம். ரயிலும் கிளம்பி விட்டது. ஓடுகிற

ரயிலிலிருந்து இறங்குவதைப் பிரயாணிகள் பலவந்தமாகத் தடுத்து விட்டார்கள். அப்போது மயக்கம் போட்டு விழுந்த வள்தான். விபூதிப்பட்டணத்தில் டிக்கெட் பரிசோதகர் என்னை எழுப்பி, டிக்கெட்டு இல்லை என்ற விவரத்தையும் அறிந்து கொண்ட பின்னர் இறக்கி விட்டார். நல்ல வேளை, என் கூடப் படித்த சினேகிதி ஒருத்தி இங்கே இருப்பது நினைவு வந்தது. அவள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து தந்தி கொடுத்தேன். நான் கிளம்பிய போது அப்பாவும் ஊரில் இல்லை. வேறு யாருக்குத் தெரிவிப்பது? எல்லாக் கலாட்டாவுக்கும் காரணமான உங்க ளுக்கே செலவு வைத்தேன். பணம் கிடைத்தது. நன்றி கிடைக் காது. இக்கடிதத்தில் தேட வேண்டாம்.

இவை போகட்டும். புகார் இன்ஸ்பெக்டரிடம் நேரில் சொல்லலாமென்று வரவழைத்தவர், திடீரென என்னைத் துரத்துவானேன்? இளம் பெண்களுக்கு வேடிக்கை விளை யாட்டுக் காட்டவா உங்களைச் சம்பளம் கொடுத்து உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள்? இதற்கெல்லாம் சரியான காரணம் சொல்ல வேண்டியது உங்கள் பொறுப்பு. சொல்லாவிட்டால், நான் என் பழம் புகாரைத் தூக்கியெறிந்துவிட்டுப் புதுப் புகாருடன் ரெயில்வே மந்திரி வரை போய்விடுவேன். உஷார்.

மீராதேவி

★

அன்புள்ள மீரா,

சிரித்தால் கோபித்துக் கொள்வாய். இருந்தும் சிரிப்பு வருகிறது. என்னால் நேர்ந்த கஷ்டங்களுக்கு மிகவும் வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோக, பணம் கிடைத்ததும் நீ புறப்பட்டு வரு வாயென எதிர்பார்த்தேன். ஆபீஸ் நேரமில்லாத போதும் கூட

ஸ்டேஷனிலேயே பழி கிடக்கிறேன். உடனே புறப்பட்டு வா. நேரில் விளக்குகிறேன்.

உன்னை மறவாத
பாஸ்கர்

★

பாஸ்கர்,

விளக்கினால்தான் நேரில் வர உத்தேசம். அத்தோடு, நீங்கள் அனுப்பிய பணமும் செலவழிந்து விட்டது. இங்கு சினேகிதியின் குழந்தைகளுக்குச் சொக்காய்த் துணிமணி எடுத்துக் கொடுக்க நேரிட்டது. உங்கள் பணம் சமயத்தில் உதவிற்று. இன்னொரு பதினைந்து ரூபாய் அனுப்பினால் நலம். அப்பா இன்னும் ஊரிலிருந்து திரும்ப வந்திருக்க மாட்டார். அவர் சமாசாரமே அப்படித்தான், வெளியூர் போனால், மாதக் கணக்கில் முகாம் போட்டுவிடுவார்.

நன்றியுள்ள
மீரா

★

மீரா!

இனிப் பொறுக்க மாட்டேன். உடனே புறப்படு. பணம் தனியே வருகிறது.

பாஸ்கர்

★

மீரா!

எங்கிருக்கிறாய்? ஏன் மௌனம்? என்ன கோபம்?

பாஸ்கர்

அன்புள்ள பாஸ்கர்,

உங்கள் கடிதங்கள், மணியார்டர்கள் எல்லாம் கிடைத்தன. விபூதிப்பட்டணத்திலிருந்து சேலம் மிகச் சமீபம். இவ்வளவு தூரம் வந்துவிட்டு, என் மாமாவைப் பார்க்காமல் ஊர் திரும்பலாமா?

என்னைச் சங்கடத்துக்குள்ளாக்கிய காரணத்தை இன்னும் நீங்கள் சொல்லவில்லை என்பதை மீண்டுமொருமுறை நினைவு படுத்துகிறேன். அந்த விஷயம் தெரிந்த பின்னரே திருமண்ணூர் திரும்ப உத்தேசம்.

அன்புள்ள
மீரா

பி.கு. : ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? இங்கேதான் என் அப்பாவும் வந்திருக்கிறார்!

★

மீரா!

நான் என்னவென்று விளக்குவேன்? விளக்க ஒன்றும் இல்லை. உன்னை இரண்டாம் முறை சந்திக்க ஆவலாயிருந்தது. புகார் அதிகாரி வருவதாகச் சொல்லி உன்னை வரவழைக்கத் திட்டமிட்டேன். அந்தப் பாவி நிஜமாகவே வந்து விட்டான். நீ கோபத்தில் என்னை ஏதாவது மாட்ட வைத்துவிடப் போகிறாயே என்று தப்பிப் போகச் சொன்னேன். நீ சேலம் வரையிலேயே போய்விட்டாய்.

என் செலவில் சிநேகிதியைப் பார்த்து விட்டு, அப்படியே மாமாவையும், அங்கே இருக்கும் அப்பாவையும் பார்க்கத் திட்டமிட்டாயோ என்று ஒரு லேசான சந்தேகம்; பரவாயில்லை.

எப்போது வருகிறாய்?

உன்
பாஸ்கர்

★

அன்புள்ள பாஸ்கர்,

இதை முன்பே எழுதியிருக்கக் கூடாதா? இன்று காலை வண்டியிலேயே கிளம்பியிருப்பேனே?

உங்கள் அன்புள்ள
மீரா

பின்குறிப்பு : பழ சமாசாரம் மாமாவைக் கேட்டேன். 27-தான் அனுப்பினாராம். மூன்று டஜன் என்று கடிதம் எழுதிப் போட்ட பிறகு, பார்சல் கட்டும்போது பார்த்தாராம். நாலு பழம் ரொம்ப மோசமாயிருந்ததாம்; தூக்கி எறிந்து விட்டாராம். ஐந்து பழம் ரொம்ப நன்றாயிருந்ததாம். அதைத் தனக்கு வைத்துக் கொண்டாராம்.

மீ.

இன்னொரு பி.கு. : ஆயுளுக்கு என் அடிமையாக இருப்பதாக முன்பு எழுதியிருந்தீர்களே? வேலை அளிக்கப் பட்டது. 'ட்யூட்டி'யில் சேரவும்.

★

2. கதாநாய்

ராமகிருஷ்ணன் பி.ஏ.,
29, ராமலிங்கா ஹைரோடு,
சென்னை–30

குமாரி கனகராணி,
92, ராமலிங்கா ஹைரோடு, சென்னை–30.

அம்மணி,

நேற்று நடைபெற்ற வருந்தத்தக்க சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரவே இக்கடிதம் எழுதுவதாகத் தாங்கள் எண்ண வேண்

டாம். எதிர்ப் பங்களாவில் இருக்கும் தங்களுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமென்று நான் பல நாட்களாக ஆசைப்பட்ட துண்டு. பேனாவை எடுத்ததுண்டு. காகிதத்தைப் பிரித்ததுண்டு. அத்தோடு நின்றதுண்டு. நிற்க.

நேற்று நான் என்னுடைய பெரிய நாயுடன் வெளியே வர வும், தாங்கள் தங்கள் நாய்க் குஞ்சுடன் (நாய்க்குஞ்சா, நாய்க் குட்டியா? எது சரி?) தங்கள் பங்களாவை விட்டு வெளியே வரவும் சரியாயிருந்ததை என் பாக்கியமாகவே நினைத்தேன். அதுவே தங்கள் நாய்க் குஞ்சின் துர்ப்பாக்கியமாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. திடீரெனத் தெருவில் புழுதிப் படலம் எழும்ப என் கண்ணை மறைத்ததுதான் எனக்குத் தெரியும். அண்டசராசரங்கள் சண்டை பிடிப்பது போன்ற ஓங்கார, ஊங்கார, ஆங்காரக் கூச்சல் என் செவியைத் துளைத்ததைத்தான் நான் அறிவேன்.

அமளி துமளிகள் அடங்கி, வானமும் வையமும் தெளி வடைந்தபோது, என் கண்கள் கண்ட முதற்காட்சி, தங்களின் வீரத் திருவிழிப் பார்வை; இரண்டாவது காட்சி, தங்கள் நாய்க் குஞ்சின் மரணாவஸ்தை; மூன்றாவது காட்சி, என் பெரிய நாயின் வீராவேசமான வெற்றித் திருத்தோற்றம்.

இந்த மூன்றையும் ஒன்று கூட்டி ஊகித்துப் பார்த்ததில் எனக்கு நிலைமை ஓரளவு புரிந்தது. ஏதும் சொல்லத் தோன்றா மல், உடனே என்னுடைய நாயை இழுத்துக் கொண்டு என் பங்களாவுக்குத் திரும்பி விட்டேன். இந்தச் சம்பவத்துக்காக, என் சார்பிலும் என் நாயின் சார்பிலும் தங்களிடமும் தங்கள் நாய்க் குஞ்சிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் ஏதாவது பதில் கொடுப்பதானால், இதைக் கொண்டு வரும் என் அந்தரங்க வேலையாள் மூலமே அனுப்பலாம்.

இங்ஙனம்

ராமகிருஷ்ணன்

தங்கவேலர்
29, ராமலிங்கா ஹைரோடு,
சென்னை–30.

திரு. லட்சுமணசாமி,
92, ராமலிங்கா ஹைரோடு,
சென்னை–30.

அன்புடையீர்,

வணக்கம். எதிர்ப் பங்களாவில் இருந்தும்கூட, தங்களைச் சந்தித்துப் பேசச் சந்தர்ப்பமே கிட்டவில்லை. ஒரு முக்கிய விஷயமாக இக்கடிதம் எழுதுகிறேன். தங்கள் காரைச் சமீபத்தில் விற்று விட்டதாகவும், கார் இருந்த ஷெட்டை, கிடங்காக வாடகைக்கு விட இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நான் சென்னை நகரத்தின் பிரபல பேப்பர் வியாபாரிகளில் ஒருவன் என்பதைத் தாங்கள் அறிந்திருக்கலாம். எனக்கு, வீட்டுக்குச் சமீபமாக ஒரு கிடங்கு மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. நாளைக் காலை என் மருமான் ராமகிருஷ்ணனைத் தங்களிடம் அனுப்புகிறேன். வாடகை முதலிய விவகாரங்களை அவனிடம் பேசி முடிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்கவேலர்

★

என்னுடைய பங்களாவிலுள்ள கார்ஷெட்டைக் குடக்கூலிக்கு விடும் வகையில் திரு. தங்கவேலர் அவர்களிடம் அட்வான்ஸாக ரூ. 100 பெற்றுக் கொண்டதற்கு இதுவே ரசீது. நாளைக் காலையிலிருந்தே மேற்படி இடத்தை சுவாதீனம் செய்துகொள்ளலாம்.

குமாரி கனகராணி அவர்களுக்கு,

வணக்கம். தங்களுடைய கோபம் இன்னும் முழுதும் தணியவில்லை என்று நினைக்கிறேன். கார் ஷெட் விஷயமாகத் தங்கள் தகப்பனாருடன் நான் பேச வந்தபோது, மடியில் நாய்க் குஞ்சுடன் அமர்ந்திருந்த தாங்கள் அப்படி ஒரு அலறல் அலறிக் கொண்டு ஓடியிருக்க வேண்டாம். தங்கள் நாய்க் குஞ்சிடம் பகைமை பாராட்டுவது என் நாய் தானேயன்றி நானல்லவே? இருந்தாலும், பிற்பாடு தாங்கள் தங்கள் அப்பாவின் கட்டளைக்கு இணங்க எனக்குக் காப்பி கொண்டு வந்து நீட்டியதைப் பாராட்டுகிறேன்; நமக்குள் ஏற்பட்டிருக்கும் அறிமுகம் மேன்மேலும் வரள அளுர...சீ! வளர அளுர.. .சட்!:..வருள அலர... சே! —வளர அருள வேண்டுமென்று ஈசனையும் தங்களையும் வேண்டுகிறேன்.

இங்ஙனம்
ராமகிருஷ்ணன்

★

எதிர்ப் பங்களா இளைஞருக்கு

உங்களுடைய இரண்டு கடிதங்களிலும், உங்கள் நாயைப் பற்றி ஏதோ குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆச்சரியமாயிருக்கிறது. உங்களிடம் நாய் ஏது? ஓனாய்தானே இருக்கிறது!

இன்னொன்று. கார் ஷெட்டு விஷயமாகப் பேசியான பிறகு நீங்கள் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதானே! எதற்காகத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே போனீர்கள்? நான் ஜன்னலருகே நின்று கவனித்துக் கொண்டுதான் இருந்தேன் உங்கள் செய்கையை. இனியாவது உஷாராக இருங்கள்.

கனகராணி

★

கனகா!

படார்! மடார்! டபார்! திகைக்க வேண்டாம். உன் கடிதம் பார்த்து ஆனந்தத்தில் நான் ஊளையிடும் சப்தம் இது. ஆனந் தத்துக்குக் காரணம் என்னவெனில், நான் உன் பங்களாவை விட்டு வெளியேறும்போது நீ ஜன்னலருகே நின்று என்னையே பார்த்துக் கொண்டிருந்தாய் என்ற சேதிதான். பேப்பர் கிடங்கை முன்னிட்டும், சாக்கிட்டும், நான் இனி அடிக்கடி வருவேன், அடுத்த தடவை நீ ஜன்னலுக்கு வெளியே நிற்பதுடன், முடிந் தால் வாசல் வரை வழியனுப்பவும் வருவாய் என்று எதிர் பார்க்கிறேன்.

ராமகிருஷ்ணன்

★

எதிர்பார்க்க வேண்டாம். ஜன்னல் இனிமேல் சாத்தியே இருக்கும்.

கனகராணி

★

அன்புள்ள கனகா,

உன் வேலைக்காரி மூலம் கொடுத்தனுப்பிய துண்டுக் கடிதம் கிடைத்தது. அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு நான் அழுத காட்சியை அவள் சொல்லுவாள்.

ராமகிருஷ்ணன்

★

திரு. ராமகிருஷ்ணனுக்கு,

வேலைக்காரி சொன்னாள். அத்தோடு நில்லாமல், அப் படிச் சொல்வதற்காக அவளுக்குத் தாங்கள் ஒரு ரூபாய் கொடுத்ததையும் சொன்னாள்.

என்னுடைய நாய்க்குட்டியை நான் எங்கே வாங்கி னேன் என்ற விவரத்தையும், அதற்கு லைசென்ஸ் கட்டி யிருக்கிறேனா இல்லையா என்ற விவரத்தையும் நீங்கள் அவ ளிடம் விசாரித்தீர்களாம். இந்த மாதிரி அனாவசியக் கேள்வி களை நான் கட்டோடு வெறுக்கிறேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனகராணி

★

திரு தங்கவேலர் அவர்களுக்கு,

தாங்கள் என் கார் ஷெட்டை எடுத்துக் கொண்ட இந்த ஆறு மாத காலத்தில் எவ்விதப் புகாருக்கும் இடமில்லாது இருந்து வந்திருக்கிறது. தங்கள் மருமான் ராமகிருஷ்ணன், 28–ஆம் தேதியே வாடகைப் பணத்தைத் தர என் வீட்டுக்கு வருவது உலகத்திலேயே கேள்விப்படாத அதிசயம். சில சமயம், 28–ஆம் தேதி வாடகைப் பணம் கொடுத்தது கூட மறந்துபோய் 29–ஆம் தேதி மறுபடி என் வீட்டுக்கு வந்து இன்னொரு முறை வாடகையை நீட்டுகிறார்.

இது நிற்க. சில நாட்களாக என் பங்களாவில் எலி உபத் திரவம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன் இப்படிக் கிடை யாது. ஒருவேளை, தாங்கள் பேப்பர் வைத்திருக்கும் கிடங்கி னால் இருக்குமோ என்று சந்தேகமாயிருக்கிறது. தாங்களும் அதைத் திறந்து நாலைந்து மாதமாகி இருக்கலாம். எனவே, ஒருமுறை அதைத் திறந்து சுத்தம் செய்து, எலிகளை விரட்டி வைத்தால் ரொம்பவும் நன்றியுள்ளவனாயிருப்பேன்.

லட்சுமணசாமி

★

ராமகிருஷ்ணன் என்கிற வஞ்சகருக்கு,

நேரம் இப்போது இரவு பத்து மணி. மாலையிலிருந்து என் சின்ன நாயைக் காணோம். நீங்கள்தான் மாலையில் கிடங்கைத் திறப்பதற்காக வந்தீர்கள். நாய் இன்ஸ்பெக்டரிடம் நாயை ஒப்படைப்பதற்காகக் கடத்திச் சென்று இருக்கிறீர்கள் என்று பலமாகச் சந்தேகிக்கிறேன். உடனே அதைக் கொண்டு வந்து சேர்க்காவிடில் விளைவு விபரீதமாயிருக்கும்.

கனகராணி

★

ராணி!

பன்னிரண்டு மணி நேரம் பொறு. விடியட்டும். விஷயம் புரியும்.

ராமகிருஷ்ணன்

★

ஐயா ராமகிருஷ்ணரே!

விடிந்து ஐந்து மணி நேரமாகிறது. ஒரு விஷயமும் புரியவில்லை. நடுவில் நீங்கள் ஒருமுறை கார் ஷெட்டைத் திறந்து பார்த்துவிட்டுப் போனீர்களே தவிர நாயைப் பற்றி எவ்விதத் தகவலும் தரவில்லை. விளையாடுகிறீர்களா?

க. ராணி

★

அம்மா தாயே!

தயவு செய்து விரட்டாதே. எனக்குப் பைத்தியம் பிடித்து விடும். விஷயம் எனக்கே விளங்காதபோது உனக்கு எப்படி விளங்க வைப்பேன்? நடந்தது இதுதான். நேற்று மாலை என் மாமாவின் உத்தரவுக்கு இணங்க, எலிகளை விரட்ட வேண்டிக்

கிடங்கைத் திறந்தேன். எலிகளாவது எலிகள்! நூற்றுக்கணக்கில் இருந்தன. அவ்வளவையும் எப்படி அழிப்பது என்று நான் விழித்தபோது, உங்கள் சின்ன நாய் — கார் ஷெட்டின் கதவண்டை நின்றிருந்தது — குபீரென உள்ளே பாய்ந்து எலிகளை ஹதம் செய்யத் தொடங்கியது. எனக்குச் சடாரென யோசனை யொன்று பிறந்தது. எலியொழிப்புப் பணியை அதனிடமே ஒப்படைக்கத் தீர்மானித்தேன். அதைக் கிடங்குக்குள்ளேயே வைத்துப் பூட்டிவிட்டுப் போனேன்.

என்ன ஆச்சரியம்! இன்று காலை கிடங்கைத் திறந்தபோது நாயைக் காணோம்! எனக்கு ஏற்பட்ட முதல் பயம் என்னவென்றால், நாய் எலிகளை ஒழிப்பதற்குப் பதில், எலிகள் நாயை ஒழித்துவிட்டனவோ என்பதே. ஆனால், உங்கள் நாயின் சின்னங்கள் — எலும்புக் கூடு, மண்டையோடு எதுவும் — கிடங்கில் இருக்கவில்லை.

பின்னே, கிடங்கில் அடைபட்ட நாய் எங்கு மறைந்தது? எப்படி மறைந்தது? மர்மம், மர்மம், மர்மம்!

ராமகிருஷ்ணன்

★

ராமகிருஷ்ணன் என்ற நபருக்கு,

எனக்குத் துப்பறியத் தெரியாது. ஆனால் போலீசில் புகார் செய்யத் தெரியும். உஷார்!

கனகராணி

★

ராணி, ராணி, ராணி!

மர்மம் விண்டுவிட்டது; ரகசியம் அம்பலமாயிற்று. என்னவென்றால், நான் கிடங்கைப் பூட்டிவிட்டு வந்தேன் அல்லவா? நடுராத்திரியில் என் வேலைக்காரனுக்குச் சந்தேகம் வந்ததாம்,

பூட்டினோமா இல்லையா என்று. உங்கள் பங்களாவுக்கு வந்து பார்த்தானாம். உங்கள் சின்ன நாய் சன்னக் குரலில் குரைப்பது கேட்டதாம். நாய் தவறுதலாக மாட்டிக் கொண்டு விட்டது என்ற எண்ணத்தில், உடனே என் மாமாவிடம் வந்து, சாவியை வாங்கிக் கொண்டு போய்த் திறந்து விட்டானாம். ஹாஹ்ஹா!

ராமகிருஷ்ணன்

★

ரா...

ஹாஹ்ஹா என்ன வேண்டிக் கிடக்கிறது, ஹாஹ்ஹா! என் நாய் என்னிடம் திரும்ப வரவில்லை, இதுவரை. ஹாஹ் ஹாவாம் ஹாஹ்ஹா!

க. ராணி

★

க. ரா.

மர்மம். மீண்டும் மர்மம். மேலும் மர்மம். என் பெரிய நாயைக் காணோம்! உங்கள் சின்ன நாயை எங்கோ பார்த்து விட்டுத் துரத்திக் கொண்டு போயிருக்கிறது என்று அஞ்சுகி றேன். உடனே புறப்படுகிறீர்களா? ஊரெங்கும் சுற்றியாவது தேடிப் பிடிக்கலாம்.

ராமகிருஷ்ணன்

★

ரா...

என்னுடன் ஊர் சுற்றுவதற்காகச் செய்யும் சதியோ என்று சந்தேகம் இருந்தாலும் வருகிறேன். புறப்படத் தயாராயிருக்க வும்.

க. ரா.

★

அன்புள்ள ராமகிருஷ்ணன் அவர்களுக்கு,

வணக்கம். நேற்று நடைபெற்ற சம்பவங்களுக்காக உங்களுக்கும் உங்கள் நாய்க்கும் நன்றி தெரிவிக்கவே இதை எழுதுகிறேன். கடைத்தெரு மூலையில் உங்கள் நாயும் என் நாயும் கட்டிப் புரண்டு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் எனக்குத் தலைசுற்றி மயக்கம் வந்தது வாஸ்தவம் தான். ஆனால் இரண்டு நாய்களையும் நாம் திரும்ப அழைத்து வரும்போது நடந்த நிகழ்ச்சிகள்தான் இன்னும் பெரிய ஆச்சரியம். முதலாவது, நாய் இன்ஸ்பெக்டர் திடீரென எங்கிருந்தோ தோன்றியது. இரண்டாவது, லைசென்ஸ் இல்லாததால் அவர் என் நாயைக் கைப்பற்றியது. மூன்றாவது, அவருடன் —அவர் காலுடன் — போராடி என் நாயை என்னிடம் மீட்டுத் தந்த உங்கள் நாயின் பெருந்தன்மை. இந்த விஷயத்தில் உங்கள் நாய் காட்டிய தியாக புத்தியைப் பெரிதும் பாராட்டுகிறேன். உங்கள் பெரிய நாய் ஆரம்ப முதல் என் சின்ன நாயிடம் நட்புறவு கொள்ளவே முயன்றிருக்கிறது. நாய்கள் நட்பு கொள்வதற்கும், மனிதர்கள் நட்பு கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு போலும். அவைகளின் முதல் சந்திப்பைச் சண்டையெனத் தவறாக எண்ணிய என் மண்டையை என்னவென்று திட்ட!

தயவுபண்ணி நடந்ததை மறவுங்கள்.

உங்கள் அன்புள்ள
கனகராணி

★

என் அன்புள்ள ராணி!

நான் மறக்கத் தயார்தான். ஆனால் இதோ மேஜை மீது கிடக்கும் ஒரு நோட்டீஸ் எனக்கு நினைப்பூட்டுகிறதே! ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் தம் கடமையைச் செய்வதைத்

தடுத்த குற்றத்திற்காக என்னைத் தண்டிக்கப் போகிறார்களாம். பரவாயில்லை. உனக்காக நான் எத்தனை தண்டனையையும் ஏற்பேன். நிற்க.

இதோ சினிமாவுக்குப் போகிறேன். நீயும் வருவாயா — நாயின்றி.

ராமகிருஷ்ணன்

★

ரா,

வந்து கொண்டேயிருக்கிறேன்.

க.

★

3. கொஞ்சம் இரு

எதிர் வீட்டு இளைஞரே!

திருவாளர் முனுசாமி இந்தத் தேர்தலில் தோற்றுப் போனால், மீசையை எடுத்து விடுவதாகத் தாங்கள் என் தந்தையிடம் கூறியது நினைவிருக்கும் என்று நம்புகிறேன்.

மீசையை எடுத்து விட்டீர்களா என்று அறிய
ஆவலாயிருக்கும்
அனசூயா

★

மிஸ். அனசூயா அவர்களுக்கு,

தங்கள் கடிதத்தின் அடியில் 'அனசூயா' என்றே கையெழுத்து காணப்பட்டதைக் கண்டு நான் அடைந்த திகைப்பு கொஞ்ச நஞ்சமல்ல; திருமதி அபிராமியம்மாள் தோற்றுப் போனால், பெயரை மாற்றிக் கொள்ளுவதாகக் கூறியவராயிற்றே தாங்கள்? முனுசாமியும் தோற்றார். அபிராமியம்மாளும் தோற்றார். தங்கள் பெயரைப் போலவே என் மீசையும் பத்திரமாகவே இருக்கிறது.

இங்ஙனம்
ஜயராம்

பி.கு. : தேர்தல் சீசன் இருந்த வரையில், அதைச் சாக்கிட்டுத் தங்கள் தந்தையுடன் விவாதிக்கத் தங்கள் வீட்டுக்கு வர வசதியாயிருந்தது. இனி என்ன செய்வது? தங்கள் தகப்பனாருக்கு அரசியலைத் தவிர வேறு என்னென்ன துறைகளில் ஆர்வம் அதிகம் என்பதற்கு ஒரு பட்டியல் தர முடியுமா?

ஜ.

★

திரு. ஜயராம் அவர்களுக்கு,

அப்பாவுக்கு என்னென்ன விஷயங்களில் அக்கறை என்பதைத் தெரிந்து கொண்டாவது தாங்கள் இங்கு வர விரும்புவதன் நோக்கம் புரியவில்லை. இருந்தாலும் சொல்லி வைக்கிறேன். அரசியலுக்கு அடுத்தபடியாக அவருக்குப் பிடித்த விஷயம் பட்டாணி; ஆம், பட்டாணி. தமிழ்நாட்டில் மிகப் பெரிய பட்டாணிக் கடலை வியாபாரிகளில் என் அப்பாவும் ஒருவர்.

இப்படிக்கு
அனசூயா

★

அன்புள்ள அனசூயா!

தாங்கள் அளித்த குறிப்புக்கு மிக்க நன்றி. ஆயினும் அது எனக்கு அதிகமாக உதவவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மிகச் சிரமப்பட்டு, பட்டாணியைப் பற்றிய விவசாய விவரங்களையும், மார்க்கெட் நிலவரங் களையும் மனப்பாடம் செய்து கொண்டு தங்கள் தந்தையைச் சந்தித்தேன்.

தேர்தல் முடிவுகளைக் குறித்த விவாதம் முடிவடைந்த தும், ''பட்டாணி மார்க்கெட் போடு போடென்று போடுகிறதே?'' என்று தொடங்கினேன். தங்கள் தந்தையார் ஏனோ திகைத் தார். நான் விடவில்லை. சின்னப் பட்டாணிக்கும் பெரிய பட்டாணிக்கும் வறுத்த பட்டாணிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிச் சவிஸ்தாரமாகப் பேசினேன். ஒரு மூட்டைப் பட்டாணியில் அரை மூட்டைக் கல்லைச் சேர்த் தால் என்ன ஆதாயம் கிடைக்கும் என்பதை உற்சாகமாக விவாதித்தேன்.

நான் பேசப் பேச அவர் விழித்துக் கொண்டே போனார். வறுத்த பட்டாணியிலிருந்து உறிக்கும் தோலைக் கொண்டு கம்பளம் நெய்ய முடியுமா என்ற கட்டத்துக்கு நான் வந்த போது, அவர் ஒரு சின்ன கேள்வி கேட்டார், 'பட்டாணியின் மீது உங்களுக்கென்ன இத்தனை மோகம்?' என்று.

அம்மணி அனசூயா! தலையில் அடித்துச் சொல்லுங்கள் — உங்கள் தந்தைக்கும் பட்டாணிக்கும் சம்பந்தம் உண்டா, இல்லையா?

பித்துக்குளி
ஜயராம்ஜி

பி.கு. : உங்களுக்காக மீசையைத் தியாகம் செய்து விட்டேன்.

★

ஜயராம் ஸார்!

உங்களுக்கும் ஸ்காட்லாந்து நாட்டுக் காளை மாட்டுக்கும் ஏதேனும் உறவு உண்டா? அதே உறவுதான் என் அப்பாவுக்கும் பட்டாணிக்கும். அதாவது : 0.

நீங்கள் அப்பாவிடம் அடிக்கிற அரட்டையும், குறுக்கும் நெடுக்குமாக என்னைப் பார்க்கும் திருட்டுப் பார்வையும் எனக்குச் சகிக்கவில்லை. இனி நீர் என் வீட்டு வாசற்படி ஏறாமலிருக்கச் செய்த சூழ்ச்சியே மேற்படி பட்டாணிக் கதை.

இன்று காலை, தோசையை விழுங்கிக் கொண்டிருந்த போது என் அப்பா என்ன சொன்னார் தெரியுமா? ''அந்த எதிர் வீட்டுப் பையனைப் புத்திசாலி என்று நினைத்திருந்தேனே? சுத்த மடத்தனம்!'' என்றார். ஏன் என்று கேட்டேன்.

''சம்பந்தமில்லாமல், பட்டாணியைப் பற்றி மணிக்கணக்கில் பேசுகிறான். மூளை ஒரு தினுசோ என்று தோன்றுகிறது'' என்று வருந்தத்தக்க அபிப்பிராயத்தை வெளியிட்டார் என் அப்பா.

ஆக, என் சூழ்ச்சி வென்றது.

உம்மை வென்ற
அனசூயா

★

ஹம்மா ஹனசூயா!

ஹாஹ்ஹா! நீயா என்னை வென்றாய்? மெத்தத் தவறு, பெண்ணே. சுத்தத் தவறு. உன்னை நான் வென்றேன். இன்று முதல் உன் தந்தை என் கைப்பம்பரம். ஆட்டுவித்தார் ஆரொருவர் ஆடாதாரே?

சற்று முன்பு உயர்திரு சொக்கநாதர் (உன் தந்தை) என்னைத் தேடிக் கொண்டு வந்தார். என் மூளையைப் பரிசோதிக்க

அல்ல; என் கையில் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தை ஒப் படைக்க.

விழிக்காதே, திகைக்காதே, வேதனைப்படாதே! விவரம் இதோ:

ரொம்ப நாளாக அவர் பெட்டியிலே அந்த ரூபாய் தூங்கி வருகிறதாம். அது விழித்துக் கொண்டு குட்டி போட என்ன செய்யலாம் என்று யோசனை பண்ணிப் பண்ணி அலுத்துப் போய் விட்டு விட்டாராம்.

நான் பட்டாணியைப் பற்றிப் பாரதம் பாடியது மெல்ல மெல்ல அவர் உள்ளத்தில் புகுந்து வேலை செய்யத் தொடங்கி யிருக்கிறது. பட்டாணி பற்றி இவ்வளவு 'அறிவு'ள்ள என் னிடம் மேற்படி தொகையைக் கொடுத்து, பட்டாணி பிசினஸ்(?) நடத்தச் சொன்னால் என்ன என்று அவருக்குத் தோன்றிற்று. வந்தார்; கேட்டார்; சம்மதித்தேன்.

ஹே அனசூயா! இனி நானும் உன் தந்தையும் தொழில் முறைப் பங்காளிகள், உன் வீட்டு வாசற்படியில் ஏறுவேன்; நிற்பேன்; உட்காருவேன்; படுப்பேன்; புரளுவேன். என்னை யாரும் கேட்க முடியாது.

பட்டாணி பூஷண்
ஜயராம்

★

ஜயராம்! ஐயோ ஜயராம்!

என்னை மன்னியுங்கள்; விளையாட்டுக்காகக் குறும்பு பண்ணினேன். நிஜத்தில் உங்களை எனக்குப்... உங்கள் மீது எனக்கு ஒரு கோபமும் இல்லை. தயவு செய்து எப்படியாவது அப்பாவின் திட்டத்தைக் கவிழுங்கள். அந்த ஐம்பதாயிரம் ரூபாய் எனக்காக வைத்திருப்பதாக இத்தனை நாளும் சொல்லி

வந்திருக்கிறார் அப்பா. நான் டாக்டருக்குப் படிக்க ஆசைப் படுகிறேன். அதற்கே இந்தத் தொகை என்று உறுதி கூறியிருந் தார். என் ஆசையைக் கொறித்துக் கொல்லாதீர்கள். புண்ணி யம் உண்டு. உங்கள் பதில் கிடைக்கிற வரையில் படக்படக் கென்று அடிக்கும் இதயத்துடன்,

உங்கள் அன்புள்ள
அனசூயா

★

அனசூயா,

வேலை அதிகம் - பட்டாணிப் படிப்பு மும்முரம் — தொந்தரவை விரும்பவில்லை — மன்னிக்க.

ஜ.

★

அன்புள்ள ஜயராம்!

இப்படிப் பிடிவாதம் பிடித்தால் என்னால் என்ன ஆவது? வீட்டுக்கு வந்த போதெல்லாம் நோட்டம் பார்த்தீர்களே நான் இருக்கிறேனா என்று, அது பொய்யா? நான் சிரித்தால் சிரித் தீர்களே, அது பொய்யா? நான் எழுந்தால் எழுந்தீர்களே, உட் கார்ந்தால் உட்கார்ந்தீர்களே, பார்த்தால் பார்த்தீர்களே, அதெல் லாம் பொய்யா? சுருங்கச் சொன்னால், என்னை நீங்கள் காத லிப்பதாக எண்ணியிருந்தேனே அது அடியோடு பொய்யா?

அழுத கண்ணும், சிந்திய மூக்குமாக
அனசூயா

★

அனு!

கண்ணையும், மூக்கையும் துடைத்துக் கொள் முதலில்.

இந்த ஜயராமைப் பற்றி எனக்குத் தெரியாதா? என்னிடம் பணத்தைக் கொடுத்துப் பட்டாணியில் போடச் சொன்

வதும், பசிபிக் மகா சமுத்திரத்தில் போடச் சொல்வதும் ஒன்றே. ஆகவே, ரூபாய் விவகாரத்தில் இறங்க மாட்டேன்.

இனி உன் அப்பா வந்தால், பட்டாணியைப் பற்றிப் பேச்செடுக்க மாட்டேன்; வைத்தியத் தொழிலைப் பற்றியும் அதன் மேன்மையைப் பற்றியும் மட்டுமே பேசுவேன், பெண்கள் டாக்டராக வருவதால் சமூகத்துக்கு என்னென்ன நன்மைகள் உண்டு என்று விளக்குவேன். ஒரே நாளில் மனம் மாறுவார்; அஞ்சேல்.

உன் அன்பன்
ஜயராம்

பி.கு. : இன்று பௌர்ணமி. கடற்கரை அற்புதமாயிருக்கும். எதையுமே தனியாக அனுபவிப்பதென்றால் எனக்குப் பிடிக்காது.

★

அன்புள்ள நண்பரே!

கட்டாயம் வருகிறேன், கடற்கரைக்கு. அதற்குமுன் ஒரு வார்த்தை. திடுமென்று பட்டாணியை விட்டு, திடுப்பென்று வைத்தியத்தைப் பிடித்துக் கொள்ளாதீர்கள். அன்றொரு நாள் என் அப்பா மனத்தில் முளைத்த விபரீத சந்தேகம் மீண்டும் எழும். உங்கள் கையில் பணத்தை மட்டுமின்றி, பெண்ணையும் ஒப்படைக்கக் கூடாதென்று தீர்மானித்து விடுவார். மெதுவாக, ஜாக்கிரதையாக அவர் எண்ணத்தை மாற்ற வேண்டும்.

திட்டம் வகுக்க நிலவொளி துணை செய்வதாக!

தயாராயிருங்கள். ஐந்தரை மணிக்கு வந்து கூப்பிடுகிறேன்.

அனசூயா

★

அனு! அன! அனா!

என்ன மர்மம் இதெல்லாம் ஒன்றும் புரியவில்லையே?

நேற்று மாலை நீ வந்தாய் என் இல்லத்துக்கு. இந்திரசபை நடனத்தில் மேக்கப் செய்து கொண்ட ரம்பையாய்க் காட்சி அளித்தாய். அப்போது உன் கரத்தில் ஒயிலாடிய பை போல என் உள்ளம் மையலாடிற்று. அதுவரை நினைவிருக்கிறது.

கோட்டுக்கு மடிப்புப் போட்டுக் கொண்டிருந்த நான், பெட்டியடியில் கை வைத்தேனா, 'ப்ளக்'கைப் பிடுங்கு கையில் மின்சாரத்தோடு உறவாடினேனா, அல்லது அழகு உருவைக் கண்டு கண் குருடானேனா, எதுவென்று தெரிய வில்லை. படாரென்று மண்டையில் அடித்தாற்போல் விழுந் தேன் கீழே. அவ்வளவே அறிவேன்.

விழித்துப் பார்க்கையில், உன் அப்பா விசிறிக் கொண் டிருந்தார் எனக்கு. அது கூட வியப்பில்லை. ''பட்டாணி மார்க் கெட் போனால் பத்தாயிரம் மார்க்கெட்! அலட்டிக் கொள்ளாதே, தம்பி!'' என்றாரே, அந்தக் குறளின் விரிவுரை என்ன? ''பிசினஸ் சமாசாரமே இப்படித் தானப்பா'' என்று நீ கூடப் பாடினாயே அதன் பொருள் என்ன?

உன்னே
ஜயராம்

★

அன்பரே!

சுபம்! சுபம்! சுபம்!

நேற்று நான் வந்தபோது என்னைப் பார்த்தபடி, 'ப்ளக்' கின் இடுக்கில் கை வைத்து விட்டீர்கள். 'ஷாக்' அடித்து விழுந்தீர்கள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன்.

ஓடினேன் அப்பாவிடம். உங்கள் வீட்டுப் பக்கம் சென்று கொண்டிருந்த போது, ''ஹா! பட்டாணி மார்க்கெட் திவாலாகி

விட்டதா! பதினையாயிரம் போச்சா?'' என்று நீங்கள் அலறியதைக் கேட்டதாகவும், தடாலென்று நீங்கள் விழுந்ததை ஜன்னல் வழியே பார்த்ததாகவும் கூறினேன். ஓடி வந்தார் அப்பா. பார்த்தார்.

அந்தக் கணமே, பட்டாணி மார்க்கெட்டின் நிலையற்ற தன்மையைப் பற்றிய ஞானோதயம் ஏற்பட்டு விட்டது. ''நல்லவேளை! ஐம்பதாயிரம் ரூபாய் தப்பிற்று!'' என்றார்.

அந்தக் கருத்து மேலும் மேலும் உறுதிபட, நீங்கள் மேலும் மேலும் நன்றாக நடிக்க வேண்டும். இன்னும் நாலு நாளைக்குப் படுக்கையிலேயே கிடவுங்கள்; 'பட்டாணி, பட்டாணி' என்று வாய் ஓயாமல் புலம்புங்கள்.

அனசூயா

★

அனு!

நீ சொன்னதோடு நிறுத்திக் கொள்ளவில்லை என் நடிப்பை. அப்பாவுடன் நீ வந்து பணிவிடை செய்த போதெல்லாம், 'வைத்தியத் தொழிலுக்கும் பெண் பிறவிக்கும் என்ன பொருத்தம்!' என்றேன்; 'நோயைக் குணமாக்குவதில் பெண்ணுக்குத்தான் முதலிடம்' என்றேன். உன் அப்பா, ''பின்னே தெரியாமலா என் பெண்ணை டாக்டருக்குப் படிக்க வைக்கவிருக்கிறேன்?'' என்றார்.

ஜயராம்

பி.கு. : நாளை கடற்கரைக்குச் செல்ல உத்தேசம். பௌர்ணமி சந்திரனைவிடப் பிறைச் சந்திரன் அதிக அழகாயிருக்கும் — உன் அருகிலிருந்து காணும் போது.

ஜ.

★

4. இந்தப் பிரேம மாலாவையா ஏமாற்ற முடியும்?

மிஸ்டர் உதய குமார்!

பா.பா.உ.போ.ஒ.ஆ.பா.இ.

அதாவது, 'பார்த்தாலும் பார்த்தேன் உங்களைப் போல ஒரு ஆளைப் பார்த்தது இல்லை' என்கிறேன். உலகத்திலே எல்லோரும்தான் பங்களா கட்டுகிறார்கள். எல்லோரும்

தான் வாசலில் ஒரு கூர்க்காவையோ வாட்ச்மேனையோ அல்சேஷனையோ வைக்கிறார்கள். ஆனால் உங்களைப் போல ஒரு கொள்ளிவாய்ப் பிசாசையோ, ரத்தக் காட்டேரியையோ குட்டிச் சாத்தானையோ யாரும் நிறுத்தி வைப்பதில்லை.

உங்கள் கம்பெனியில் ஸ்டெனோ வேலைக்கு ஆள் தேவை என்று பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தீர்கள். விண்ணப்பம் போட்டேன். ஷெனாய் நகரில் உள்ள உங்கள் பங்களாவுக்கு நேரில் வந்து சந்திக்கும்படி எழுதினீர்கள். நேற்றுக் காலை வந்தேன்.

காம்பவுண்டைத் தாண்டியதுமே உள்ள வாட்ச்மேனின் அறையில் ஒரு கூர்க்காக் கிழவன்தான் இருப்பானென்று எதிர் பார்த்தேன். ஆனால் என்ன ஏமாற்றம்! பாண்ட்டும் டையுமாக ஒரு திமிர் படித்த இளைஞன்தான் அங்கே இருந்தான். ''என்ன வேண்டும்?'' என்று பெரிய எம்.எல்.ஏ. மாதிரி அதிகாரமாய் என்னைக் கேட்டான். நானும் சளைக்காமல் பெரிய மந்திரியைப் போல, ''ஸாரைப் பார்க்க வேண்டும்'' என்றேன்.

''ஸாருமில்லை மோருமில்லை,'' என்றான். ''உமது மோரை நீரே குடியும். ஸார் வரச் சொல்லியிருப்பதால்தான் வந்திருக்கிறேன்,'' என்றேன். ''இப்போது மிஸ்டர் உதய குமார் ரொம்பக் கோபமாய் இருக்கிறார். பேசாமல் திரும்பிப் போய்விடுங்கள்'' என்றான் அந்தத் திமிர் பிடித்தவன். 'தயவு பண்ணி உள்ளே போய்ச் சொல்லுங்கள்' என்று எவ்வளவு கெஞ்சியும் நடக்கவில்லை.

'சீ! என்ன பெரிய மனுஷன்!' என்று உங்களைத் திட்டிக் கொண்டே வீடு திரும்பினேன். பின்னே, ஆள் அழகாய் இருக் கிறான் என்பதற்காக எந்த வேலையில் வேண்டுமானாலும் உட்கார்த்தி வைத்து விடுவதா?

எனக்கு ஸ்டெனோ வேலை கிடைக்காவிட்டால் போகட்டும். முதலில் அந்த ஆளை உங்கள் பங்களா வாசலிலிருந்து கிளப்புங்கள்.

இங்ஙனம், பரிதாபத்துடன்
பிரேம மாலா

பின்குறிப்பு : இன்னொரு அக்கிரமம் : வருகிற விசிட்டர்கள் யார், என்ன காரியமாய் வந்திருக்கிறார்கள் என்பதை உங்களிடம் குறித்து அனுப்புவதற்காக அந்த வாட்ச்மேனின் அறையில் ஒரு காகிதக் கட்டு இருப்பது தெரியுமா? மிக உயர்ந்த காகிதம். அதிலே ஒன்றை எடுத்து, மடித்துக் கிழித்துக் கப்பல் பண்ணிக் கொண்டிருந்தார் அந்த ஆள்.

★

குமாரி பிரேம அவர்களுக்கு,

வ.ப. அதாவது, வணக்கம் பல.

வில் யூ பி வெல்? அதாவது நீங்கள் நன்றாயிருப்பீர்களா என்று கேட்கிறேன்.

மிஸ்டர் உதயகுமாரின் பங்களாவில் வாட்ச்மேனாக இருந்தவன் நான்தான். பி.ஏ. பாஸ் பண்ணியும்கூட ஒரு வேலையும் கிடைக்காமல் திண்டாடியபோது, 'வாட்ச்மேனாக வேண்டுமானால் வேலை பார்க்கிறாயா?' என்று ஒருநாள் உதயகுமார் கேட்டார். அஸிஸ்டெண்ட் வாட்ச்மேனாகக்கூட இருக்கத் தயார் என்று சொன்னேன். வேலை தந்தார்; பார்த்து வந்தேன்.

எங்கிருந்துதான் நீங்கள் வந்தீர்களோ, என்னைப் பற்றிப் புகார் செய்ய? நான் உங்களை உள்ளே அனுமதிக்காததையும், உயர்ந்த காகிதத்தில் கப்பல் பண்ணியதையும் ஒரு பிரமாத குற்றமாக நீங்கள் எழுதப் போக, அதை அந்த மூளையில்லாத

உதயகுமார் பெரிதாக எடுத்துக் கொண்டு, என்னை வேலையி லிருந்தே நீக்கி விட்டார்.

போன ஜன்மத்தில் என்ன பாவம் செய்தீர்களோ, இப் போது வேலைக்கு லாட்டரி அடிக்கிறீர்கள். இந்தப் பிறவியில் இப்போது செய்துள்ள பாவத்துக்கு உங்களுக்கு என்னதான் நேராது?

தெருத்தெருவாய்த் திண்டாடிக் கொண்டிருக்கும்
மதன்மோகன்

★

அன்புள்ள மதன்மோகன்,

எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம் செய்துவிட்டேன் நான்! என்னை மன்னிப்பீர்களா மிஸ்டர் மதன்மோகன் மாளவியா? நான் ஓர் அவசரக்காரி. ஆத்திரக்காரி. அக்கிரமக்காரி. இன்னும் என்னென்னவோ காரி. உங்களைப் பற்றி தாறுமாறாய் எழுதி விட்டேன். ஆனால் உதயகுமார் உங்களைக் கூப்பிட்டு இரண்டு திட்டுத் திட்டுவார் என்றுதான் நினைத்தேனே தவிர, வேலையை விட்டே தள்ளுவார் என்று ட்ரீமிலும் நினைக்கவில்லை. ஐயோ! வேலையில்லாப் பட்டாளத்தில் உங்களுக்கும் ஓர் இடமா? கதைகளில் வருகிற மாதிரி கால் வயிற்றைக் கழுவக் கஞ்சி தானே கிடைக்கும்? பாக்கி முக்கால் வயிற்றை எதைக் கொண்டு கழுவுகிறீர்களோ?

என்னால் நேர்ந்த கஷ்டத்தை நானே தீர்ப்பதென்று தீர் மானித்திருக்கிறேன். இனிமேல், எனக்கு எங்கிருந்து என்ன இன்டர்வியூ அழைப்பு வந்தாலும் அதை உங்களுக்குக் காட்டு கிறேன். நீங்கள் முதலில் அங்கே செல்லுங்கள். வேலை கிடைத்தால் ஏற்றுக் கொள்ளுங்கள்.

அழுத கண்ணும் கேவிய தொண்டையுமாக
பிரேமமாலா

அன்புள்ள பிரேமமாலா,

உன் தியாக புத்தி என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டது. மாட்டேன், ஒரு நாளும் உனக்கு வரும் வேலையை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீ எங்கிருந்தாலும் வாஆஆஆ ஆழ்க!

மதன்மோகன்

★

மதன்மோகன்!

இல்லை, இல்லை. என் யோசனையை நீங்கள் ஏற்கத் தான் வேண்டும். என் ஒன்றேமுக்கால் டஜன் வயதில், உங்களைப் போன்ற உழைப்பை உயர்வாக நினைக்கும் உத்தமர்களைப் பார்த்ததில்லை. ('உழைப்பின் தோல்வி' என்று ஒரு சிலை வைத்தால் அதற்கு உங்களை மாடலாக ராய் சௌத்ரி வைத்துக் கொள்வார்.) பி.ஏ. பட்டதாரியாக இருந்தும் வாட்ச்மேன் வேலை பார்த்தீர்களே, ஆகா! உங்கள் பெருமையே பெருமை! மிஸ்டர் மதன்மோகன், என் அழைப்பைத் தட்டாமல் ஒருமுறை என் வீட்டுக்கு வாருங்கள்.

நெஞ்சுருகி நிற்கும்
பிரேமமாலா

★

அன்பே பிரேமமாலா!

உன்னை மறந்தாலும் உன் வீட்டு அடையை மறக்க மாட்டேன். ஹா! என்ன உறைப்பு, என்ன மணம்! தொண்டையிலேயே நிற்கிறது, பிரேம்!

கோபமாலா!

சோகமாலா!

புயல்மாலா!

பூகம்பமாலா!

உன் அம்மாவிடம் என்னை நீ எவ்வளவு உயர்வாக அறிமுகம் செய்து வைத்தாய்! நான் மூன்று அடைகள் முழுங்கிய பின்னரும் நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு, உன் தட்டிலிருந்து பாதியை விண்டு, ரகசியமாக எனக்குப் போட்டுவிட்டுக் கண்ணையும் சிமிட்டினாயே, அந்த இன்ப நினைவைக் கண்முன் நிறுத்திய வண்ணமே நான் என் இறுதிப் பயணத்தைக் கூட இன்முகத்துடன் முடிப்பேன்.

வேலை தேடுவதற்காக எந்த மெரினாவுக்கும் எந்தத் தியேட்டருக்கும் எந்தப் பார்க்குக்கும் உன்னுடன் வரச் சித்தமாக இருக்கிறேன்.

உன்
மதன்மோகன்

★

மதன்மோகன் என்று தப்பாகப் பெயர் வைத்துக்
கொண்டிருக்கும் மோசடி மோகனுக்கு,

உமது வேஷம் கலைந்து விட்டது! இனி ஏமாற மாட்டேன்.

என் வீடு இருக்கும் தெருக் கோடியில் கூட இனி உமது நிழல் படவேண்டாம். பட்டால் நிழலும் இருக்காது. நீங்களும் இருக்க மாட்டீர்கள்!

பிரேமமாலா

★

கோப மாலா! குமுறல் மாலா!
எரிமலை மாலா! புயல் மாலா!

என்ன வந்தது திடீரென்று? கன்றின் குரல் கேட்ட பசு போல, நீ எங்கே அழைத்துப் போனாலும் வந்தேனே? என்ன

உளறச் சொன்னாலும் 'டிட்டோ'னேனே? எந்தச் சந்தர்ப்பத்தில் யாது பிழை புரிந்தேன்?

திடுக்கிட்ட
மதன்மோகன்

★

என்னையா கேட்கிறீர் மதன்மோகனரே?

சட்! பத்தாயிரமாம் பசலிக் கதைகளில் வருகிற மாதிரி அல்லவா ஆகிவிட்டது உங்கள் சமாசாரம்? அன்றைக்கு, மிஸ்டர் உதயகுமாரின் பங்களாவில், வாட்ச்மேனின் அறையில் உங்களைப் பார்த்ததும் நீர்தான் வாட்ச்மேன் என்று நானாக முடிவு கட்டிவிட்டேன். பி.ஏ. பட்டதாரியான நீங்கள் வாட்ச்மேன் வேலை பார்க்கிறீர்களே என்று தப்பாக நினைத்து என் மனசிலும் ஓர் இடம் கொடுத்து விட்டேன்.

மிஸ்டர் பொய்ரத்னா! உமது குட்டு வெளிப்பட்டு விட்டது.

தற்செயலாக அன்று, நான் மட்டும் தனியே போய்க் கொண்டிருந்தபோது, மவுண்ட் ரோடில் உங்களைக் கண்டேன். எதிலே? காரிலே? என்ன காரிலே? எழுதப்பட்ட காரிலே! என்ன எழுதப்பட்ட காரிலே? 'உதயகுமார் அண்ட் கோ' என்று எழுதப்பட்ட காரிலே! யூனிபாரம் போட்ட டிரைவர் ஓட்ட, நீர் கால்மீது கால் போட்டுக் கொண்டு சாய்ந்திருந்த காட்சியை என் ஆயுளுக்கும் மறவேன்!

என்ன நெஞ்சழுத்தம் உமக்கு! நினைத்துப் பார்த்தால் எனக்கல்லவா மாரடைப்பு ஏற்படுகிறது! உம்முடைய பணக்கார ஜம்பத்தைக் காட்டினால் இந்தப் பிரேமமாலா ஏமாற மாட்டாள் என்றுதானே, உண்மையை மறைத்து வைத்திருந்தீர்கள்? என்னவோ தற்செயலாக வாட்ச்மேனின் அறைக்கு வந்திருந்த உங்களை நான் வாட்ச்மேனாக்கும் என்று நினைக்க,

அதை உமக்குச் சாதகமாக்கிக் கொண்டு என்ன சாமர்த்திய மாய் ஏமாற்றி விட்டீர்கள்!

அபலை
சோகமாலா

★

அசட்டு மாலா!

ஒரு விஷயத்தைப் பார்த்த மாத்திரத்தில் டாண் டாணென்று தப்பான முடிவுக்கு வருவதில் உனக்கு நிகர் நீயே.

உண்மை வாட் எனில் :

உதயகுமார் அண்ட் கம்பெனியில் வேலை பார்க்கும் பல பேர் எனக்குச் சிநேகிதர்கள். பங்களாவின் வாட்ச்மேன் என் தோழன். (அதனால் என்னைக் கொஞ்சம் இருக்கச் சொல்லி விட்டு சாப்பாட்டுக்குப் போவான். அப்படித்தான் அன்று நான் இருந்தபோது நீ வந்தாய்.) உதயகுமாரின் ஆபீசில் டெஸ் பாட்ச் குமாஸ்தா என் நண்பன். (ஆகவே, நிறையக் கடிதங்கள் இருக்கும்போது என்னைக் கொஞ்சம் பிரிக்கச் சொல்வான். அப்படித்தான் உதயகுமாருக்கு நீ எழுதிய உன் முதல் கடி தத்தைப் படித்து, பதிலும் எழுதினேன்.) உதயகுமார் கம் பெனி கார் டிரைவர் என் தோஸ்து. (அதனால் ஓசியில் எனக்கு லிஃப்ட் கொடுப்பான். அப்படித்தான் என்னை மவுண்ட் ரோடில் நீ பார்த்தாய்.)

மற்றபடி, நான் உண்மையில் ஒரு வேலையில்லாப் பட்ட தாரிதான்.

அழுது கொண்டே
மதன்மோகன்
(சத்தியமாய் இதுவே என் பெயர்)

★

ஹா மதன்! ஹா மோகன்!

பெண் புத்தி சேஃப்டி பின் புத்தி என்பார்களே, எவ்வளவு உண்மையாகி விட்டது! ஆத்திரத்தில் அறிவிழந்து போனேனே! உதயகுமார் அண்ட் கோவிலிருந்து உங்களுக்கு வேலைக்கு ஆர்டர் வந்திருந்தது. நீங்கள் செய்கிற இன்னொரு மோசடி என்று நினைத்து, மகா ஆத்திரமாய்க் கிழித்து, உதயகுமார் வீட்டு வாசலில் கொண்டு போய்ப் போட்டு விட்டேனே! ஐயோ! ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் எக்ஸட்ரா எக்ஸட்ரா.

பிரேமமாலா

★

பிரேம்!

உடனே வர், உதயகுமாரின் வீட்டுக்கு! வீட்டு வாசலில் உள்ள குப்பைத் தொட்டியை ஆராய்வோம்.

மதன்மோகன்

★

மதன் டியர்!

என்னென்ன ஆச்சரியங்கள் உலகில் நிகழ்கின்றன! உதய குமார் பங்களா வாசலில் இடப்புறமுள்ள குப்பைத் தொட்டியை நீங்களும், வலப்புறமுள்ள கு.தொ.யை நானும் ஆளுக்கொரு குச்சியுடன் கிளறிக் கொண்டிருக்கையில் உள்ளேயிருந்து காரில் உதயகுமார் (முக்கால் சதம் போட்ட கிழம்) வர, நம்மைப் பார்க்க, திகைக்க, காரை நிறுத்தி விசாரிக்க, நாம் சொல்ல, அவர் பரிதாபப்பட, இரண்டு பேருக்குமே வேலை போட்டுத் தர, நாம் ஒருவரை ஒருவர் கட்டிக் கொள்ள, கூத்தாட....

நம்பவே முடியாத

பிரேமமாலா

பி.கு.: இந்த வெற்றியைக் கொண்டாட சினிமாவுக்குப் போவதா, மெரினாவுக்கா?

5. சிவகாமியின் சப்தம்

15, க.க.க. கண்ணன் தெரு,
தி. நகர்.

பஞ்சாமித் தாத்தா,
மே/பா "சம்சாரி"
சென்னை.

ஐயா,

தாங்கள் 'சம்சாரி' மாத இதழில் எழுதிவரும் 'தாத்தாவைக் கேளுங்கள்' என்ற பகுதியைத் தவறாமல் படித்து வருபவர்

களில் நானும் ஒருத்தி. பல குடும்பப் பிரசினைகளைத் தீர்ப்ப தாக எண்ணிக் கொண்டு தாங்கள் கூறிவரும் யோசனை களைப் பின்பற்றி நான் ஏமாந்ததுண்டு. உதாரணமாக நாலு இதழ்களுக்கு முன் 'மூட்டைப் பூச்சியை ஒழிக்க மூன்று வழி கள்' கூறியிருந்தீர்கள். அந்த மூன்று வழிகளையும் கையாண் டேன். இப்போது எனக்கு ஒரே ஒரு சந்தேகம்தான். அக்கட்டுரை யின் தலைப்பு 'ஒழிக்க'வா? அல்லது 'வளர்க்க'வா? அதேபோல், வீட்டிலேயே ஒரு புதிய கூந்தல் டானிக் தயாரித்துக் கொள் ளும் முறைகளை இன்னோர் இதழில் எழுதியிருந்தீர்கள். அந்தத் தைலத்தை இப்போது என் விரோதிகளுக்குப் பலமாகச் சிபாரிசு செய்து வருகிறேன்.

இதெல்லாம் பரவாயில்லை. போன இதழில் வெளி யான, 'கொய்யாக்காய் ஊறுகாய்' தயாரிப்பது பற்றிய குறிப்பு என் மானத்தை வாங்கி விட்டது. அதுவும் என் பிறந்தநாள் விருந்துக்காகக் கூடியிருந்த உற்றார் உறவினர்களுக்கு அதைப் போட, அவர்களை நான் படுகொலை செய்வதற்காகவே அந்த விருந்தை ஏற்பாடு செய்ததாக எண்ணிக்கொண்டு விட் டார்கள். காரமாவது காரம்! எமன் கூட அந்த ஊறுகாயை நாக்கில் வைக்க அஞ்சுவான். இத்தனைக்கும், தாங்கள் குறிப் பிட்டிருந்ததுபோல் கச்சிதமாக ஒன்றேகால் கிலோ மிளகாய் தான் போட்டிருந்தேன்.

தங்கள் குறிப்புகளினால் என்னைப் போல இன்னும் எத்தனையோ அப்பாவிகள் படாதபாடு பட்டிருப்பார்கள். பட்டது போதும். உடனே தங்கள் பகுதியை நிறுத்துங்கள்.

சிந்திய மூக்கும் எரிந்த கண்ணுமாய்
சிவகாமி

★

திருமதி சிவகாமி அவர்களுக்கு,

வணக்கம். என் தாத்தா உயர்திரு பஞ்சாமி அவர்களின் சார்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன். அவருக்குக் கண் பார்வை சரியில்லாதிருப்பதால் அவருடைய கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளும் வேலை என்னுடையது.

கொய்யாக்காய் ஊறுகாயினால் தங்களுக்கு நேர்ந்த அனுபவத்தை அறிந்து தாத்தா வருந்தினாலும், தவறு தம்முடையதல்ல என்கிறார். 'சம்சாரி' பத்திரிகைக்கு எழுதியிருந்த கட்டுரையில் கால் கிலோ மிளகாய் என்றே குறிப்பிட்டிருந்தாராம். அச்சின்போது, எப்படியோ ஒரு '1' சேர்ந்திருக்கிறது. தாங்களாவது பகுத்தறிவை உபயோகித்து, அவ்வளவு மிளகாய் போட்டால் தாங்குமா என்பதை யோசித்திருக்கலாம் என்று தாத்தா கருதுகிறார். இதே போல்தான் மற்றக் குறிப்புக்களையும் தாங்கள் சரியான விதத்தில் பின்பற்றவில்லை என்று எண்ணுகிறார்.

இங்ஙனம்
கே. ஸ்ரீராம்

பி.கு. : பிறந்தநாள் கொண்டாடியதாக எழுதியிருந்தீர்களே? எத்தனையாவது பிறந்தநாள் என்று என் தாத்தா அறிய விரும்புகிறார்.

ஸ்ரீ.

★

திரு. ஸ்ரீராம் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. சரியான முகாந்தரமின்றித் தங்கள் தாத்தாவைக் கடிந்து கொண்டதற்காக மனமார வருந்துகிறேன். நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகத் தயவு செய்து தெரிவியுங்கள். எனக்கு 18–ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது என்ற தகவலையும் அவரிடம் சொல்லுங்கள்.

நிற்க. இன்று காலை கால் கிலோ மிளகாய் போட்டு மீண்டும் கொய்யாக்காய் ஊறுகாய் தயாரித்தேன். ரொம்ப ரொம்பப் பிரமாதம். ஒரு வேடிக்கை நிகழ்ந்தது. என் அப்பாவின் கீழ் வேலை பார்க்கும் இளைஞர் ஒருவர் சாப்பிட வந்திருந்தார். ஊறுகாயைத் தொட்டுக் கொண்டாரோ இல்லையோ — தொட்கொண்டார் தொட்டே கொண்டார் என்று ஆகிவிட்டார். அத்தோடு இல்லை. இவ்வளவு அருமையாக ஊறுகாய் போடத் தெரிந்த பெண்ணைத் தான் மணந்து கொள்ளாமல் இருக்க முடியாது என்று தலைகீழாக நிற்க ஆரம்பித்து விட்டார்!

சிவகாமி

★

சிவகாமி!

தலைகீழாக நின்றவர் மறுபடி நேராக ஆனாரா இல்லையா? உடனே தெரிவிக்கவும். இதெல்லாம் சுத்த அதிகப்பிரசங்கித்தனம். கீழே வேலை செய்கிறவரை —அதுவும் வாலிபரை — எதற்காகச் சாப்பிட அழைத்து வருவது? அப்படியே அழைத்து வந்தாலும் எதற்காக அவருக்கு ஊறுகாய் போடுவது? அந்த ஆள்தானாகட்டும். ஊறுகாய் நன்றாயிருந்தால் ஊறுகாய்தானே கேட்க வேண்டும்? எதற்காகப் பெண் கேட்பது? கட்டோடு பிடிக்கவில்லை எனக்கு.

ஸ்ரீராம்

★

ஸ்ரீராம் அவர்களுக்கு,

அஞ்சற்க. நிதானத்துக்குப் பெயர் பெற்ற 'பஞ்ச ரெக்
தாத்தா'வின் பேரன்தானா நீங்கள்? இப்படியா பத
படுவது? ஊறுகாயைத் தயாரித்தவர் கிராமத்தில் இ
என் பெரியம்மா என்றும், அவருக்குக் கல்யாணமா
தைந்து வருடங்கள் ஆவதாயும் சொன்னோம்.
வாலிபர் போய்விட்டார்.

இது ஒருபுறமிருக்க, உங்கள் தாத்தா 'சருமத்தைப் பாது காக்க' என்பது பற்றிப் போன ஆண்டு ஒரு கட்டுரை எழுதி யிருந்தாராம். என் தோழியொருத்தி அதை மிகவும் புகழ்ந்து சொன்னாள். மேற்படி இதழ் எனக்குக் கிடைக்கவில்லை. அடுத்த வாரம் நான் சேத்துப்பட்டுப் பக்கம் வருவதாயிருப்ப தால், அப்படியே தங்கள் இல்லத்துக்கும் நேரில் வருகிறேன். அன்பு கூர்ந்து தங்கள் தாத்தாவிடம் சொல்லி, அந்தக் கட்டுரையில் ஒரு பிரதி எடுத்து வையுங்கள்.

சிவகாமி

★

என் அன்புள்ள பஞ்சாமித் தாத்தாவுக்கு,

ஸ்ரீராம் செய்யும் அனேக நமஸ்காரங்கள். உங்களை ரொம்ப நாளாகப் பார்க்க வராமல் இருக்கிறேன் என்று என் மீது ரொம்பக் கோபமாய் இருப்பீர்கள். மன்னிக்க வேண்டும்.

இப்பவும் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று தங்களை நாடி இக்கடிதம் எழுது கிறேன். நான் கட்டுரை, கிட்டுரை எழுதும் பழக்கம் உள்ளவன் என்பது தாங்கள் அறிந்ததே. குடும்பத்துக்கு உபயோகமான குறிப்புக்களை நான் 'சம்சாரி' என்ற பத்திரிகையில் எழுதி வருகிறேன். அனுபவமுள்ளவர் என்று தெரிந்தால்தான் நாலு பேர் நம்புவார்கள் என்பதற்காக, 'பஞ்சாமித் தாத்தா' என்ற பெயரில் இதை எழுதி வருகிறேன். தங்கள் அனுமதியின்றித் தங்கள் பெயரை உபயோகித்துக் கொண்டது தப்புத்தான். ...ற்குத் தண்டனைபோல ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது.

...மேற்படி கட்டுரைகளைப் படித்த ஒரு பெண் என்னை— ...து, உங்களை—அதாவது, பஞ்சாமித் தாத்தாவை— ...ற்காக நேரில் வரப் போகிறாளாம். அவளுடைய நல் ...த்தைப் பெறுவதில் நான் நாட்டம் கொண்டிருக்

கிறேன். அப்படியிருக்க, நான் ஒரு மோசக்காரன் என்று தெரிய வந்தால் அந்த இளம் இதயம் என்ன பாடுபடும்?

இந்த நெருக்கடியில் தாங்கள்தான் உதவ வேண்டும். பெரிய மனது பண்ணி, நாளை மாலை என் வீட்டுக்கு வந்து கொஞ்ச நேரம் 'கட்டுரை எழுதும் தாத்தா'வாக நடித்து விட்டுப் போக வேண்டுமென்று உங்கள் காலில் விழுந்து கேட்டுக் கொள் கிறேன். காப்பாற்றுங்கள்.

ஸ்ரீராம்

★

அன்புள்ள பேரன் ஸ்ரீராமுக்கு,

ஆசீர்வாதம்.

உன் கடிதம் பார்த்து நான் அடைந்த திகைப்புக்கும் மகிழ்ச் சிக்கும் அளவேயில்லை. திகைப்பு, நீ இப்படி ஒரு வேலை பண்ணுகிறாயே என்று அறிந்ததில். மகிழ்ச்சி, என் பிரசினை யும் ஒரு வழியாகத் தீர்ந்ததே என்று.

விஷயம் இதுதான். பொழுதைக் கழிக்க வேண்டுமென்று நான் சமீப காலமாகப் புத்தகங்கள் எழுதி வருவது உனக்குத் தெரியாது. எப்படிப்பட்ட புத்தகங்கள்? காதல் சம்பந்தமான அறிவு நூல்கள். (உதாரணத்துக்குச் சில : 'இளம் தம்பதிகளே! இன்பமாயிருங்கள்!' 'கல்யாணமான பின்னும் காதலிப்பது எப்படி?' 'உடுக்கையும் படுக்கையும்') தலைநரைத்த கிழவன் எழுதியவை என்றால் யாரும் ரசிக்க மாட்டார்களே என்பதற் காக, ஓர் இளைஞனின் பெயரை இவற்றுக்குப் போட்டுக் கொண்டேன். தற்செயலாக நினைவு வந்த பெயர் 'கே. ஸ்ரீராம்' என்பது. ஒரு புத்தகத்தில், என் வசமிருந்த உன்னுடைய புகைப் படத்தைக் கூடப் போட்டு விட்டேன் 'புத்தக ஆசிரியர்' என்ற அடிக் குறிப்புடன்.

என் எழுத்தைக் கண்டு மோகித்த ஒரு பெண் ('உன் புகைப்படத்தைக் கண்டு' என்று நான் கூறமாட்டேன்.) என்னைப் பார்க்க விரும்புவதாகப் பிடிவாதம் பிடிக்கிறாள். வேறு வழி இல்லாமல் உன் வீட்டு விலாசம் கொடுத்திருக்கிறேன். நாளை மாலை நான் வருவேன்; நீ இருப்பாய். உன்னையும் என்னையும் எதிர்பார்த்த பெண்களும் வருவார்கள்.

குழப்பங்கள் எல்லாவற்றையும் ஒரே அடியில் சமாளித்துத் தொலைப்போம்.

பஞ்சாமித் தாத்தா

★

அன்புள்ள சிவகாமி,

வீட்டுக்கே வந்த பின்னரும் கடிதமா என்று கலங்காதே. ஓர் அரிய பெரிய சிறிய வேண்டுகோள். படுரகசியம். மனத்துக்குள் படி.

என் தாத்தாவுடன் பேசிக் கொண்டிருக்கும் அரைக் கிறுக்கைக் கொஞ்சம் பார். வெண்டைக்காய்க்குத் தாவணி சுற்றினாற் போலிருக்கும் அந்த உருவம் என் காலைச் சுற்றிச் சுற்றி வருகிறது. என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம். என் தாத்தாவும் அதற்கு உடன்பட்டு விடுவார் போல் தோன்றுகிறது.

ஆகவே தயவு செய்து நீ என்னுடன் தாராளமாய்ப் பழகு. நான் உன்னுடன் இரண்டு மடங்கு தாராளமாகப் பழகுகிறேன். பொறாமை பிய்த்துக் கொள்ள அந்தப் பெண் ஓடிவிடும். நன்றி,

ஸ்ரீராம்

★

அன்பே! சிவகாமி!

என்ன தப்பு செய்தேன் நான்? எதற்காக அப்படி வீல் என்று சப்தமிட்டாய்? ஏன் அப்படித் தடதட என்று வெளியே

ஓடினாய்? எதனால் அப்புறம் திரும்ப வரவே இல்லை?

விளக்கம் வரும்வரை கலக்கம் நீங்காத
ஸ்ரீராம்

★

ஐயா!

என்னிடம் விளக்கம் கேட்கக் கூட உமக்குத் துணிவு இருக்கிறதா? அல்லது, ஓர் அப்பாவிப் பெண்ணை ஏமாற்ற முயன்று அதில் பாதி வெற்றியும் பெற்று விட்டபோது அவள் தப்பி விட்டாளே என்ற ஆத்திரமா?

போனால் போகிறதென்று, உம்முடைய திட்டத்துக்கு ஒப்புக் கொண்டேன். நீர் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்தேன். பின்னலைப் பின்னின்று இழுத்தீர்; பொறுத் தேன். தலையில் குட்டினீர்; முதுகில் தட்டினீர். வாய் திறவா மல் இருந்தேன்.

இவ்வளவுக்கும் அந்தப் பெண் — வனஜா — உம்மைத் துளியும் லட்சியம் பண்ணுகிறவளாகத் தெரியவில்லை; உங்கள் தாத்தாவைத்தான் சுற்றிக் கொண்டிருந்தாள். அப்போதே எனக்கு ஒரு தினுசாய்ச் சந்தேகம் வந்தது; என்னிடம் இஷ்டப் படியெல்லாம் பழகுவதற்காகவே அந்தக் கதையைக் கற்பனை செய்தீர்களோ என்று தோன்றிற்று.

அந்தச் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்யும் வகையில் உங்கள் கையில் அந்தப் புத்தகத்தைப் பார்த்தேன்: 'கண்ணே! இதோ, காதல் இன்பம்!'

பகீரென்று எனக்கு மாரை அடைத்தது. முன்பொரு சமயம் அந்தப் புத்தகத்தைப் பார்க்கும் துரதிருஷ்டம் எனக்கு ஏற்பட்டது. ஆபாசம்! ஆபாசம்! 'மென்மையான காதல் உணர்ச் சியை இத்தனை விரசமாக்கி எழுதியவனும் ஒரு மனிதனா!'

என்று அருவருப்படைந்து தூர எறிந்தேன். அந்தப் புத்தகத்தை எழுதியவன் 'ஸ்ரீராம்' என்று இப்போது நினைவுக்கு வந்தது.

அதே சமயம் —

அந்த வனஜா உங்களிடம் வந்து, 'கல்யாணம் செய்து கொள்ளாமலே காதல் வாழ்க்கை செய்வது பற்றி உங்கள் புத்தகத்தில் எழுதியிருந்தீர்களே?' என்று ஆரம்பித்தாள்.

என் மனக்கோட்டை படீரென்று இடிந்து, திடீரென்று சரிந்து, சடீரென விழுந்த சப்தமே என் தொண்டையிலிருந்து எழுந்த அந்த வீல்.

ஐயோ! நான் கட்டியிருந்த கற்பனை என்ன! நடந்ததென்ன! 'பஞ்சாமித் தாத்தா' என்ற புனை பெயரில், அனுபவக் களஞ்சியமாய், அறிவுக் குதிராய், உபதேசக் குட்டையாய் நீங்கள்தான் எழுதுகிறீர்கள் என்றும், வேண்டுமென்றே பொய் சொல்லுகிறீர்கள் என்றும் எண்ணி வந்தேன் உங்கள் இல்லம் தேடி. அத்தனையும் பொய்த்தது. அருவருப்பான புத்தகம் எழுதியதோடு, அதை அனுஷ்டானத்திலும் காட்டி என்னைப் பலி வாங்க எண்ணினீர்கள். நல்லவேளை, தப்பினேன்.

சிவகாமி

★

அடேய் பேரப் பயலே!

பாவி! சண்டாளா! உன் நாசமாய்ப் போன 'தாத்தாவைக் கேளுங்கள்' பகுதியில் நாலு காலன் பெட்ரோலும் ஐந்து டஜன் தீப்பெட்டியும் விழ!

ஏண்டா பாவி! எவளோ ஒரு பெண் உன்னை, "இருபது வயது வாலிபனை மணப்பது நல்லதா? ஐம்பது வயது தாண்டிய கிழவனை மணப்பது நல்லதா?" என்று கேட்டதற்கு நீ

அந்தப் பகுதியில், ''ஐம்பது வயதைத் தாண்டிய கிழவனை மணப்பதே மேல்'' என்று எழுதினாயே? கிழவனுக்கு இருக்கக் கூடிய பரிவு, பாசம், கடமை உணர்ச்சி, கத்தரிக்காய் — இதிலே நூற்றிலொரு பங்கு கூட வாலிபனுக்கு இருக்காது என்று மேற்கொண்டு ஆதாரம் காட்டினாயே!

மூளை கலங்கிய பித்துக்குளிகளைத் தவிர வேறு யாரும் உன்னுடைய பகுதியை வாசிக்க மாட்டார்கள் என்று எண்ணி இருந்தேன். அது உண்மையாகி விட்டது. அந்த அரைக் கிறுக்கு வனஜா அதைத் தவறாமல் படிக்கிறவளாம். படித்துத் தொலைக்கட்டும். ஆனால் உலகத்தில் ஐம்பது வயது தாண் டிய கிழவன் நான் ஒருத்தன்தானா அகப்பட்டேன் அவளுக்கு!

இரண்டு நாளாய் அவள் என் வீட்டிலேயே பழி கிடக் கிறாள். மரியாதையாக உடனே உன் பகுதியில், முன்பு எழுதிய பதில் தவறு என்றும், இருபது வயது வாலிபனை மணப்பதே மிகச் சிறந்தது என்றும் எழுது.

கைத்தடி துடிக்க
பஞ்சாமித் தாத்தா

★

பேரன்பு கொண்ட பஞ்சாமித் தாத்தா,

உங்களின் திருவடிகளில் சாஷ்டாங்க தண்டனிட்டு ஸ்ரீராம் எழுதிக் கொண்டது :

ஹே தாத்தா! நான் உங்களிடமும் நீங்கள் என்னிடமும் மாட்டிக் கொண்டிருக்கிறோம். எனக்கு ஒரு கண்ணில் ஆனந்தக் கண்ணீரும், மற்றக் கண்ணில் சோகக் கண்ணீரும் பெருகி வருகின்றன.

நீங்கள் கோருகிறபடியே அடுத்த இதழில் அறிவித்து விடத் தயார். அத்துடன் இல்லாமல், ஐம்பது வயதுக்கு மேல்

உள்ள கணவரைக் கைப்பிடித்தால் அரைப் பைத்தியம் உள்ளவர்கள் முழுப் பைத்தியம் பிடித்து அலைவார்கள் என்று நீண்ட தனிக் கட்டுரை எழுதவும் நான் சித்தம். ஆனால் ஒரு நிபந்தனை.

அன்று வந்திருந்த பெண் — சிவகாமி என்ற பெயருள்ள சித்திரப்பாவை — உங்களைத் தேடி இரண்டொரு நாளில் வருவாள். அவளிடம் காதல் புத்தகங்களை எழுதியவர் நீங்கள்தான் என்பதை ஒப்புக் கொண்டு, ஆதாரமும் காட்ட வேண்டும். அத்தோடு, நான் எத்தகைய அறிவாளி என்ற விவரத்தையும் சாங்கோபாங்கமாக விளக்கிச் சரிப்படுத்த வேண்டும். 'பஞ்சாமித் தாத்தா' என்பது உண்மையில் நான்தான் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். உங்கள் வாழ்க்கை யில் விலங்கு ஒடிவதாக! என் வாழ்க்கையில் விலங்கு மாட்டு வதாக!

அன்புப் பழம் நான்
ஸ்ரீராம்

★

சிவகாமி!

அன்பே! உடனே செல், இத்துடனுள்ள முகவரிக்கு. உண்மை உணர்வாய். வேண்டாம் — மன்னிப்புக் கேட்காதே.

என்றும் உன்
ஸ்ரீராம்

★

அன்பரே!

தாங்கள்தான் பஞ்சாமித் தாத்தாவா? என் பிராண தாத்தா! உங்களைப் பார்க்கப் பறந்தோடி வருவேன்.

சிவகாமி

★

6. டெல்லி மெஷின்!

என் அன்புள்ள சிரஞ்சீவி வெங்கிட்டுவுக்கு,

அனேக ஆசீர்வாதம். இப்பவும், நீ, டெல்லியிலிருந்து சௌக்கியமாக ஊர் திரும்பியது பற்றி ரொம்பவும் சந்தோஷம். பூஞ்சை உடம்புக்காரனான நீ, நல்லபடியாக ஊர் திரும்ப வேண்டும் என்று சதா நேரமும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆஞ்சனேயருக்கும் வடைமாலை சாத்துவதாக வேண்டிக் கொண்டிருந்தேன். இத்துடன் அர்ச்சனை செய்த பிரசாதம் அனுப்பி இருக்கிறேன். சௌ. பிரேமா, அவள் பிறந்த வீடு போயிருந்தாளே, வந்து விட்டாளா?

அடிக்கடி கடிதம் போடு,

உன் பிரியமுள்ள
அத்தை

பின் குறிப்பு : பார்த்தாயா, மறந்தே போய் விட்டேன். இட்டிலி, தோசை, மிளகாய்ப் பொடிக்கெல்லாம் அரைத்துக் கொடுக்கிற மெஷின் ஏதோ வாங்கி வந்திருக்கிறாயாமே? அதை எனக்கு அனுப்பி வை.

★

மிஸ்டர் வெங்கடராமன் அவர்களுக்கு,

நமஸ்காரம்,

சென்ற வாரம் தாங்கள் உத்தியோக காரியமாய் டில்லி போய்விட்டுத் திரும்பியதாக என் ஒய்ப் சொன்னாள். தங்கள் மனைவி பிரேமாவும் என் மனைவி ருக்மணியும் நெருங்கிய சினேகிதர்கள் என்று தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். (தங்கள் மனைவி ஊருக்குப்போன காலத்திலிருந்து என் மனைவி பாதி யாய் இளைத்து விட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.)

தங்கள் உத்தியோக காரியம் வெற்றிகரமாய் முடிந்திருக்கு மென நம்புகிறேன். தங்கள் சாமர்த்தியமும் திறமையும் உலகமறிந்த விஷயம். தங்களுக்கு மேலும் மேலும் வெற்றி கிட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்
எம். நடராஜன்

பின்குறிப்பு : தாங்கள் டெல்லியிலிருந்து ஒரு யந்திரம் வாங்கி வந்திருப்பதாயும், அது எல்லாவிதமான நொய், பொடி, மாவு முதலியவை அரைக்கக் கூடியதென்றும் கேள்விப்பட் டேன். அதை எனக்கு விலைக்குத் தர முடியுமானால் நன்றி உள்ளவனாய் இருப்பேன்.

எம்.என்.

★

சிரஞ்சீவி வெங்குவுக்குச் சீனித் தாத்தா செய்யும் ஆசீர்வாதம். வேணும்.

டெல்லிக்குப் போய்விட்டு வந்தாயென்று கேள்விப் பட்டு ரொம்பவும் சந்தோஷப்பட்டேன். எல்லாம் அந்தக் கபாலீசு வரன் அனுக்கிரகம். வருகிற வழியில் காசிக்கும் பத்ரிநாத் துக்கும் போய்விட்டு வந்திருக்கலாம். பரவாயில்லை.

டெல்லியிலிருந்து நீ என்னமோ வாங்கி வந்திருக்கிறா யாமே? உன் பாட்டி என் பிராணனை எடுக்கிறாள், அதைக் கேட்டு வாங்கித் தரும்படி. என்னமோ மெஷினாம், எதைக் கொடுத்தாலும் அரைக்கிறதாம். அதை உடனே அனுப்பிக் கொடப்பா. என்ன பணமோ அதைக் கொடுத்து விடுகிறேன்.

செள. பிரேமா அவள் அம்மா வீட்டிலிருந்து வந்தா யிற்றா? அவளை நாங்கள் ரொம்பக் கேட்டதாகச் சொல்லு.

வேணும்
சீனித் தாத்தா

★

தம்பி வெங்கிட்டுவுக்கு,

நீ டெல்லியிலிருந்து வாங்கி வந்திருக்கிற மெஷினைப் போலவே ஒன்று வேண்டுமென்று பல நாளாகத் தேடிக் கொண் டிருக்கிறேன். ஆகவே உடனே அதை எனக்கு அனுப்பி வைப்பாயென்று நம்புகிறேன்.

சிவராம அண்ணா

★

ஏய் பிரேமா!

என்ன இது கூத்து?

எனக்குச் சென்ற வாரம் வந்த கடிதங்களையெல்லாம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். காப்பிக் கொட்டை மெஷின்

மாதிரி என்னவோ ஒரு மெஷின் வாங்கி வரும்படி நீ சொன்னது உண்மைதான். ஆனால் நான்தான் மறந்து விட்டேன் என்று ஊரிலிருந்து வந்ததுமே சொன்னேனே? நான் வாங்கி வந்து விட்டதாக யார் இவர்களுக்கெல்லாம் சொன்னது?

நீ பாட்டுக்குப் பிறந்த வீட்டிலே போய் மகாராணி மாதிரி உட்கார்ந்து கொண்டாய். இங்கே என் உயிர் போகிறது. நீயே இவர்களுக்கெல்லாம் பதில் எழுதிக் கொள்.

வெங்கிட்டு

★

அன்புள்ள பிராணநாதருக்கு,

அடியாள் பிரேமா அனந்தகோடி நமஸ்காரங்களுடன் எழுதிக் கொண்டது.

இப்பவும் தங்கள் கடிதம் பார்த்து அறிந்தேன். நானொன்றும் இங்கே மகாராணி போல் உட்கார்ந்திருக்கவில்லை. அம்மாவுக்கு ஒற்றைத் தலைவலி இன்னும் போகவில்லை. அது சரியானதும் நான் புறப்பட்டு வந்து விடுகிறேன்.

நிற்க. மாவு மெஷின் சமாசாரத்தில் என் மீது எவ்விதத் தப்பும் இல்லை. நீங்கள் டெல்லிக்குப் போகும் முன்பு நான் சொல்லியிருந்தேன், வாங்கி வரச் சொல்லி.

நீங்கள் டெல்லியில் இருந்தபோது இங்கே வந்தவர்கள், பேசினவர்கள், எழுதினவர்கள் எல்லாரிடமும் அதைப் பற்றிச் சொல்லியிருந்தேன். பத்தினி சொல் தட்டாத பதி என்று அவர்களுக்கு உங்களைப் பற்றி அபிப்பிராயம். நீங்கள் வெறுங் கையை வீசிக்கொண்டு வருவீர்கள் என்று அவர்களுக்குத் தெரியுமா? ஒண்ணுக்கு நாலாக வாங்கி வந்திருப்பீர்கள் என்று நினைத்து ஆளுக்கொன்றாகக் கேட்கிறார்கள்.

ஹூம். ஒன்று ரூ.800-தான் அதன் விலை. இருக்கிற கிராக்கியைப் பார்த்தால், ஒன்று ஆயிரம் ரூபாய் என்று

விற்கலாம்போல் இருக்கிறது. லாபம்கூடச் சம்பாதித்திருக்க லாம். உங்களுக்கு ஏது அத்தனை சாமர்த்தியம்?

இப்படிக்கு
பிரேமா

★

அத்தை —
எம். நடராஜன் —
சினித்தாத்தா —
சிவராம அண்ணா —

(தனித் தனியே எழுதியது)

...உங்கள் கடிதம் கிடைத்தது. ரொம்ப சந்தோஷம். டெல்லிக்குப் புறப்படுவதற்கு முன்பே பிரேமா சொல்லியிருந்தாள் — உங்களுக்கும் சேர்த்து ஒரு மெஷின் வாங்கும்படி. நான் மறப் பேனா? எதற்கும் இருக்கட்டும் என்று அரை டஜன் மெஷின்கள் வாங்கிக் கொண்டேன்.

ஆனால், அந்த ஆறு மெஷின்களும் ஏகப்பட்ட கனமாய் இருந்ததால் என்னோடு லக்கேஜாக எடுத்து வர முடியவில்லை. ஒரு சிநேகிதரிடம் ஒப்படைத்து ரயில்வே பார்சலாக அனுப் பும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்.

எப்படியும் அவைகள் வந்து சேர ஒரு வாரம் பத்து நாள் ஆகும். வந்ததும் கட்டாயம் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

இப்படிக்கு
வெங்கிட்டு

(பி.கு. மெஷின் விலை ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆனால் அதன் உபயோகங்களைப் பார்த்தால் இது ஒன்றும் பிரமாத மில்லை.)

★

அன்புள்ள நண்பன் சோமுவுக்கு,

நான் டெல்லி வந்திருந்தபோது உன் வீட்டில் எனக்காகப் பண்ணிக் கொடுத்த எல்லா சௌகரியங்களுக்கும் எப்படி நன்றி

செலுத்துவதென்றே தெரியவில்லை. நான் இங்கே வந்ததும் 'ப்ளூ'வில் படுத்து விட்டதால் உனக்கு உடனே எழுத முடிய வில்லை. தப்பாக நினைக்காதே.

நிற்க, டெல்லியில் இருந்தபோது, நான் ஒரு சின்ன மாவு மெஷினைப் பற்றி விசாரித்ததும் நீ அதன் விலை ரூ.800 ஆகும் என்று சொன்னதும், நான் வேண்டாமென்று தெரிவித்ததும் உனக்கு நினைவிருக்கலாம். இங்கே என்னடாவென்றால், அது வேண்டுமென்று எல்லாரும் உபத்திரவப்படுத்துகிறார்கள்.

ஆகவே தயவு பண்ணி, அரை டஜன் மெஷின்கள் வாங்கி ரயில்வே பார்சலில் அனுப்பி வை. கிரயத்துக்கும் ரயில்வே கூலிக்குமாகச் சேர்த்து பணம் தனியே அனுப்பி வைக்கிறேன்.

சிரமத்துக்கு மன்னிக்கவும். உன் வீட்டில் எல்லோரும் சௌக்கியம்தானே?

அன்புள்ள
வெங்கிட்டு

★

அத்தை —
ருக்மணி நடராஜன் —
சீனித் தாத்தா —
சிவராம அண்ணா —

(தனித் தனியே எழுதியது)

...இப்பவும் என் வேண்டுகோளுக்கு இணங்கி, மெஷின் விஷயமாக அவருக்கு நீங்கள் கடுதாசி போட்டதற்கு ரொம்ப நன்றி. அனேகமாய் உங்களுக்கும் ஒரு மெஷின் கிடைத்து விடும். வந்ததும் அனுப்பி வைக்கிறேன்.

இப்படிக்கு
பிரேமா

குறிப்பு : ஒரு விஷயம். மெஷின் விலை ரூ. 1,200 என்று அவர் சொல்வார். ரூ. 1,000–க்கு மேல் ஒரு பைசா கூடத் தரா தீர்கள்.

7. கூடை ஒன்று ஆள் இரண்டு

உதவி ஜெனரல் மானேஜரிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

நேற்று மாலை நமது காரியாலயத்தை ஜெனரல் மானேஜர் பார்வையிட்டுக் கொண்டு வந்தபோது, உங்கள் இலாகா ஒரே குப்பையும் கூளமுமாக இருப்பதைக் கவனித்தாராம். குறிப் பாக, டைப்பிஸ்டின் மேஜையடியில் மலைபோலக் குப்பைச் காகிதங்கள் கிடப்பதைக் கண்டு திகைத்துப் போனாராம். (1)

அவை குப்பைகள்தானா அல்லது ஆபீசுக்கு வந்து பட்டுவாடா செய்யாமல் வைக்கப்பட்டுள்ள கடிதங்களா? (2) குப்பைகள் தான் என்றால் ஏன் அப்படிக் கிடக்கின்றன என்பதை உடனே அறிய விரும்புகிறார்.

★

கணக்கு இலாகா மானேஜரிடமிருந்து டைப்பிஸ்டு நளினிக்கு

உதவி ஜெனரல் மானேஜரின் கடிதம் இத்துடன். உன் பதில் உடனே தேவை.

★

டைப்பிஸ்டு நளினியிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

சுருக்கமாகச் சொல்லுவதானால், எனக்குக் குப்பைக் கூடை இல்லாததே காரணம். விளக்கமாகச் சொல்லுவதானால், பழைய குப்பைக் கூடையின் அடிப்பக்கம் பிய்ந்து போய்ப் பல நாளாகிறது. ஆபீஸ் பையன் மூலம் பல ரிப்பேர்கள் செய்து பார்த்தும் பலன் இல்லாததால் அதைத் தூக்கி எறிந்து விட்டேன். தயவு செய்து புதுக் குப்பைக் கூடை சப்ளை செய்யும்படி ஸ்டோர்ஸ் இலாகாவுக்கு எழுத வேண்டுகிறேன்.

★

கணக்கு இலாகா மானேஜரிடமிருந்து ஸ்டோர்ஸ் மானேஜருக்கு

உதவி ஜெனரல் மானேஜரின் கடிதமும் டைப்பிஸ்டு நளினியின் கடிதமும் காண்க. குப்பைக் கூடைகள் விஷயம் உடனே கவனித்தால் நலம்.

★

ஸ்டோர்ஸ் மானேஜரிடமிருந்து உதவி ஜெனரல் மானேஜருக்கு

1. தங்கள் கடிதம்.

2. கணக்கு இலாகா மானேஜரின் கடிதம்.

3. டைப்பிஸ்டு நளினியின் கடிதம்.

ஆபீசுக்குத் தேவையான வருடாந்தர சாமான்களைப் பிரதி வருடம் ஜனவரி 15-ஆம் தேதிக்குள், அந்தந்த இலாகா தலைவர்கள் கொடுக்க வேண்டும் என்பது விதி. கணக்கு இலாகா மானேஜர் இவ்வருடம் கொடுத்த பட்டியலில் குப்பைக் கூடை குறிக்கப்படவில்லை. நடு வருடத்தில் வாங்கித் தரத் தங்களது விசேட அனுமதி தேவை. தயை செய்து உத்தரவிட வேண்டுகிறேன்.

★

உதவி ஜெனரல் மானேஜரிடமிருந்து
ஸ்டோர்ஸ் மானேஜருக்கு

இந்த மாதிரி விசேட அனுமதிகள் இத்தோடு 118 ஆகி விட்டது. எனவே கண்டிப்பாக அனுமதி மறுக்கப்படுகிறது. குப்பை போடுபவர்கள் குப்பைகளை மடியில் கட்டி வைத்துக் கொண்டு வீட்டுக்கு எடுத்துப் போகட்டும். கவலையில்லை.

பி.கு. : ஆபீஸ் பொருளை வெளியே தூக்கியெறிய யாருக்கும் உரிமை கிடையாது. டைப்பிஸ்டு நளினியின் பழைய குப்பைக் கூடையைத் திரும்பப் பெறாமல் நீர் என்ன வேலை பார்க்கிறீர்?

★

ஸ்டோர்ஸ் மானேஜரிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

வருஷ நடுவில் புதுக் குப்பைக் கூடை வாங்கித் தர இயலாததற்கு வருந்துகிறோம். வெளியே எறியப்பட்ட பழைய குப்பைக் கூடைக்கு உடனே கணக்கு ஒப்படைக்கும்படி கோரப்படுகிறது.

★

கணக்கு இலாகா மானேஜரிடமிருந்து
ஸ்டோர்ஸ் மானேஜருக்கு

ஆபீஸ் பையனைப் பழைய குப்பைக் கூடையைக் கண்டு பிடித்துக் கொண்டு வர நியமித்திருக்கிறோம். மேற்படி வேலை யில் அவன் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறான். எனினும் சிறிது காலதாமதம் ஏற்படலாமென அஞ்சுகிறோம்.

★

உதவி ஜெனரல் மானேஜரிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

நேற்று மீண்டும் ஜெனரல் மானேஜர் உங்கள் இலாகா பக்கம் வந்தபோது, குப்பைகள் முன்னைவிட அதிகமாகப் பெருகியிருப்பதைக் கண்டு திகைத்துத் திடுக்கிட்டுப் போனா ராம். அதைவிட அதிர்ச்சியான காட்சி, தங்கள் டைப்பிஸ்டு பெண்ணும், அவரது பக்கத்துக் குமாஸ்தாவான வாலிபனும் கடிதங்களை ஒருவர் மீதொருவர் வீசி எறிந்து விளையாடிக் கொண்டிருந்ததாகும். ஆபீஸ் நேரத்தில் இம்மாதிரி ஒழுங் கீனங்கள் நடைபெறுவது கண்டிக்கத்தக்கது. இருபத்து நாலு மணி நேரத்துக்குள் சமாதானம் தேவை.

★

கணக்கு இலாகா மானேஜரிடமிருந்து
குமாஸ்தா கண்ணப்பனுக்கு

மானேஜரின் கடிதம் இத்துடன் வருகிறது. உன்னுடைய லீலைகளுக்கு உடனே விளக்கம் சொல்லவும்.

★

குமாஸ்தா கண்ணப்பனிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

தவறாக எதுவும் நடைபெறவில்லை என்பதைத் தாழ்மை யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மிஸ் நளினி குப்பைக்

கூடை இல்லாமல் அவதிப்படுவது தாங்கள் அறிந்ததே. ஜெனரல் மானேஜரின் கோபத்தைப் பற்றி என்னிடம் மேற்படியார் கூறி வருத்தப்பட்டார். என் குப்பைக் கூடை நல்ல நிலைமையில் இருப்பதால் அதை இருவருக்கும் பொதுவாக உபயோகித்துக் கொள்ளலாமென்று நான் யோசனை சொன்னேன். மிஸ் நளினி யும் சம்மதித்ததன் பேரில், இருவர் மேஜைக்கும் நடுவில் அதை வைத்துக் கொண்டோம். ஆனால், பியூன் வஹாப், பக்கத்து இலாகாக்களுக்குப் போவதற்கு எங்கள் மேஜையைக் குறுக்கு வழியாகக் கொண்டிருக்கிறான். அவன் போகும்போதும் வரும் போதும், இடைஞ்சலாய் இருக்கிறதென்று மேற்படி குப்பைக் கூடையை யாராவது ஒருவருடைய மேஜையின் கீழே நகர்த்தி வைத்துவிட்டுப் போகிறான். அந்தச் சந்தர்ப்பங்களில் மற்ற வர் தனது குப்பையை மேற்படி குப்பைக் கூடையை நோக்கிக் குறிவைத்து எறிய வேண்டி நேருகிறது. சில சமயங்களில் குறி தவறி வெளியே விழுவதும் உண்டு. இதைத் தவிர வேறு ஒழுங் கீனமாக எதுவும் நடக்கவில்லை; நடக்கவும் நடக்காது என்று உறுதிக் கூறுகிறேன்.

★

உதவி ஜெனரல் மானேஜரிடமிருந்து ஸ்டோர்ஸ் மானேஜருக்கு

ஸ்டோர்ஸ் இலாகா கோரியிருந்த குப்பைக் கூடையை உடனே வாங்கிக் கொடுத்துத் தொலைக்கவும். இதையே என் விசேஷ அனுமதியாகக் கொள்ளலாம். ஜெனரல் மானேஜர் இன்று பகல் அங்கே போயிருந்தபோது, அந்த இலாகா இருக்குமிடம் தெரியாமல் குப்பைகள் குவிந்து கிடந்ததாகத் தெரிவதா லேயே இந்த விசேட அனுமதி.

★

ஸ்டோர்ஸ் மானேஜரிடமிருந்து கணக்கு இலாகா மானேஜருக்கு

நீங்கள் கேட்டிருந்த குப்பைக் கூடை இத்துடன் வரு கிறது. ரசீதில் கையெழுத்திட்டு அனுப்பவும்.

கணக்கு இலாகா மானேஜரிடமிருந்து ஸ்டோர்ஸ் மானேஜருக்கு

குப்பைக் கூடை கிடைத்தது. நன்றி. ஆனால் பழைய குப்பைக் கூடையையும் ஆபீஸ் பையன் தேடிக் கொண்டு வந்ததோடு, அதன் அடிப்பக்கத்துக்குப் புதுப் பிரம்பு போட்டு ரிப்பேரும் செய்து விட்டான். இப்போது ஒரு குப்பைக் கூடை அதிகப்படியாக எங்கள் இலாகாவில் இருப்பதாலும், ஆபீஸ் பையனின் முன்யோசனையை மெச்சு முகத்தாலும், பழைய குப்பைக் கூடையைக் கவிழ்த்துப் போட்டுக் கொண்டு உட்காரும்படி அவனிடமே கொடுத்திருக்கிறேன். மேற்படி பையனுக்கு ஒரு முக்காலி வேண்டுமென்று எழுதி நாலு மாதங்கள் ஆகிறதென்ற தகவல் தாங்கள் அறிந்ததே.

★

ஸ்டோர்ஸ் மானேஜரிடமிருந்து உதவி ஜெனரல் மானேஜருக்கு

கணக்கு இலாகா மானேஜரின் குறிப்பைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். ஆபீஸ் பொருள்கள், எந்த நோக்கத்துக்காக வாங்கப்பட்டனவோ, அதை தவிர வேறு காரியத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று சென்ற ஆண்டு, ஜி.ஸி. 18, எஸ்.டி. 3 உத்தரவில் காணப்படுகிறது. ஆகவே கணக்கு இலாகா மானேஜர் செய்தது சரிதானா என்பதைத் தங்கள் தீர்மானத்துக்குத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன்.

★

உதவி ஜெனரல் மானேஜரிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

ஆபீஸ் விதிகளை மீறத் தங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. குறிப்பிட்ட ஆபீஸ் பையன் நின்று கொண்டே தூங்குவதைப் பல சமயங்களில் நானே பார்த்திருக்கிறேன். அவனை உட்காரவும் வைத்து விட்டால் எழுப்புவதற்கு இன்னொரு பையனை நியமிக்க வேண்டும். அது போக, அனா

வசியமாகப் புதுக் குப்பைக் கூடை வாங்கி, ஆபீசுக்கு நஷ்டம் விளைவித்தது மன்னிக்கக் கூடியதல்ல. புதிய குப்பைக் கூடையின் கிரயம் என்னவென்பதை ஸ்டோர்ஸ் இலாகாவில் விசாரித்தறிந்து அதை டைப்பிஸ்டு, குமாஸ்தா இருவருடைய சம்பளத்திலிருந்தும் பிடிப்பதற்கு உடனே ஏற்பாடு செய்யவும்.

★

கணக்கு இலாகா மானேஜரிடமிருந்து
உதவி ஜெனரல் மானேஜருக்கு

உத்தரவை நிறைவேற்ற இயலாதிருப்பதற்கு வருந்துகிறேன். சம்பந்தப்பட்ட டைப்பிஸ்டு மிஸ் நளினியும் சம்பந்தப்பட்ட குமாஸ்தா கண்ணப்பனும் நேற்றோடு வேலையை, ராஜினாமா செய்து விட்டுப் போய்விட்டார்கள். அவர்களுக்குக் கல்யாணம் நடைபெறப் போவதாக இன்று அழைப்பிதழ் வந்திருக்கிறது. மேற்கொண்டு தங்கள் உத்தரவை எதிர்பார்க்கிறேன்.

★

உதவி ஜெனரல் மானேஜரிடமிருந்து
கணக்கு இலாகா மானேஜருக்கு

கல்யாண அழைப்பிதழை மூன்று சம பங்காகக் கிழித்து மூன்று குப்பைக் கூடைகளிலும் போடவும்.

★

8. என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர்

பொன்னுசாமி பெஸ்ட் கோ,
சென்னை-1.

குமாரி சௌதாமினி அவர்களுக்கு,

வணக்கம்.

இப்பவும் நாங்கள் மூட்டைப் பூச்சி மற்றும் கரப்பான், ஈ, எறும்பு முதலான பூச்சிகளை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுச்

செயலாற்றி வருவது தாங்கள் அறிந்ததே. மூட்டைத் தொல்லை அதிகமாக உள்ள வீடுகளுக்கு நாங்கள் மருந்து தெளித்து அப்புறப்படுத்துகிறோம் என்பதும் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதன் பிரகாரம், நேற்று எங்கள் கம்பெனியிலிருந்து பூச்சி மருந்து அடிக்கும் மருதமுத்துவையும், மேற்பார்வை செய்யும் திரு. லக்ஷ்மணையும் தங்கள் வீட்டுக்கு அனுப்பி, மூட்டைப் பூச்சி மருந்து அடிக்கும்படி செய்தோம். தங்களுக்குத் திருப்தி ஏற்படும் வண்ணம் வேலை நடந்தது என்றும் தாங்களே சொன்னீர்களாம்.

ஆனால், மருந்தடித்த வகையிலே ரூ. 103–50 தாங்கள் கொடுக்க வேண்டுமென்று பில் போட்டுத் திரு. லக்ஷ்மண் நீட்டியபோது, தாங்கள் கோபத்தால் குதித்தீர்களாம். தரையில் ஓங்கிக் காலால் உதைத்தீர்களாம் — அங்கே ஏற்கெனவே லக்ஷ்மணின் கால் இருக்கிறது என்பதையும் பொருட்படுத்தாமல். பில் காகிதத்தைப் பல சுக்கல்களாகக் கிழித்து மருதமுத்துவின் தலையில் போட்டீர்களாம்.

மொத்தத்தில், இருவரும் அங்கே பிடித்த ஓட்டம் இங்கே வந்துதான் நின்றார்கள். அவர்களது ஐந்து வருட சர்வீசில் எவ்வளவோ விஷப் பூச்சிகளையும், கொடிய ஜந்துக்களையும் பார்த்திருப்பதாயும், ஆனால் தங்களைப் போலப் பார்த்ததில்லையென்றும் திரு. லக்ஷ்மணும் மருதமுத்துவும் சொல்கிறார்கள்.

அன்புகூர்ந்து இக்கடிதம் கண்டதும் பில் தொகையை மணியார்டரில் அனுப்பக் கோருகிறோம்.

எம்.எம். பொன்னுசாமி
(பார்ட்னர்)

★

மதிப்புக்குரிய பொன்னுசாமி அவர்களுக்கு,

தங்களது பண்பாடு மிக்க அழகிய கடிதம் வரப் பெற்றேன். தங்கள் அலுவலக டைப்ரைட்டரை மெச்சுகிறேன். 'N' எழுத்தை மட்டும் கவனிக்கவும். அவ்வளவு சரியாய் விழவில்லை. ('மார்த்தாண்டா டைப்ரைட்டர் சர்வீஸ்' என்ற கம்பெனியில் நான் பணியாற்றுகிறேன்.)

இப்பவும் தாங்கள் குறிப்பட்ட தேதியில், இருவர் எங்கள் வீட்டுக்கு வந்தது உண்மையே. என் அம்மாவும் அப்பாவும் ஷாப்பிங் போயிருந்ததால் அவர்களை நானே வரவேற்று, இருக்கை தந்து, உபசரித்தேன். இருவரில் ஒருவர் முதுகில் ஒரு சிலிண்டரைச் சுமந்திருந்தார். மற்றவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''மூட்டைப் பூச்சிக்காக மருந்து தெளிக்க வந்திருக்கிறோம். இப்போதே ஆரம்பிக்கலாமா வேலையை?'' என்று சிலிண்டர் சுமந்தவர் என்னைக் கேட்டார். மற்றவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஓ, செய்யலாமே!'' என்று சொன்னேன். சிலிண்டர் சுமந்தவர், தமது சிலிண்டரில் எதையோ ஊற்றிக் கலந்து கொண்டார். வாளியில் தண்ணீர் கொண்டு வந்து வைத்துக் கொண்டார். கடியாரம், ரேடியோ, புத்தகம் முதலியவற்றின் மீது பழைய பேப்பர்களைக் கொண்டு மூடினார். சர்ரென்று ஸ்ப்ரே பண்ண ஆரம்பித்தார். மற்றவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

எனக்குக் கூட ஆச்சரியமாக இருந்தது, இடுப்பில் கை வைத்துக் கொண்டு ஸ்டைலாக நிற்பதற்காகக் கூட ஓர் ஆபீசில் ஆள் வைத்துச் சம்பளம் போட்டுத் தருகிறார்களே என்று. முதலாளியின் குமாரனாயிருக்கும், நமக்கென்ன என்று விட்டு விட்டேன்.

அரைமணி நேரம் கழிந்தது. மருந்து தெளிப்பவர் தமது பீச்சாங்குழலைச் சுருட்டிக் கொண்டார். ''இனிமேல் மூட்டைப் பூச்சி தொல்லையே இருக்காதம்மா'' என்றார் என்னிடம்.

'சந்தோஷம்' என்றேன்.

அதுவரை என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர் — தாங்கள் குறிப்பிடும் லக்ஷ்மண் — திடீரென்று விழித்துக் கொண்டவர் போல் ஒரு பில் எழுதினார். சரக்கென்று கிழித் தார். என்னிடம் நீட்டி, ''பணத்தைக் கொடுங்கள்,'' என்றார் கம்பீரமான குரலில். (மாற்றான் தோட்டத்து மல்லிகையானா லும் மணம் உண்டு என்று ஒப்புக் கொள்பவள் நான். அத னால்தான் பகைவரின் குரலானாலும் கம்பீரமானது என்று குறிப்பிடுகிறேன்.)

நான் அவரைக் காட்டிலும் கம்பீரமான குரலில், ''தர முடி யாது,'' என்று தெரிவித்தேன். பின்னர் தாங்கள் எழுதியுள்ள படியெல்லாம் கோபத்துடன் குதித்தேன், துடித்தேன்.

காரணம் என்ன?

இந்த மூட்டைப் பூச்சி மருந்து தெளிப்புப் பணி ஏதோ இலவசமானது என்றும், கார்ப்பரேஷனில் மூட்டை வாரம் கொண்டாடுகிறார்கள் என்றும் நினைத்திருந்தேனே ஒழிய, கையை விட்டு அழ வேண்டியிருக்கும் என்று எனக்குத் தெரி யாது. வந்தவர்கள், வேலையை ஆரம்பிக்கு முன் அதைச் சொல்லி யிருக்க வேண்டாமா?

ஏதோ பார்க்கக் கௌரவமான வீட்டில் இருக்கிறோம் என்ப தற்காக, எங்களை எப்படி வேண்டுமானாலும் ஏமாற்ற நினைத் தால் அது மகா பாவம். என் அப்பாவுக்குச் சமீபத்தில்தான் வேலை போய்விட்டது. ரொம்பக் கஷ்டப்படுகிறார். கவலையை மறந்து கொஞ்ச நேரம் கண்ணயரலாம் என்றால் மூட்டைப்

பூச்சிகள் அதற்கு இடம் தர மறுத்தன. உங்கள் மருந்தின் தயவில் இரண்டு நாளாய் நிம்மதியாய்த் தூங்குகிறோம். ('மா.தோ.ம.ம.உ.' – கொள்கைப் பிரகாரம் இதையும் ஒப்புக் கொள்கிறேன்.) தயவு பண்ணி பில் தொகையைக் கேட்டுத் தொந்தரவு தராதீர்கள். நாங்கள் கேட்காதபோது நீங்களாகவே வந்து மருந்து தெளித்து விட்டு, அதற்குக் கூலியும் கேட்பது நியாயம் இல்லை.

என்றும் நன்றியுடன்
சௌதாமினி

★

சூபர்வைசர் லக்ஷ்மணுக்கு,

குமாரி சௌதாமினியின் கடிதம் உமது பார்வைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உம் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுக.

எம்.எம். பொன்னுசாமி

★

மதிப்புக்குரிய நிர்வாகி அவர்கட்கு,

சூபர்வைசர் லக்ஷ்மண் செய்யும் அனேக வணக்கங்கள்.

என் மீது தவறேதும் இல்லை என்பதற்கு நூறு காரணங்கள் காட்டுவேன். விரிக்கின் பெருகுமாதலால் சுருக்கி இரண்டே கூறுவன் :

1. பூச்சி மருந்து தெளிக்க வந்துள்ளோம் என்று நாங்கள் கூறியவுடனேயே கதவுகளை அகலத் திறந்து எங்களை வரவேற்று உபசரித்தது குமாரி சௌதாமினியின் முதல் குற்றமாகும். 'யார் உங்களைக் கூப்பிட்டது?' என்று அவர்கள் எடுத்த எடுப்பிலேயே கேட்டிருந்தால், நாங்கள் கடை விரித்திருக்க மாட்டோம்.

2. நமது அலுவலக டைப்ரைட்டர் மெஷினை மாற்றுமாறு குமாரி சௌதாமினி கூறுகிறார். டைப்பிஸ்டையே மாற்ற வேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன். ஏனெ னில், சென்னை-5, பாண்டுரங்கம் சந்து, எட்டாம் நம்பர் வீட்டுக்கு மூட்டைப் பூச்சி மருந்து அடிக்க வருமாறு நமது கம்பெனிக்குக் கடிதம் வந்து ஒன்பது மாதமாகிறது. உடனே போய்க் கவனிக்குமாறு தாங்கள் உத்தரவிட்டு எட்டு மாதமாகிறது. அந்த உத்தரவை நமது டைப்பிஸ்ட் டைப் செய்து என்னிடம் தந்தது போன வாரம்தான். இந்த இடைக்காலத்தில் இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்து, மகாத்மா காந்தி சுடப்பட்டு, அரசியல் திட்டம் வகுக்கப்பட்டு, காங்கிரஸ் அரசாங்கம் தோற்று, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கள் நடைபெற்று — இவ்வளவு ஆகியிருக்கும் எனில், கேவலம் பாண்டுரங்கம் சந்து, எட்டாம் நம்பர் வீட்டில் ஒரு குடித்தனம் கூடவா மாறியிருக்காது? நம்மைக் கூப் பிட்ட நபர் காலி செய்து கொண்டு போக, வேறு குடும்பம் குடியேறியிருந்ததுதான் குழப்பத்துக்குக் காரணம்.

இக்காரணங்களால், என் மீது எவ்விதக் குற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையுள்ள ஊழியன்
லக்ஷ்மண்

★

குமாரி சௌதாமினி அவர்களுக்கு,

வணக்கம் பற்பல.

எனது அலுவலகத்துக்குத் தாங்கள் எழுதிய கடிதத்தை என் பார்வைக்கு அனுப்பியிருந்தார்கள். பில் தொகை சம் பந்தமாக அவர்களுக்கு நான் பதில் தெரிவித்துவிட்டேன்.

தனிப்பட்ட முறையில் என்னைப் பற்றித் தாங்கள் எழுப்பி யிருந்த ஒரு சந்தேகத்துக்கு நான் விளக்கம் கூறக் கடமைப் பட்டவனாகிறேன்.

மூட்டைப்பூச்சி மருந்து அடித்துக் கொண்டிருந்தபோது, நான் தங்களையே பார்த்துக் கொண்டு நின்றிருந்ததாகத் தாங்கள் எழுதியிருந்தீர்கள். அது உண்மையே. நான் ஏன் அப்படிப் பார்த்தேன் எனில்,

பத்தரை மாற்றுப் பவுனில் இப்படியொரு கொடி பண்ண எப்படி முடிந்தது? இந்தப் பொற்கொடி ஏன் என்னிடம் இன்னும் இரண்டு வார்த்தை பேசக் கூடாது? இந்த ஒப்பற்ற அழகியுடன் மெரினாவில் அரைமணி நேரம் நிலவைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தால் என்ன நேரும்?

இன்னோரன்ன சிந்தனைகளின் வயப்பட்டவனாகத்தான் நான் உங்களையே பார்த்துக் கொண்டிருந்தேனே தவிர, வேறு தவறான எண்ணம் எதுவும் கிடையாது.

உங்கள் அன்புள்ள

லக்ஷ்மண்

★

ஐயா லக்ஷ்மணரே,

உடம்பு எப்படி இருக்கிறது?

சௌதாமினி

★

அன்புள்ள சௌதாமினி,

நாளுக்கு நாள் இளைத்துத் துரும்பாகிக் கொண்டிருக்கிறது.

லக்ஷ்மண்

★

குமாரி செளதாமினி அவர்களுக்கு,

தங்கள் இல்லத்தில் மூட்டைப்பூச்சி மருந்து அடித்த வகையில் எங்கள் பில் தொகை இன்னும் வந்துசேரவில்லை. அதை நினைவூட்டவே இதை எழுதுகிறோம்.

தங்கள் சம்மதம் இல்லாமலே மருந்து தெளிக்கப்பட்டதாகத் தாங்கள் கூறியிருந்தது பற்றி எங்கள் சூபர்வைசர் லக்ஷ்மணை விசாரித்தோம். தங்களுடைய பூரண அறிவுக்கும் சம்மதத்துக்கும் உட்பட்டே மருந்து தெளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே தொகையை உடனே அனுப்பவும்.

எம்.எம். பொன்னுசாமி
பொன்னுசாமி பெஸ்ட் கோ பார்ட்னர்

★

எம்.எம். பொன்னுசாமி அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. திரும்பத் திரும்பத் தாங்கள் பில் தொகையையே வற்புறுத்துவதைக் காண ஆச்சரியமாய் இருக்கிறது.

போனால் போகட்டும் என்று பேசாதிருந்தேன். இனி சொல்ல வேண்டியதுதான்.

தங்களிடமிருந்துதான் எனக்கு ரூ. 300 வரவேண்டும்.

(இந்த இடத்தில் தங்களுக்கு முழுசாய்ப் பத்து நிமிடம் தருகிறேன். மூர்ச்சை போட்டு விழுந்து, தெளிந்து எழுந்திருக்கவும்.)

தங்கள் சிப்பந்திகள் வீடு பூரா மருந்து தெளிக்குமுன் போதுமான எச்சரிக்கை எடுத்துக் கொள்ளாததே இதற்குக் காரணம். பழைய நியூஸ் பேப்பர்களைப் போட்டு எதை எதையோ மூடியவர்கள், ஸ்டாண்டின் மீது பிரித்துப் போட்

டிருந்த என் புத்தம் புது ஆரஞ்சு நிற ஸாரியை மறைக்க மறந்து விட்டார்கள். தங்கள் தயாரிப்பான அழுக்குப் பிடித்த கறுப்பு எண்ணெய் அதன் மீது விழுந்து, புடவை குட்டிச் சுவர். அதை உடுத்துக் கொண்டு நேற்று ஆபீசுக்குப் போய்ப் பார்த்தேன். மொத்தப் பேரும் லீவு போட்டுவிட்டு வீட்டுக்குப் போய் விட்டார்கள். என் எண்ணெய் நாற்றமும், எண்ணெய்க் கறையும் சகிக்கவில்லையாம். இனி ஒரே ஒருமுறைகூட அந்த ஸாரியை நான் அணிய முடியாது. வேலைக்காரிக்குக் கொடுக்க முயன் றேன். இன்னொருதரம் இந்த மாதிரி அவளை அவமதித்தால் வேலையை விட்டு நின்று விடுவாளாம். சொல்லிவிட்டாள்.

மேற்படி நைலக்ஸ் ஸாரியின் விலை: ரூ.300. தங்கள் பில் தொகையைக் கழித்து மீதியை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எம்.ஓ.வை எதிர்பார்க்கும்
சௌதாமினி

★

சூபர்வைசர் லக்ஷ்மணுக்கு,

வாடிக்கையாளரின் புகார் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. விளக்கம் தேவை.

எம்.எம். பொன்னுசாமி

★

நிர்வாகி அவர்களுக்கு,

வணக்கம்.

குமாரி சௌதாமினியின் புகார் கிடைக்கப் பெற்றேன். நானும் மருதமுத்துவும் மூட்டை மருந்து தெளித்த போது ஆரஞ்சு நிறத்தில் குமாரி சௌதாமினிதான் தென்பட்டாரே தவிர, ஸாரி எதுவும் கண்ணில் பட்டதாகத் தெரியவில்லை.

எனினும், தவறு எங்களுடையதாக இருக்குமெனில் மன்னிக்குமாறு குமாரி செளதாமினிக்கு இன்று தனிப்பட்ட முறையில் எழுதியிருக்கிறேன். விரைவில் பில் பாக்கி தீர்ந்து விடுமெனத் தாங்கள் உறுதியாய் நம்பலாம்.

லக்ஷ்மண்

★

அன்பும் பண்பும் பெருந்தன்மையும் வள்ளண்மையும் கொண்ட குமாரி செளதாமினி அவர்களுக்கு,

லக்ஷ்மண் பணிவுடன் எழுதிக் கொண்டது. தங்கள் ஸாரிக்கு ஏற்பட்ட ஊறு குறித்துப் பெரிதும் வருந்துகிறேன்.

பூச்சி மருந்து பில் பாக்கியைத் தயவு செய்து தீர்த்து விடுங்கள். உங்களுக்கு எங்கள் கம்பெனியின் நிலைமை தெரியாது. இன்றோ நாளையோ என்று நடையில் போட்ட 'இது'வாக இருக்கிறது. பட்டணம் வர வரக் கெட்டுப் போச்சு. பல வீடுகளில் இப்போது மூட்டைப் பூச்சி கிடையாது. எல்லோரும் வரவரச் சந்தோஷமாக இருக்கத் தொடங்கியிருப்பதால், மூட்டை மருந்தை அருந்துகிறவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இதனால் எல்லாம் 'பொன்னுசாமி பெஸ்ட் கோ' வின் வியாபாரம் தினேதினே படுத்து வருகிறது.

இந்நிலையில் தங்களைப் போன்ற வசதி உள்ளவர்கள்கூட, கொடுக்க வேண்டிய பாக்கியைக் கொடுக்க மறுத்தால் என்ன ஆவது? கடையை மூடிவிடுவார் முதலாளி. மூடப்பட்ட கதவுக்கு வெளியே நிறுத்தப்படுகிற முதலாவது ஆள் நானாகத்தான் இருப்பேன்.

உடனே ரூ. 103-50 அனுப்புங்கள்.

தங்களை என்றும் மறவாத

லக்ஷ்மண்

★

அன்புள்ள லக்ஷ்மண்,

தங்களிடம் ஒரு குறை என்னவென்றால், ஒரு பிரசினையின் ஒரே பக்கத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான்.

என் குடும்பம் கஷ்டமான நிலையில் இருப்பதாக முன்பே எழுதியிருந்தேன். என் அப்பாவை அவர் வேலை செய்த கம்பெனியிலிருந்து திடீரென்று நீக்கிவிட்டார்கள். தினம் வகைவகையாக டிபன் எடுத்துக் கொண்டு ஆபீசுக்குப் போய் வந்துகொண்டிருந்த என் அருமைத் தந்தை இப்போது வீட்டிலேயே உட்கார்ந்து பட்டாணி கொறித்துக் கொண்டிருக்கிறார் எனில் பார்த்துக் கொள்ளுங்கள்.

இந்நிலையில் அவர் புலிக்கடி சிங்கக்கடி முதலியவற்றைக் கூடப் பொறுத்துக் கொள்ளத் தயாராயிருப்பாரே தவிர, கேவலம் மூட்டைக் கடிக்காக ரூ. 103-50 எடுத்துக் கொடுப்பாரா?

வேண்டாம். இரக்கம் வையுங்கள்.

அழுத கண்ணும் சிவந்த மூக்குமாக
சௌதாமினி

★

அன்பே சௌதாமினி!

இரவு பூரா யோசித்தேன். புரண்டு புரண்டு சிந்தனை செய்தேன். சௌதாமினியின் தந்தையா? சொந்த வயிற்றுப் பிழைப்பா? என் கட்டிலின் இந்தப் பக்கம் உன் தந்தை. அந்தப் பக்கம் என் முதலாளி. இருவர் கையிலும் தூக்குக் கயிறு.

இறுதியில் முடிவுக்கு வந்தேன். மூட்டைப்பூச்சி மருந்துக் கம்பெனிதான் பெரிது. ஏனெனில், இந்த ரூ.103-50-ஐப்

பொறுத்துத்தான் அதன் வாழ்வு — ஆக என் வாழ்வு —இருக்கிறது.

சௌதாமினி! காதலுக்காக ரூபாயைத் துறந்தவர்கள் அனேகர் இருக்கலாம். ஆனால் ரூபாய்க்காகக் காதலைத் துறந்தவன் இந்த ஒரே ஒரு,

லக்ஷ்மண்

★

மோசம் போனேன் லக்ஷ்மணா!

திடீரென்று இன்று காலை முதல் அப்பாவைக் காணோம். ஐயோ! வெப்பமானி குளிர்மானி போல் அவர் ஒரு மகாமானியாயிற்றே! என்ன செய்தாரோ தெரியவில்லையே! பில் பணம் கொடுக்க முடியாமல்... முடியாமல்... பகுக்... விகுக் — க்ஹூம்... ப்பீம்ம்... புகுக்...

சௌக்தாகுக்மினிகுக்

★

அன்பே சௌதாமினி!

அப்பாவைத் தேடுவது அப்புறம், முதலில் உன் வீட்டு அலமாரிகளைத் தேடு. மூட்டைப் பூச்சி மருந்தை ஸ்ப்ரே செய்தது போக, பாக்கியை ஒரு சீசாவில் கொட்டி, மாடிப் படியின் கீழே வைத்து விட்டானாம் பாவி மருதமுத்து. அதை இப்போதுதான் சொல்கிறான். தலைமறைவாய்ப் போன அப்பா சீசாக் கையாகப் போனாரா? வெறும் கையாகப் போனாரா?

லக்ஷ்மண்

★

பிரியமுள்ள லக்ஷ்மண்,

பதறேல். சிதறேல்.

அப்பா ஓடியது வீட்டை விட்டோ அல்லது தற்கொலைக்கோ அல்ல.

அப்பாவுக்கு ஞாபக மறதி அதிகம். அடிக்கடி எந்த லெட்டரையாவது டிராப்டையாவது தொலைத்துக் கொண்டே இருப்பார்.

ஆபிசில், மூவாயிரத்தைந்நூறு ரூபாய் பதினெட்டுப் பைசா வுக்கான டிராப்டொன்றை அவர் தொலைத்து விட்டதால், அவருக்குத் தலை முழுகி விடுவதென்று தீர்மானம் செய்து, வீட்டுக்கு அனுப்பியும் விட்டார்கள்.

இந்த நிலையில்தான் தாங்கள் வந்ததும், மருந்து அடித் ததும் நிகழ்ந்தன. மூன்று நாள் வரை மருந்தின் நாற்றம் அடித் தது. பிறகு வேறு என்னென்னவோ நாற்றமெல்லாம் வந்து, நாசியைப் பிடுங்க ஆரம்பித்தது. கடைசியில் அப்பா மோப்பம் பிடித்துப் பிடித்து, நாற்றத்தின் மூலஸ்தானத்தைக் கண்டு பிடித்தார். விட்டத்தின் கோடியில், பரண் இடுக்கில், ஓர் எலி வளை! அங்கே ஓர் எலி செத்துக் கிடந்தது — தங்கள் கம் பெனியின் மூட்டைப் பூச்சி மருந்தினால்!

எலி மட்டுமா? அப்பா கெட்டுப் போக்கிய டிராபடும் அங்கே இருந்தது! சாவதற்கு முன் மேற்படி எலி அதை இழுத்துப் போய்த் தன் வளையில் வைத்துக் கொண்டிருக்கிறது. சுருக்கமாக:

அப்பாவுக்கு வேலை கிடைத்துவிட்டது. எனக்கும், 'சே! பணம்தான் இந்த மனிதருக்குப் பெரிது!' என்று தங்கள் மீது ஏற்பட்டிருந்த வெறுப்பும் பறந்து விட்டது. கையிலே நாலு கல் மட்டும் கிடைத்ததோ, உங்களுக்கு ஒரு கோவில் கட்டி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்!

சௌதாமினி

★

கண்ணே சௌதா!

செத்த எலி, தியாகச் செம்மல் எலி. முதலில் அதற்கு ஒரு கோவில் கட்டு.

ஏன்?

நொடித்துக் கிடந்த பொன்னுசாமியைத் துடித்து எழ வைத்தது அந்த எலிதான்.

எப்படி?

மூட்டைப்பூச்சி மருந்துக்கு மார்க்கெட் கம்மி. போட்டி அதிகம். இந்த நிலையில், தனது தயாரிப்பு, எலியை ஒழிக்கும் என்று தெரிந்தால் ஏன் துள்ள மாட்டார்? எலி வளைகளைத் தேடிக் கொண்டு இந்தியாவின் பரந்த வயல் வெளிகளுக்குக் கிளம்பி விட்டார்! நீயும் உடனே கிளம்பு — கடற்கரைக்கு.

லக்ஷ்மண்

★

9. மணி என்ன ஆகிறது?

வசந்தாவுக்கு,

இன்று பூரா உன்னோடு நான் பேசப் போவதில்லை. எல்லாம் எழுத்து மூலம்தான். புருஷனென்றால் வரவர உனக்கு அலட்சியமாகி விட்டது. ராத்திரி படுக்கும்போது படித்துப் படித்துச் சொன்னேனே. அப்படி அலட்சியம் பண்ணுவாயா? காலை நாலரை மணி வண்டியைப் பிடிக்கப் போக வேண்டும், எழுப்பு என்று நான் சொன்னதை நீ இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் விட்டதை நான் மறக்கவே மாட்டேன். என் அம்மாவைப் பார்க்கத்தானே ஊருக்குப் போகிறேன்! அதுவே

உன் அம்மாவாயிருந்தால்? இரண்டு மணிக்கே எழுப்பித் துளைத்தெடுத்திருக்க மாட்டாயா?

சந்துரு

★

கணவருக்கு,

எனக்கும் வக்கணையாய் எழுதத் தெரியும். அதை நிரூபிக்கவே இக்கடிதம். எதற்கெடுத்தாலும் என் அம்மா மண்டையை உருட்டுவது உங்களுக்கு வழக்கமாகி விட்டது. கல்யாணமான இந்த ஒரு மாதத்துக்குள் நூறு தடவையாவது அவளைத் திட்டியிருப்பீர்கள்.

இன்று காலை எழுப்பாதது என் தப்பல்ல. உங்கள் அழகான அலாரம் டைம்பீஸ் சமயத்துக்கு மணியடிக்காமல் மட்டம் போட்டு நின்று விட்டது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

வசந்தா

★

வசந்தா,

அலாரத்தின் மீது பழியைப் போட்டுத் தப்ப முடியாது. நம் கல்யாணத்தின் போது உன் அருமை அண்ணன் கொடுத்த அற்புதப் பரிசுதான் அது. ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஸ்பெஷலாய் வரவழைத்ததாக அவன் கதை அளந்தது உனக்கு மறந்துவிட்டதா?

சந்துரு

★

சரி சரி. அம்மாவை விட்டுவிட்டு அண்ணாவைப் பிடித்துக் கொள்ள வேண்டாம். சாப்பிட வாருங்கள்.

வசந்தா

★

சாப்பாட்டை அலாரத்துக்குப் போடு. அல்லது அலாரத்தைச் சாப்பாட்டுக்குப் போடு. எனக்கு ஒரு மண்ணும் வேண்டாம்.

சந்துரு

★

எனக்கும் வேண்டாம்.

வசந்தா

★

ஏய்!

மணி பன்னிரண்டு அடிக்கப் போகிறது. சாப்பிடாமல் எதற்காக மூலையில் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருக்கிறாய்?

சந்துரு

★

நீங்கள் சாப்பிடாத சாப்பாடு எனக்கு மட்டும் எதற்கு? லீவு நாள் என்றால் எவ்வளவு சிரித்து வேடிக்கை பண்ணித் தமாஷாய் இருப்பீர்கள்? காலையிலிருந்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல், துண்டுக் காகிதங்களில் இப்படிக் கிறுக்கித் தந்து கொண்டிருக்கிறீர்களே? எனக்கு அழுகை அழுகையாய் வருகிறது. ஒரே மாதத்திற்குள் நான் அவ்வளவு கசப்பாகி விட்டேனா?

கொஞ்சம் முன்னால் யாரோ உங்கள் ஆபீஸ் மானேஜராம். வாசலில் வந்து கூப்பட்டார். நீங்கள் மௌன விரதம் என்று சொல்லி அனுப்பி விட்டேன்.

வசந்தா

★

புண்ணியவதி!

நல்ல காரியம் செய்தாய். புருஷன் வீட்டில் கால் வைத்த முப்பதாவது நாள் அவன் உத்தியோகத்துக்கே உலை வைத்து விட்டாய். எங்கள் மானேஜருக்கும் எனக்கும் ரொம்ப நாளாய்த் தகராறு. என் தலைக்கு வேட்டு வைக்க வேளை பார்த்துக் கொண்டிருந்தார். மேலதிகாரி வந்து கூப்பிட்டபோது பணிவு காட்டவில்லை என்று சாக்குச் சொல்லி நாளைக்கே சீட்டுக் கிழிக்கப் போகிறார். சந்தோஷப்படு.

நான் உன்னோடுதானே பேசப் போவதில்லை என்று சொன்னேன்? ஆபீஸ் மானேஜர் வந்தால் துரத்தி விரட்டு என்றா சொல்லியிருந்தேன்?

நாளையிலிருந்து வீட்டிலேயே உட்கார்ந்திருப்பேன். இருபத்து நாலு மணிநேரமும் சண்டை போட்டுக் கொண்டே யிருக்கலாம். சந்தோஷம் தானே?

சந்துரு

★

உங்களுக்கு இணையாய்ப் பேச — தப்பு — எழுத எனக்குத் தெரியாது. ஆபீசில் ஆயிரம் தப்புத் தண்டா பண்ணி விட்டு, உத்தியோகம் போனால் என் தலையில் போடப் பார்க்கா தீர்கள்.

நான் இன்னும் சாப்பிடவில்லை.

வசந்தா

★

ஆ! இன்னுமா சாப்பிடவில்லை? மணி இரண்டு. உனக்கு உடம்புக்கு ஆகாது. பிடிவாதம் பிடிக்காதே.

சந்துரு

★

மணி மூன்று. சொல்வதைக் கேள்.

சந்துரு

★

மணி நாலு. அப்புறம் நான் ரொம்பப் பொல்லாதவனாகி விடுவேன். எழுந்து போய்ச் சாப்பிடு.

சந்துரு

★

''வேண்டாமென்றால் வேண்டாம். போங்கள்!''

''ஐயையோ! கடைசியில் பேசிவிட்டாயே!''

''நீங்களும்தான் இப்போது பேசிவிட்டீர்கள்!''

''தொலையட்டும். எழுந்து போய்ச் சாப்படு. மணி நாலரை.''

''மணி, மணி, மணி! என்ன மணி வேண்டியிருக்கிறது! தரித்திர மணி! சனியன் மணி! விடிந்ததும் விடியாததுமாய் அந்த மணிப் பேச்சை எடுத்ததால் இத்தனை ரகளை மணியாம் மணி! இன்னொரு தரம் மணி என்று சொல்லுங்கள்! ஐந்து நாளைக்குச் சாப்பிடுவதில்லை. அந்த அலாரத்தையும் தூக்கி வாசலில் எறிந்துவிட்டு வருகிறேன் பாருங்கள்! அது இருப்பதால்தானே மணி மணி என்று புலம்புகிறீர்கள்? சனியன் மணி!''

''வசந்தா! ஏய் வசந்தா! வேண்டாம்! நில்!''

''சும்மா இருங்கள்!''

''வசந்தா! அலாரத்தை என்ன பண்ணினாய்? எங்கே வைத்தாய்?''

''ஏன்? அது எதற்கு இப்போது?''

''நீ அதை வாசல் பக்கம் எங்கேயோ கொண்டு போய்ப் போட்டுவிட்டு வந்து படுத்துக் கொண்டாயே. அப்போது பிடித்துத் தேடுகிறேன்.''

''எல்லாம் நடைபக்கத்தில் இருக்கிற அலமாரியில்தான் கிடக்கிறது!''

''அங்கெல்லாம் தேடிப் பார்த்து விட்டேன். காணோம்.''

''காணோமா? இருங்கள். நான் போய்ப் பார்க்கிறேன்... ஐயையோ! இங்கேதானே வைத்தேன்? நீங்கள் எங்கேயாவது எடுத்து வைத்து விட்டு விளையாடுகிறீர்களா?''

''நன்றாயிருக்கிறதே கதை! நீ இந்தண்டை வந்தபோது, வாசல் பக்கம் யாரோ நடமாடுகிற மாதிரி ஓசை கேட்டது.

போய்ப் பார்த்தேன். கடியாரத்தையும் காணவில்லை, ஆளை யும் காணவில்லை!''

''ஐயையோ! எவனாவது திருடிக் கொண்டு போயிருப் பானோ?''

''மூஞ்சியைப் பார், தரித்திரம்! இருநூறு ரூபாயோ முன் னூறு ரூபாயோ விலை என்று உன் அண்ணன் சொன்னான்! உனக்கு நிஜமான கோபம் என்றால் வாசலில் அல்லவா தூக்கி எறிய வேண்டும்! எறியவும் மனசில்லை, வேஷமும் போட வேண்டும்! எறிகிற மாதிரி வாசலில் வைத்துவிட்டு வந்தாய்! எவனோ எடுத்துக் கொண்டு போகிற மாதிரி போய்விட்டான்! எவ்வளவு அருமையான அலாரம்!''

''கடியாரம் போனால் போகட்டும். நாளைக்கு ஊரில் இருந்து வரப் போவதாய்க் கடிதம் போட்டிருக்கிறானே அண்ணா? வந்ததும் அந்த அலாரத்தைப் பற்றித்தானே கேட் பான்! என்ன பதில் சொல்வேன்?''

''வாசலில் எறிந்தேன். எவனோ எடுத்துக்கொண்டு போய் விட்டான் என்று சொல்லு! உனக்குத் தைரியமில்லா விட்டால் நான் வேண்டுமானால் சொல்கிறேன்.''

''விளையாடாதீர்களேன்! தயவு பண்ணிப் போய்ப் பாருங்களேன்! அக்கம் பக்கத்தில் விசாரியுங்களேன்! அண்ணா ரொம்ப முன்கோபக்காரனாயிற்றே! கடவுளே! ஈசுவரா! எனக்குத் தலை சுற்றுகிறதே!''

''ஆ! வசந்தா! மயக்கமா? ஏய் வசந்தா! இதோ பார்... இந்தா, தண்ணீர் குடி. இப்படியே படுத்திரு. நான் போய்ப் பார்க்கிறேன்!''

★

''வசந்தா! வசந்தா! எழுந்திரு!''

''ஆ! என்ன கையில்?''

''தெரியவில்லையா? காணாமற்போன அலாரம்!''

''எவ்வளவு சீக்கிரம் கண்டுபிடித்து விட்டீர்கள்! அப்படியானால் நான் சொன்னது சரிதான்! நீங்கள்தான் ஒளித்து வைத்திருந்து...''

''ஒகோ! இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்கள் அண்ணா வருவான். அவனையே கேள். அவனிடமிருந்துதான் பறித்துக் கொண்டு வந்தேன்!''

''அண்ணாவா! அவன் நாளைக்கல்லவா வரப்போவதாக எழுதியிருந்தான்.''

''ஒருநாள் முன்னாடியே லீவு கிடைத்து விட்டதாம். புறப்பட்டு வந்தானாம்.''

''சரி. அவன் ஏன் அலாரத்தை எடுத்துக் கொண்டு போனான்?''

''நீயே டஜன் கணக்கில் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாயே? நான் ஒன்று கேட்கிறேன். உன் அண்ணா பெயர் என்ன?''

''என்ன கேள்வி இது!''

''சொல்லேன்.''

''மணி.''

''மணியைப் பற்றி என்னவெல்லாம் திட்டினாய்?''

''நானா?''

''நீயேதான்! சனியன் மணி, தரித்திர மணி, அந்த மணியின் பேச்சு வந்தாலே பற்றிக்கொண்டு வருகிறது...''

''ஐயையோ, ஐயையோ! அதெல்லாம் கடியார மணியை அல்லவா சொன்னேன்!''

''ஊரிலிருந்து வந்திருக்கும் உன் முன்கோபக்கார மணி அண்ணாவுக்கு அதெல்லாம் தெரியுமா? வீட்டுக்குள் நுழை யும் போது, காது நிறையத் திட்டு விழுந்தால்? சீ, இந்த நன்றி கெட்ட தங்கையின் முகத்திலே விழிக்கக் கூடாது என்று பஸ் ஸ்டாண்டுக்குத் திரும்பிப் போய்விட்டான் கோபமாக! போகிற போக்கில், அனாதையாகக் கிடந்த அவனுடைய அருமைப் பரிசையும் தூக்கிக் கொண்டு போய்விட்டான்!''

''ராமா ராமா! நீங்கள் விளக்கினீர்களா இல்லையா?''

''சொன்னேன், சொன்னேன். இதோ வந்து விடுவான். கடைத் தெருவில் பழம், பூவெல்லாம் வாங்கிக்கொண்டு வரு வதாகப் போயிருக்கிறான்.''

''என்னை மன்னித்து விடுங்கள், உங்கள் மானேஜர் கீனேஜர் யாரும் வரவில்லை. சும்மா உங்களைப் பேச வைப்ப தற்காகக் கதை விட்டேன். உங்கள் வேலை போகாது.''

''போகவே போகாது. மானேஜர் ஊரிலேயே இல்லை என்று எனக்குத் தெரியாதா? காலையிலிருந்து அனாவசிய மாய்ச் சண்டை போட்டது நான்தான். என்னைத்தான் நீ மன் னிக்க வேண்டும்.''

''இல்லையில்லை. என்னைத்தான் நீங்கள் மன்னிக்க வேண்டும்.''

''சரிதான்! எழுந்திரு. யாரை யார் மன்னிப்பது என்பதில் மறுபடி சண்டை வந்துவிடப் போகிறது!''

★

10. அச்சுப் பிழை!

ஜே. பாலசந்திரன்,
புகழ்பாடாப் பரப்பரம்மம் தெரு,
சென்னை–4.

அம்மணி,

சுமார் ஒரு வாரத்துக்கு முன்பு நான் மவுண்ட்ரோடில் உள்ள ஒரு புத்தகக் கடைக்குச் சென்றிருந்தேன். 'அறுசுவை உண்டி வேண்டுமா?' என்று என்னைப் பார்த்து வினவிற்று ஒரு புத்தகம். அட்டையில் காணப்பட்ட மூவர்ணச் சிற்றுண்டிகள்

என்னை மயக்கின. எனக்கு அப்போது நல்ல பசி வேளை வேறே. ஆகக் கூடி, பதினைந்து கொடுத்து, மேற்படி புத்த கத்தை வாங்கி வந்தேன்.

சாருமதி, சாருமதி என்று ஒரு பெண்ணைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டதுண்டா? (மயிலாப்பூரில் அனேகமாய் எல் லோருக்கும் தெரியும். ஆனால் யாரும் ஒப்புக் கொள்ள மாட் டார்கள்.) அந்தச் சாருமதி என்கிற பெண் என்னுடைய சொந்தத் தங்கை. க்ல்லூரியில் எல்லாவற்றிலும் முதலாவதாகவும், வீட்டில் எல்லாவற்றிலும் இறுதியாகவும் விளங்குபவள் அவள். 'அறுசுவை உண்டி வேண்டுமா?' என்ற புத்தகம் அவ ளுக்கு ரொம்ப அவசியமாக வேண்டிய ஒன்று என்று நினைத்து, அவளிடம் கொடுத்தேன் — என் போதாத காலத்தால்தான்.

மேற்படி புத்தகத்தில், 81-ஆவது பக்கத்தில், 'அவரைக் காய்த் தேன்குழல்' என்ற ஒரு வகைப் பட்சணம் தயாரிக்கும் வகை விவரிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சாருமதி, மேற்படி தேன்குழலைத் தயாரித்தாள், மேற்படி புத்தகத்தைப் பார்த்து. அதிர்ஷ்டவசமாக என் அம்மாவும் அப்பாவும் ஊருக்குப் போயிருக்கவே, நான்தான் அதை ருசி பார்த்து அபிப்பிராயம் சொல்ல வேண்டியவனானேன்.

அம்மணி, என்னென்று சொல்வேன் அதன் ருசி மோச டியை! நாக்கு அன்று மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டதுதான். இன்று வரை பிரிக்க வரவில்லை. (அதனாலேயே தான் நான் இதை எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டியதாயிற்று. இல்லாவிட்டால் நேரிலேயே வந்து, வாயாலேயே திட்டியிருப் பேன்.)

சொல்லுங்கள், அம்மணி! உப்பு மலையின் விள்ளல் ஒரு பட்சணத்தில் சேர்த்தியா? அதைத் தயாரிக்கும்படி எழுதிய தாங்களும் தாய்க்குலமாகிய பெண் குலத்தைச் சேர்ந்தவர்

தானா? உற்றார் சுற்றத்துடன் பிறவாத ஒண்டிக்கட்டையா தாங்கள்? உலகின்மீது ஏன் தங்களுக்கு இத்தனை கரிப்பு?

என் தங்கை சாருமதியின் மீதுதான் தப்பு என்று முதலில் தாவிக் குதித்தேன். ஆனால், புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியே எல்லாவற்றையும் போட்டதாக அவள் காப்பி வடிக்கட்டும் துணியைக் குறுக்கே போட்டு எட்டுத் தடவை தாண்டிச் சத்தியம் பண்ணுகிறாள்.

இதற்குத் தாங்கள் என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்
பாலசந்திரன்

பின்குறிப்பு : தங்கள் புத்தகத்தின் விலையைத் திருப்பிக் கொடுத்தாலும் போதும். நான் ராஜி செய்து கொள்ளத் தயார்.

பா.

★

திரு. பாலசந்திரன் அவர்களுக்கு,

தங்கள் கடிதத்துக்கு ரொம்பவும் நன்றி. ஆத்திரக்காரனுக்கு எதுவோ மட்டு என்பார்கள். தங்கள் கடிதம் அதை ஊர்ஜிதம் செய்துவிட்டது.

'ஒரு புத்தகத்தை வாசிக்கும் முறை எப்படி?' என்பதையே ஒரு புத்தகமாக எழுதித் தங்களுக்கு ஒரு பிரதியும், தங்கள் தங்கைக்கு ஒரு பிரதியும் அனுப்ப எண்ணினேன். ஆனால் நேரமில்லை.

ஐயா பாலசந்திரரே, ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்து, திடுப்பென்று 81-ஆவது பக்கத்தைப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை. எந்த அனுபவமும் இல்லாமல் இருக்கும், தங்களைத் திடீரென்று ஒரு பெரிய காரியாலயத்தில் மானேஜராகப்

போட்டால் எப்படித் திணறிப் போவீர்கள்? அப்படித்தான் இதிலும்.

எதுவும் ஆரம்பத்திலிருந்து வரவேண்டும். அப்படி, புத்த கத்தை ஆரம்பத்திலிருந்து பார்த்திருந்தால், பொருளடக்கத் தில் கடைசி அம்சமாக, கடைசிப் பக்கத்தில் 'பிழைத்திருத்தம்' என்ற ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதைத் தாங்கள் கண்டிருப்பீர் கள். அதன்படி, 81-ஆம் பக்கத் தயாரிப்பில், உப்பின் அளவில் ஒரு சிறு தவறு நேர்ந்திருப்பதையும் கவனித்திருப்பீர்கள். அதா வது: 'உப்பு—2 ஸ்பூன்' என்றிருப்பதற்குப் பதிலாக 'உப்பு—21 ஸ்பூன்' என்று கண்டிருப்பதை, கடைசிப் பக்கத்தில் திருத்தம் செய்திருக்கிறோம். '2' என்பதற்குப் பக்கத்தில், எப்படியோ என்னை அறியாமல் ஒரு '1' முளைத்து விட்டது. அதுகூட '1' இல்லையென்றும், இடைவெளிக்காக வைக்கப் படும் டைப் சற்றுத் தூக்கிக் கொண்டு விட்டது என்றும் அச்ச கத்தார் சொல்கிறார்கள். அப்படியிருந்தும் திருத்தம் வெளி யிட்டிருக்கிறோம்.

எனவே, பிழைத் திருத்தத்தைப் பாராமல், 2 ஸ்பூனுக்குப் பதில் 21 ஸ்பூன் உப்புப் போட்டது தங்கள் தங்கையின் தவறு தான்.

இங்ஙனம்,
சசிரேகா

பி.கு. : புத்தக விலையை வாபஸ் பெறும் எண்ணத்தை விட்டொழிக்கவும். அறுசுவை உண்டி வேண்டுமா? இரண் டாம் பாகம் தயாராகிறது. தேவைப்பட்டால், இருபது ரூபாய் அனுப்பி வைக்கவும்.

★

அம்மா சசிரேகா,

மைசூர் ரசத்தின் ஜம்மென்ற நெடியுடன் தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன். என் முந்தின கடிதத்தில் தெரியாத்தன

மாகத் தங்கள் மீது கோபப்பட்டு விட்டேன்—என்று நான் எழுதப் போவதாய் நினைத்திருந்தால், அதை இக்கணமே மறந்து விடுங்கள்.

இந்தக் கடிதம் எனது இரண்டாவது புகாரைத் தெரிவிக்க வேண்டி வருகிறது.

''வெல்லப்பாகு கிளறுவது எப்படி?'' என்று, தங்கள் புத்தகத்தின் 104-ஆவது பக்கத்தில் ஒரு தயாரிப்பு இருக்கிறதல்லவா? அதைப் பற்றிய பிழைத் திருத்தம் எதுவும் காணப்படவில்லை என்று ஒரு தடவைக்குப் பத்துத் தடவையாக நிச்சயம் செய்துகொண்ட பின்னர், மேற்படி பாகை என் தங்கை சாருமதி கிளறத் தொடங்கினாள்.

சமையற்கலை விற்பன்னியே! வெல்லப் பாகு கிளறப் போய், எங்கள் வீட்டில் ஒரு புது வகையான பாத்திரம் இப்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, வாணலியும் கரண்டியும் சேர்ந்தேயுள்ள பாத்திரம். 'இந்த அதிசயத்தை ஊர் மக்கள் திரள் திரளாகச் சென்று பார்த்து வருகிறார்கள்' என்று நேற்றைய தினசரிப் பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பதைத் தாங்களும் படித்திருப்பீர்கள்.

அம்மணி! கிளறப்பட்ட பாகை இறக்குவது எப்படி, வாணலியிலிருந்து கரண்டியைப் பிடுங்கி எடுப்பது எப்படி? ஆகிய குறிப்புக்கள், தயாராகி வரும் தங்களது இரண்டாம் பாகத்தில் இருக்குமா? இருந்தால் உடனே அனுப்பி வைக்கவும். அனாவசியமாக, அற்புதமான வாணலி ஒன்றும் அருமையான கரண்டி ஒன்றும் வீணானது குறித்து எங்கள் பெற்றோர் மிகக் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

இங்ஙனம்
பாலசந்திரன்

பி.கு. : ஒரு பெரிய காரியாலயத்தில் படிப்படியாக வராமல் திடுமென்று மானேஜராக வந்தால் நான் திணறுவேன் என்ற தங்கள் கூற்றை நான் மறுக்கிறேன். நான் அப்படித்தான் இன்றளவும் மானேஜராக இருந்து வந்திருக்கிறேன். என் காரியாலயத்தில் யாரும் என்னை முணுமுணுத்ததுகூட இல்லை. என் அப்பாதான் மேற்படி காரியாலயத்தின் முதலாளி.

பா.

★

அன்புள்ள ஐயா,

தாங்கள் ஒரு பெரிய காரியாலயத்தின் மானேஜர் என்று தெரிந்த பிறகு ரொம்ப அடக்க ஒடுக்கமாக இதை எழுத வேண்டியிருக்கிறது. அப்படியும், ஏதாவது தப்பாக எழுதியிருப்பேனாகில் மன்னிக்க வேண்டுகிறேன்.

இரண்டாம் புகாரைப் பொறுத்தமட்டில் தவறு என்னுடையதுதான். ஒப்புக் கொள்கிறேன். வெல்லப் பாகு கிளறும் போது அடுப்பில் தீ எத்தனை இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட மறந்து விட்டேன். தீ அதிகமானால், கரண்டியும் பாகும் பிடித்துக் கொள்ளக் கூடியது இயற்கையே.

இந்த மாதிரி விஷயங்களில் வெறும் ஏட்டுப் படிப்பு மட்டும் போதாது என்பதையே தங்கள் தங்கையின் அனுபவங்கள் காட்டுகின்றன. சிறிது நேரடியான ஞானமும் வேண்டும். ஆசிரியர் விட்டதைச் சேர்த்துக் கொள்ளவும், சொன்னதைப் புரிந்து கொள்ளவும் சூட்சும புத்தி வேண்டும்.

ஆகவே, தாங்கள் தங்கள் தங்கையை ஒருமுறை என் இல்லத்துக்கு நேரில் அழைத்துக் கொண்டு வருவது நலம். வெல்லப் பாகு பற்றி விளக்கமாய்ச் சொல்லி, செய்தும் காட்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
சசிரேகா

அன்புள்ள சசிரேகா,

சாருமதி வெகு மும்முரமாய்ப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் வருவதற்கில்லை. நான் வந்தால் விளக்குவீர்களா? நான் அவளுக்குத் தனியே விளக்குகிறேன்.

அன்புள்ள
பாலசந்திரன்

பி.கு. : வருகிற ஞாயிற்றுக்கிழமை நம் சந்திப்பை வைத்துக் கொண்டால் என்ன?

பா.

★

பாலசந்திரன்,

மிக்க மகிழ்ச்சி. ஆனால் ஞாயிற்றுக்கிழமை வேண்டாம். திங்கள்கிழமை ஆகட்டும்.

சசிரேகா

★

ச.ரேகா!

முடியாது, முடியாது. ஞாயிறன்றே வருவேன்.

பா. சந்திரன்

★

அன்புள்ள நண்பரே,

இதென்ன பிடிவாதம்? திங்களன்றுதான் சரிப்படும். ஞாயிறன்று தங்கள் தலை தெரிந்ததோ, ஒளிந்து கொண்டு விடுவேன்.

சசிரேகா

★

என் அன்புள்ள சசிரேகா,

ஞாயிற்றுக்கிழமையன்று நான் வந்தபோது நீ நடந்து கொண்ட மர்மமான விதம்தான் என்னை இக்கடிதம் எழுதத் தூண்டிற்று.

மர்மங்களாவன :

1. நான் வந்து சேர்ந்ததும், நீ ஏன் உள்ளே இருந்து கொண்டே இல்லையென்று வேலைக்காரியிடம் சொல்லியனுப்பினாய்? உன் கனகாம்பரம் சூடிய தலையை நான் காண வில்லை என்ற நினைப்பா?

2. அத்துமீறி நான் உள்ளே நுழைந்ததும் நீ ஏன் காச்சு மூச் சென்று கத்தாமல் கையைப் பிசைந்து கொண்டு குழைந்து குழைந்து பேசினாய்?

3. 'வெல்லப் பாகு தயாரித்துக் காட்டு' என்று நான் சொன்னதும் நீ ஏன் உன் கருவண்டன்ன கண்களைச் சுழற்றிக் கொண்டு மிரள மிரள விழித்தாய்?

4. பிறகு, ஏன் முடியவே முடியாதென்று மறுத்தாய்?

5. அதற்கும் பிறகு ஒரு வழியாய்ச் சம்மதித்ததும், "புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு சொல்லுங்கள், அதன்படி செய்கிறேன். சரியாய் வருகிறதா இல்லையா என்று பாருங்கள்" என்று சொன்ன காரணமென்ன? புத்தகத்தின் ஆசிரியை, நினைவிலிருந்தே செய்யக் கூடாதா?

6. அடுப்பில் நீ கிளறத் தொடங்கிய உடனே, நான் வேண்டுமென்றே அந்தப் பக்கத்தைக் கிழித்து அடுப்பில் போட்டு எரித்ததும் நீ ஏன் அப்படி அலறினாய்?

7. அதன் பிறகு, தானாகவே ஒரு வழியாய்க் கிளறி முடித்து, அடுப்பிலிருந்து இறக்கி, என்னிடம் பாகைக் கொஞ்சம் கொடுத்து விட்டு ஏன் தலைதெறிக்க வெளியே ஓடிப் போனாய்?

8. போனவள் ஏன் திரும்ப வரவேயில்லை?

9. அறையின் மூலையில் கிடந்த கைத்தடியும் ருத்திராட்ச மாலையும் யாருடையவை?

உடனே விளக்கம் தேவை.

உன் அன்புள்ள
பாலசந்திரன்

(முன்னாலேயே சொல்லியிருந்திருக்க வேண்டிய) குறிப்பு: வெல்லப் பாகு என்ன அற்புதமாயிருந்தது தெரியுமா?

பா.

★

அன்புள்ளவரே,

நிஜமாகவா பாலு, பாகு அற்புதமாகவா இருந்தது? நான் நம்பவே மாட்டேன்.

சசிரேகா

★

ரேகா,

கடிதத்தில் கேட்டவற்றுக்கு விடை கிடைக்காததோடு, மர்மமும் இன்னும் சிக்கலாகிறது. வெல்லப் பாகு நன்றாக இருந்ததுபற்றி நீ ஏன் இத்தனை ஆச்சரியப்பட வேண்டும்?

பாலசந்திரன்

★

ஏனென்றால், நான் என் ஆயுளில் முன்னே பின்னே அடுப்பண்டை போனது கிடையாது.

ச. ரேகா

ஹா!

பா.

★

ஹாஹ்ஹா! விரிவான கடிதம் விரைவில் வருகிறது.

ச.

★

அன்புள்ள பாலசந்திரன்,

என் குற்றத்தை மன்னித்தேன் என்று உங்கள் வெல்லப் பாகு வாயால் சொல்லுங்கள் போதும்.

சமையலைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. அடுப்பை மூட்டக்கூட அறியாத அப்பாவி நான்.

என் பாட்டி சமையலில் சூரி. அவள் அடிக்கடி சொன்னதை அப்படியே என் பெயரில் புத்தகமாய் எழுதி வெளியிட்டுப் பணம் பண்ணப் பார்த்தேன். அவ்வளவே. தாங்கள் நேரில் வருமுன், பாட்டியிடம் விளக்கமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள எண்ணினேன். ஆனால் திடீரென்று அவள் கிராமத்துக்குப் போய்விட்டாள். திங்களன்றுதான் திரும்பினாள். ஞாயிற்றுக் கிழமை உங்களை வரக் கூடாதென்று சொன்ன காரணம் அதுவே.

தாங்கள் கண்ட ருத்திராட்ச மாலையும் கைத்தடியும் என் பாட்டிக்குச் சொந்தமானவை.

நிற்க. நானும் தங்களிடம் விளக்கிக் கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று உண்டு.

தங்கள் தங்கையைப் பற்றிப் பேச்செடுத்த போதெல்லாம் தாங்கள் ஏன் அப்படித் திருதிருவென்று விழித்தீர்கள்?

உங்கள் அன்புள்ள
சசிரேகா

ரேகா!

ஏனென்றால், எனக்குத் தங்கையே இல்லை.

பா.

★

பாலசந்திரன்,

ஹா!

என் அன்புள்ள சசிரேகா!

ஒரு பொய்யிலிருந்தே உன் தொடர்பைத் தொடங்கி வைத்ததற்கு என்னை மன்னிப்பாயா?

அன்று புத்தகக் கடையில் 'அறுசுவை உண்டி வேண்டுமா' என்ற புத்தகத்தைத் தற்செயலாக புரட்டியபோது, 6-ஆம் பக்கத்தில் முன்னுரைக்கு எதிரில், 'புத்தக ஆசிரியை' என்ற அடிக்குறிப்பில் வெளியாகியிருந்த உன் புகைப்படத்தைக் கண்டேன். கண்டதும், கண்டதும்... இல்லை, நேரில் சொல்கிறேன். எழுத வரவில்லை.

'புத்தகம் பிரமாதம்' என்று எழுதினால் பதில் வராது என்பதை நான் அறிவேன். புகழ்ந்து எழுதுபவருக்குப் பதில் போட அனைவருக்குமே சோம்பல் ஏற்படும். குறை சொல்லி எழுதினால் உடனே சீறிப் பாய்ந்து பதில் விடுப்பார்கள். இது என் அனுபவச் சோலையில் பழுத்த பழம். (இன்னும் டஜன் கணக்கான பழங்கள் கைவசம் உண்டு இதுபோல.)

அதையே உன் விஷயத்தில் பரீட்சித்தேன்; வெற்றி பெற்றேன்.

என்றும் உன்னுடைய
பாலசந்திரன்

பி.கு. : நாளை மாலை ஏதாவது வேலை இருக்கிறதா?

பா.

★

ஆமாம். இருக்கிறது. நாளை ஒருவரைக் கடற்கரையில் சந்திக்க வேண்டும்...

தங்களைத்தான்.

சசிரேகா

★

11. பூனை பிடித்தவள் பாக்கியம்

ஐயா,

நானும் இந்தப் பதினெட்டு வயதுக்குள் உலகத்தில் பலவிதமான மேதைகளை — அதாவது, பைத்தியங்களை — பார்த்திருக்கிறேன். ஆனால் பூனை வளர்க்கும் வாலிபரை இப்போதுதான் பார்க்க வாய்ப்புக் கிடைத்தது.

அடுத்த வீட்டில் வசிக்கும் ஒரு கல்லூரிப் பெண் என்கிற முறையில் நான் சில யோசனைகள் கூறலாமா?

1. தங்கள் பூனைக் குட்டியின் கால் நகங்களைக் தயவு செய்து கத்திரித்து வைக்கக் கோருகிறேன். குறைந்தபட்சம், பக்கத்து வீடுகளுக்கு வருகிற சமயத்தில் நகங்களை உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும்படியாவது கற்றுத் தரலாம். என் கையிலுள்ள கீறல்கள் சாட்சியாக இதைச் சிபாரிசு செய்கிறேன்.

2. நட்ட நடுநிசியில் தங்கள் பூனையுடன் தாங்கள் சம்பாஷணை நடத்துவதை இனிமேலாவது நிறுத்திக் கொள்ள முடியுமா? பூனையின் சப்தத்திலிருந்து மிகச் சுவாரசியமான உரையாடல் நடக்கிறது என்றே தோன்றினாலும், இரவு ஒரு மணிக்கு அது செவிமடுக்கத் தக்கதாயில்லை. அதுவும் தங்கள் பூனையின் சாரீரம் ஹைட்ரஜன் குண்டைத் தவறிப் போட்டுவிட்ட விமானியின் குரல் போல இருப்பதைத் தாங்களே கவனித்திருப்பீர்கள்.

இந்த இரண்டு யோசனைகளையும் ஏற்றுக் கொண்டால் மிக நன்றியுள்ளவளாய் இருப்பேன்.

இங்ஙனம்
கே. பாக்கியம்

★

குமாரி பாக்கியத்துக்கு,

முதற்கண் எனது ஏமாற்றத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐஸ்கிரீமொன்று ஒரு முனிவரின் சாபத்தினால் பெண்ணாகப் பிறந்தாற் போலவும், மோகன ராகம் தாவணி அணிந்து நடந்தாற்போலவும், திருக்குறளிலுள்ள கடைசிப் பாடல்கள் பொட்டிட்டுப் பூ முடித்து நின்றாற் போலவும் விளங்கிய தங்களுக்கு ஒரு ஷீலா என்றோ ஊர்மிளா என்றோ மோகனகுமாரி என்றோ பெயர் இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். பாக்கியம் என்ற கர்னாடகப் பெயர், பிளாஸ்டிக் கடையைத்

தகர்த்த பெருச்சாளி போல் என் கற்பனையை இடித்து நொறுக்கி விட்டது.

நிற்க (என் கண் முன்னாலேயே.)

தாங்கள் இவ்வளவு பதற்றக்காரர், அவசரக் கிளி என்று எனக்குத் தெரியாமற் போய்விட்டதே. தாங்கள் சில யோசனைகள் கூறினீர்கள். நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தேன். அதற்குள் என் செல்லப் பூனையை என்னவோ செய்துவிட்டீர்களே? நியாயமா? அதைக் காணாமல் நான் தவிக்கிற தவிப்பு எனக்கும் அதற்குமே தெரியும்.

மிஞ்சி மிஞ்சிப் போனாலும், கொலை செய்திருக்க மாட்டீர்களே?

இப்படிக்கு
வான்

★

ஐயா,

வான் என்றால் என்ன அர்த்தம்?

பாக்கியம்

★

பாக்கியம்,

ஒரு அர்த்தமும் கிடையாது. உன் பெயர் பாக்கியம். உன் அன்பைப் பெற்ற நான் பாக்கிய —

வான்

★

அன்புள்ள வான்,

விளக்கத்துக்கு நன்றி. 'ல்'-க்குப் பதிலாக 'ன்' போட்டு விட்டீர்களோ என்று நினைத்திருந்தேன்.

உங்கள் பூனையைச் சத்தியமாய் நான் ஏதும் செய்யவில்லை. அதுவாகவே ஓடிவிட்டது போலிருக்கிறது.

போகட்டும். ஒன்பது அங்குல நீளமும், நாலு அங்குல உயரமும் நாலு காலும் ஒரு வாலும் கொண்ட ஒரு பிராணி யிடம் உங்களுக்கு இத்தனை பாசமா! அதைப் பிரிந்ததால் தாங்கள் இப்படிக் கூட உருக்குலைந்து போவீர்களா? ஐயோ, சுந்தரவதனரான தாங்கள் கந்தரகூளமாக மாறும் அளவுக்கா அந்தப் பிரிவு தங்களை வாட்டி விட்டது?

புறப்பட்டேன் இன்றே.

உங்கள் பூனையைக் கண்டுபிடித்த பின்னரே மறு வேலை! நாளுக்கு நாள் உங்கள் திருமேனி கோரமாகிக் கொண்டிருக் கிறது. மிலிடரி வான் போலவும், போலீஸ் வான் போலவும் கம்பீரமாகக் காட்சியளித்த தாங்கள் ஆம்புலன்ஸ் வான் போலச் சோக வண்டியாய் மாறிவிட்ட துயரத்தை இனியும் தாங்கேன்.

பாக்கியம்

★

என் அன்புமிக்க பாக்கியம்!

பூனால் பூகட்டும் பூடா என்று விட்டுவிடலாம், பூனை விஷயத்தை. ஆனால் எனக்காக நீ மலையையே புரட்டும் போது, உனக்காக நான் ஒரு துரும்பையாவது எடுத்துப் போட வேண்டாமா?

இதோ ஒரு தடையம்.

நகரத்துக்கு வடமேற்கே 'அழகியா பிள்ளை பூங்கா' என்று ஒன்று இருக்கிறதல்லவா? காணாமற் போன பூனை அந்தப் பக்கத்தில் உலவுவதாகக் கடைசியாக வந்த செய்திகள் தெரி விக்கின்றன. ஏன் அங்கே போய்த் தேடக் கூடாது — நாம் இருவருமாக?

வான்

★

அன்பரே!

குறிப்பட்ட பூங்காவில் பூனை இருக்கிறதோ இல்லையோ, வேறு என்னென்ன இருக்கும் என்று அறிவேன். மாலைத் தென்றல், மயக்கும் சூழ்நிலை, தனிமை, பாம்பு — இவ் வளவும் உண்டு அந்தப் பூங்காவில்.

வருகிறேன். தாங்கள் பூனையைக் கெட்டுப்போக்கிய மாதிரி, நானும் ஒன்றைக் கெட்டுப் போக்கிவிட்டேன் —என் இருதயத்தை. அதையும் தேடி எடுத்துக் கொள்ள எண்ணு கிறேன்.

மாலை 6 மணிக்குச் சந்திப்போம்.

உங்கள்
பாக்கியம்

★

மிஸ்டர் வான்!

விளையாட வேண்டாம். மிகுந்த கோபத்துடன் இதை எழுதுகிறேன்.

பூங்காவில் சந்தித்தோம். பூனையைத் தேடும் பிரச்னையைத் தவிர மற்ற எல்லாப் பேச்சும் பேசினோம்.

திடீரென்று, ஆண்டவனே பார்த்து அனுப்பிய மாதிரி உங்கள் பூனை தானாகவே வந்து சேர்ந்தது. நான் எடுத்துக் கொஞ்சினேன்.

எடுத்துக் கொண்டு வீடு திரும்பினோம். இரண்டு பேரும் சேர்ந்து போனால், தெருவில் உள்ளவர்கள் தப்பாக (அல்லது சரியாக) நினைப்பார்கள் என்று சொன்னீர்கள். ஒப்புக் கொண் டேன். நீங்கள் முன்னும் நான் பின்னுமாக நடந்தோம்.

என் வீட்டை நெருங்குகிற சமயத்தில் திடீரென்று குனிந்து ஒரு கல்லைப் பொறுக்கினீர்கள். வீசியடித்தீர்கள், என் கையி லிருந்த பூனையின் மீது! அது துள்ளி ஓடி மறைந்தது.

ஓடிய பூனையை நாடி ஓடவில்லை நீங்கள். 'ஹஹ்ஹா!' என்று சந்தோஷமாய்க் கத்திக் குதித்துக் கொண்டு போய் விட்டீர்கள்!

என்ன இதெல்லாம்?

பாக்கியம்

★

என்னென்னென் பாக்கியமே!

பதில் பின்னால்; நன்றி முன்னால்.

பூங்காவில் நீ பாங்காகப் பேசிய சிங்காரப் பேச்செல்லாம் என் செவியில் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருக்கிறது. (இதற்குமேல் என்னால் 'ங்க' முடியவில்லை. மன்னிக்கவும்.)

குறிப்பட்ட கதா பூனை என்னுடையதே அல்ல! திகைக்காதே. மேற்படி பூனை, என் வீட்டில் உலாவி வந்ததுபோல் உன் வீட்டிலும் உலாவியது! அவ்வளவே, உலகத்திலுள்ள மொத்தம் 97 கோடியே 63 லட்சத்து 38 ஆயிரத்து 445 பூனைகளில் இதுவும் ஒன்று. இதை என்னுடையதென்று நினைத்தாய்; அதை நான் உடனே மறுத்திருந்தால் நம் கா— இவ்வளவு தூரம் வளர்ந்திருக்குமா? உன் அன்புக்காக ஆறு மாதமாக ஏங்கிக் கிடந்த நான் வாய்ப்பையும் பூனையையும் நழுவ விடாமல் கப்பென்று பிடித்துக் கொண்டேன்.

பின் ஏன் பிரிவினால் பித்தம் பிடித்தவன் போல் இருந்தேன்? பூனையின் பிரிவல்ல காரணம்.

என் தந்தையார் எனக்குத் திருமணம் நிச்சயம் செய்திருந்தார். எப்படிப் பொறுப்பேன் பாக்கியம்? எப்படிப் பொறுப்பேனடி? நெஞ்சிலோர் ஆலயமாக நீ இருக்க, எங்கிருந்தோ ஒரு கோட்டானைக் கொண்டு வந்து அதில் குடி புகுத்துவதா? உன்னிடம் நெஞ்சை அடைமானம் வைத்து நாட்கள் பலவா

கின்றன என்பதை எப்படி அப்பாவிடம் சொல்வேன்? அந்த வேதனை தாளாமல்தான் நான் சித்தம் கலங்கி நின்றேன்.

கல்யாணத்துக்கான கடைசிப் பேச்சு வார்த்தையை நடத்தி, என் கழுத்துச் சுருக்கில் கடைசி முடியையும் போட்டு விடத் தீர்மானித்தார், என் தந்தையாக வந்துவிட்ட துரோகி. அந்த வேளையில்தான் நீ பூனையை மடியில் கட்டி வைத்துக் கொண்டு வந்தாய். கண்டேன் தருணம். எடுத்தேன் கல்லை. தொடுத்தேன் அதனை நோக்கி.

தந்தையார் தெருவில் காலை வைக்கவும், பூனையார் குறுக்கே ஓடவும் சரியாயிருந்தது. சகுனத்திலே அபார நம்பிக்கை கொண்ட சகுனி — அதாவது, என் அப்பா —வேண்டாம் இத் திருமணம் என்று, வீட்டுக்குள் திரும்பி விட்டார்.

அன்பே பாக்கியம்! ஆருயிரே, ஆரமுதே பாக்கியம்! பூனை பிடித்தவளே பாக்கியம்! நான் இனி என்றும் உன் னுடைய —

வ(ா)ன்

★

12. வீணா, என் காதல் வீணா?

கே.வி. சங்கர், பி.ஏ. அவர்களுக்கு,

வணக்கம் பல. வள்ளுவர் வாக்குக்கு உதாரணமாக தாங்கள் திகழ்கிறீர்கள் என்பதைப் பெரும் துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் எதையோ கொன்றதாகவும், தங்களைப் போன்றவர்களுக்கு உய்வில்லை என்றும் அவர் பாடியிருப் பதைத் தாங்களும் படித்திருக்கக் கூடும்.

விளங்கிற்றா? போன வாரம் எழுபத்திரண்டு மணி நேர மாக எங்கள் வீட்டு வாசலில், எலும்பும் தோலுமாக ஒரு

மோட்டார் பைக் நின்று கொண்டிருந்தது. அதன் பரிதாப மான முகத்தைப் பார்க்க எனக்குக் கண்ணில் தண்ணீர் கொட் டியது. அந்த அனாதையை எந்தக் கல்மனத்துக்காரர் கைவிட்டுப் போயிருக்கக் கூடும் என்று யோசித்து யோசித்துக் குழம்பினேன். கடைசியில், போலீஸ் போக்குவரத்து இலாகாக்களில் தீர விசாரித்துத் துப்புத் துலக்கி, மோட்டார் பைக்கிலிருந்த நம்பரைக் கொண்டு அது தங்களுக்குச் சொந்தமானது என்பதைக் கண்டு பிடித்தேன். நாற்றத்தைக் கொண்டு எவராவது பிரேத பரிசோத னைக்கு வந்து விடப் போகிறானே என்று பயந்து, இரண்டு கூலி ஆட்களை அமர்த்தித் தங்கள் இல்லத்தில் கொண்டு சேர்க் கும்படி செய்தேன்.

இப்படிச் செய்து வாரம் ஒன்று முடியப் போகிறது. இந்த வினாடி வரையில் தாங்கள் — நேரில் வரக்கூட வேண்டாம்; கார்டில் நாலுவரி எழுதிக்கூட — நன்றி தெரிவிக்கவில்லை.

மனிதரைத் தவிர வேறு யாரும் மோட்டார் பைக் ஓட்டிய தாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் நீங்கள் நடந்து கொண்ட முறையைப் பார்க்கும்போது, மனிதரல்லாதவரும் ஓட்டுவதுண்டு என்று தெரிகிறது.

வீணா

★

அன்புள்ள குமாரி வீணா,

தங்கள் கடிதம் கண்ட வினாடி முதல் என் மனம் பைக் பைக் என்று அடித்துக் கொள்கிறது. ஐயோ! என்ன காரியம் செய்து விட்டீர்களம்மா!

போன வாரத்தில் ஒரு நாள் என் மோட்டார் பைக்கில் வெளியூர் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது வழக் கம்போல் என் வாகனம் மக்கர் செய்தது. தள்ளிக் கொண்டு மூன்று மைல் போகவும் தெம்பில்லை. காலையில் மெக்கா

னிக்கை அழைத்துக் கொண்டுபோய், சரி பார்த்து எடுத்து வர லாம் என்று ஒரு வீட்டு வாசலில் நிறுத்தி விட்டு வீடு திரும்பி னேன். அந்த வீட்டின் வாசல் கதவு பச்சை நிறம் என்று மட்டும் அடையாளம் வைத்துக் கொண்டேன்.

அந்தோ! எப்படிச் சொல்வேனடி ஹிஹிஹி!... (பாட்டில் வருகிற மாதிரி வளைத்துக் கொள்க.) அலி பாபா இந்த நகரத்தில்தான் குடியிருந்திருக்க வேண்டும். பச்சை நிற வாசல் கதவு கொண்ட ஒரே மாதிரியான வீடுகள் ஏராளம், ஏராளம். இதுவரை சரியாய் இரண்டாயிரத்து முன்னூற்று நாலு பச்சை வீடுகளைப் பார்த்து விட்டேன்; ஒரு மோட்டார் பைக்கைக் கூட இன்னும் பார்க்கவில்லை.

இந்நிலையில், தாங்கள் அதை வேலை மெனக்கெட்டு என் இருப்பிடத்துக்கு அனுப்பி வைத்ததாகச் சொல்லுகிறீர் கள். ஒரு பயங்கர உண்மையைச் சொல்லட்டுமா?

இந்த நிமிடம் வரையில் என் மோட்டார் பைக் என்னிடம் வந்து சேரவில்லை. இத்தனை நாளும் நான் வெகு ஜாக்கிரதை யாக, கார்ப்பரேஷன் குப்பை லாரிகளுக்குப் பக்கமாய்ப் போகா மலும், பழைய இரும்புக் கடைகளின் வாசல் வழியே செல்லா மலும் காப்பாற்றி வந்தேன். தாங்கள் அப்படிச் செய்யத் தவறி விட்டீர்கள் போல் தோன்றுகிறது. உடனே தயவு பண்ணி விளக்கம் கொடுங்கள்.

அருணன்

★

வெரி சாரி மிஸ்டர் அருணன்,

தவறு இழைத்தது தாங்கள் அல்ல, பாவி நானேதான்.

கூலியாட்களிடம் மோட்டார் பைக்கை எடுத்துப் போகும் படி சொல்லி விட்டு நான் வெளியே சென்று விட்டேன். சற்று

நேரத்துக்கெல்லாம் என் அண்ணா ராமனாதன் வீட்டுக்கு வந்தார். அவரிடமும் ஒரு மோட்டார் பைக் உண்டு. அதை இரவல் வாங்கிச் சென்றிருந்த நண்பர்தான் திரும்ப விட்டு விட்டுப் போயிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டார். என் அண்ணா மோட்டார் ஒர்க் ஷாப் ஒன்று நடத்துகிறார். தங்கள் பைக்கை அங்கே எடுத்துப் போய் ஒரு வாரம் தேய்த்துக் குளிப் பாட்டிச் சுத்தம் பண்ணிய பிறகுதான், அதன் மூஞ்சி வேறு விதமாயிருப்பதைக் கண்டுபிடித்தாராம். அதற்குள் தங்கள் கடிதமும் வந்துவிடவே நான் விளக்கினேன்.

நிற்க, மோட்டார் பைக் இப்போது என் வீட்டு வாச லில்தான் இருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் தாங்கள் வந்து எடுத்துச் செல்லலாம். அத்துடன், அதை விலைக்கு வாங்கிக் கொள்ளவும் என் அண்ணா தயாராயிருக்கிறார். எட்டாயிரத்து இருநூற்று நாலே கால் ரூபாய் தருவதாகக் கூறு கிறார். அதென்ன நாலே கால் ரூபாய் கொசுறு என்று கேட் டேன். மண் ஒரு வண்டி எட்டரை ரூபாய் விற்கிறதாம். தங்கள் மோட்டார் பைக்கைச் சுரண்டியதில் அரை வண்டி மண் கிடைத் ததாம்.

தாங்கள் விற்பனைக்குச் சம்மதித்தால், அடுத்த ஞாயிற்றுக் கிழமை என் வீட்டில் வந்து சந்திக்கலாம். பொதுவாக என் அண்ணா வாங்கும் வண்டிகளை நான்தான் வெள்ளோட்டம் பார்ப்பது வழக்கம். உங்களுக்கு இஷ்டமானால், மோட்டார் பைக்கின் பின்னால் நான் அமர்ந்து கொள்கிறேன். ஓட்டிக் காட்டுங்கள்.

வீணா

★

வீணா!

உன் பேனாவுக்குச் சாதா மசி போடுகிறாயா? அல்லது ஐஸ்கிரீமைக் கரைத்து ஊற்றுகிறாயா? பின்னே எப்படி நீ எழுதும் கடிதங்கள் அப்படி ஓர் இனிப்பு?

ஒரு ரகசியம் சொல்லுகிறேன். கோபிக்காமல் இருப்பீர்களா? அன்றைய தினமே, அதே மாலையிலேயே தங்கள் வீட்டுக்கு ஓடோடி வந்தேன். தாங்கள் அறியாமல், தங்களுடைய சந்திரபிம்ப வதனத்தைச் சாளரத்தின் வழியாகக் கண்டு களித்தேன். தாங்கள் பெரிய பாக்கியசாலி. மகாகவி பாரதியாரை நேரில் பார்க்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள். இல்லாவிட்டால், 'வட்டக்கரிய விழி — வானக் கருமை கொலோ!' என்று எப்படி அவர் பாடியிருக்க முடியும்?

கட்டாயம் ஞாயிறு அன்று வருகிறேன். பின் சீட்டுக்கு மட்டும் நல்ல மெத்தை போட்டு வைத்திருங்கள். அது தொஞ்சம் தகராறு. தங்கள் தமையனாருக்கு மோட்டார் பைக்கை இனாமாகவே கொடுக்கத் தயார்.

அருணன்

★

ராமனாதன்-சென்னை

பெங்களூர் எனும் தீவினிலே சிக்கி நிற்கிறேன் –ஆதரவில்லை – ஐம்பது ரூபாய் அனுப்பவும்.

அருணன்

★

அடேய் அயோக்கியப் பதரே!

எனக்குத் தெரியாமல் என் தங்கையைப் பெங்களூருக்குக் கடத்திப் போனதும் அல்லாமல், என்னிடமே பணமும் கேட்கிற அளவுக்கு உனக்குத் துணிச்சலா? உன்னைப் பற்றி, எங்கள் தெருக்கோடி போலீஸ்காரர் முதல், டெபுடி போலீஸ் கமிஷனர், போலீஸ் கமிஷனர், தமிழ்நாடு போலீஸ் அமைச்சர், புதுடில்லி பாதுகாப்பு மந்திரி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆகிய பல இடங்கள் வரை தந்தி கொடுத்திருக்கிறேன். இருண்ட ஆப்பிரிக்கக் காட்டில் நீ ஒளிந்து கொண்டாலும் தப்ப முடியாது.

மரியாதையோடு என் அருமைத் தங்கை வீணாவை என்னிடம் ஒப்படைத்தாயோ பிழைத்தாய்!

ராமனாதன்

★

ஹே பக்வான்!

நான் நிரபராதி. என்னை விட்டு விடுங்கள்.

ஐயா, வீணாவின் அண்ணாவே! சத்தியமாய்ச் சொல்லு கிறேன். வீணாவை நான் இங்கே அழைத்து வரவில்லை. சென்னை – பெங்களூர் மார்க்கத்தில் உள்ள ஏதோ ஓரிடத்தில் அவள் என்னை விட்டுவிட்டுப் பிரிந்து விட்டாள் — என் னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல். அவளை நான் மனமாரக் காதலித்தேன்: காதலிக்கிறேன். இப்படி அவள் என்னை வெறுத்து ஒதுக்கும்படியாக எந்த விதத் தீமையும் நான் இழைக்கவில்லை. ஹையோ! வீணா!

நடந்தது இதுவே : தங்கள் விருப்பப்படி ஞாயிற்றுக் கிழமையன்று மாலை என் மோட்டார் பைக்கை வெள்ளோட் டம் விட்டுக் காட்டுவதற்காக வந்திருந்தேன். தான் பைக்கின் பின்னால் ஏறிக் கொண்டு சவாரி வருவதாக எழுதியிருந்தவள், ஏனோ கடைசி நிமிடத்தில் தயங்கினாள்; சங்கடப்பட்டாள். அவள் உள்ளத்தில் என்ன வேதனை இருந்ததோ, யானறியேன். எப்படியோ அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றேன்.

பெங்களூர் பாதைதான் வாகனங்களுக்குச் சிறந்தது என்று அதிலே ஓட்டிக் கொண்டு போனேன். பதினைந்து இருபது மைல் தாண்டியான பறகு, திரும்பிப் பார்த்தேன்.

தங்கள் தங்கையை — என் இன்னுயிர் வீணாவை — அவளை உட்கார்த்தி வைத்திருந்த இடத்திலே காணோம்! என் னிடம் மரியாதைக்குக் கூடச் சொல்லிக் கொள்ளாமல் மறைந்து விட்டாள்.

உடனே பைக்கைத் திருப்பி, அவளைக் கண்டுபிடிக்க முயன்றேன். வண்டியைத் திருப்ப முடியவில்லை. அத்துட னல்ல; நிறுத்தவும் முடியவில்லை. அசுர, அரக்க, ராட்சத, பேய், பிசாசு வேகத்தில் அது தானாகவே ஓடி, நேரே பெங்க ளூருக்கு வந்துதான் நின்றது.

பெங்களூரில் எனக்கு ஒரு வேலையும் கிடையாது. சொல்லப் போனால் என் மோட்டார் பைக்குக்கும் ஒரு வேலையும் கிடையாது. இப்போது என்னைப் போலவே அதுவும் திருதிருவென்று விழிக்கிறது.

நான் நல்ல பணக்காரன். ஆனால் அதை நம்புவார் யாரு மில்லை. இங்கே, ஒரு டாக்ஸிக்காரனைச் சென்னைக்கு வருகிறாயா என்று கேட்கப் போய், அவன் என்னைப் பைத் தியக்கார ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, தப்பி வந்தபாடு பெரும்பாடாகி விட்டது. என் பாங்க்குக்குத் தந்தி அடித்திருக் கிறேன். அவர்கள் பதிலே போடவில்லை. வீணா ஒருவேளை தங்களிடமே திரும்பியிருக்கக் கூடும். என்னைப் பற்றி சிபாரிசு செய்யக்கூடும் என்ற எண்ணத்தில் தங்களுக்குத் தந்தி கொடுத் தேன். தாங்களோ போலீஸ்காரரைக் கூப்பிடுகிறீர்கள். ஐயா, புண்ணியமாய்ப் போகட்டும். அதை மட்டும் செய்யாதீர்கள். போலீஸ்காரரைச் சினிமாப் படத்தில் பார்த்தால் கூட உடம்பு நடுங்குகிறவன் நான்.

இன்னும் நாலைந்து நாளில் 'ஹிந்து' பத்திரிகையில் என்னைப் பற்றிய கோரச் செய்தியைப் பார்க்கலாம். சின்ன எழுத்தில் போட்டிருப்பார்க்ள. ஊன்றிக் கவனியுங்கள்.

அருணன்

★

அடேய் பொய்ச் சிகாமணி!

நானாவது, உன் ஓட்டை மோட்டார் பைக்கை வெள் ளோட்டம் பார்க்க வேண்டுமென்று சொன்னேனாவது! யாரி

டம் அளக்கிறாய்? உன் எலும்புகளின் நீள அகலங்களை அளக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

மரியாதையோடு வீணாவை என்னிடம் கொண்டுவந்து சேர். இன்று தனித் தபாலில் பண்டித நேரு, குருஷ்சாவ், சுப்பு சாமி (எங்கள் பேட்டை நகரசபை கவுன்சிலர்) ஆகியோ ருக்குத் தெரிவிக்கிறேன் உன்னைப் பற்றி.

ராமனாதன்

★

என் அன்புமிக்க அருணரே,

'மன்னித்தேன்' என்று ஒரு வார்த்தை சொல்ல வேண் டாம். 'மன்' என்று கால் வார்த்தை சொல்லுங்கள், என் சாபல் யம் ஜன்மமாயிற்றென்று திருப்தியடைகிறேன்.

நான் ஒரு பொய்ச்சி. மடச்சி. உங்களைப் படுமோசமாக ஏமாற்றி விட்டேன்.

மோட்டார் பைக்கை நீங்கள் ஓட்ட முடியாமல் எங்கள் வீட்டு வாசலில் நிறுத்தி விட்டுச் சென்ற இரவே, நான் உங்களை மேல் மாடியிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அந்தக் கணமே என் உள்ளத்தைத் தங்கள் காலடியில் போட்டு விட் டேன். பைக்கை மெதுவாக நகர்த்தி, என் வீட்டின் பின்புறத்தில் கொண்டு போய் வைத்தேன். தங்களை நேரில் சந்தித்துப் பேசும் ஆசையில் கன்னாபின்னாவென்று கற்பனைகள் செய்து எழுதி விட்டேன்.

தாங்கள் நேரில் வந்து 'புறப்படு' என்று கூறியபோது தான் எனக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது. பைக்கில் போகும் போது அந்த உதறல் இன்னும் அதிகரித்தது. என் அண்ணா வுக்குத் தெரியாமல் இவ்வளவு தூரம் குறும்புத்தனம் பண்ணிவிட்ட

தால், அவன் என்னைச் சுக்குசுக்காய்க் கிழித்து ரிப்பன் கடைக்கு விற்பனைக்கு அனுப்பி விடுவானே என்று நடுங்கினேன்.

சென்னையிலிருந்து பத்தாவது மைலை நாம் நெருங்கிய போது, தூரத்தில் ஒரு பயங்கர சப்தம் செவியில் விழுந்தது. அந்த மாதிரி இடியோசை புரிபவை, உலகத்திலேயே இரண்டு தான் உண்டு. ஒன்று வெஸூவியஸ் எரிமலை; மற்றது என் அண்ணாவின் கார். வெஸூவியஸ் எரிமலை பெங்களூர் - சென்னை பாதையில் இல்லையென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியுமாதலால், நிச்சயம் அண்ணாதான் வருகிறான் என்று புரிந்து கொண்டேன்.

முன் தெரியாத ஒருவருடன் (தங்களை முன்பின் தெரியாதவர் என்று சொல்ல முடியவில்லை. மோட்டார் பைக்கில் சென்று கொண்டிருந்தபோது தங்களது பின்னை நன்றாய்ப் பார்த்தேன். முன்னை அவ்வளவு தெரியாது.) நான் உல்லாசமாக டூயட் பாடிக் கொண்டு மோட்டார் பைக்கில் செல்வதை என் அண்ணா பார்த்தால் என் கதி என்ன ஆவது? ஏன்? உங்கள் கதியே என்ன ஆவது? ஆகவே, சடாரென்று குதித்து விட்டேன் பைக்கிலிருந்து. 'போகிறேன் ஸ்வாமி, போகிறேன்' என்று நான் சொன்னது உங்கள் காதில் விழவில்லை போலும்.

நான் குதித்த இடத்துக்குப் பக்கத்தில் ஒரு கிராமம் இருந்தது. அங்கே என் கல்லூரித் தோழி ஒருத்தி இருந்தாள். அவள் வீட்டில் அடைக்கலம் புகுந்தேன். இன்றுதான் அவள் என் அண்ணாவிடம் என்னைச் சேர்ப்பித்து, சமாதானப்படுத்தினாள்.

அண்ணாவின் கோபம் தணியவில்லை. எப்போது வயது வந்த ஒரு ஆடவனுடன் நீ வெளியே போனாயோ, அப்போது நீ அவனையே மணந்து கொண்டு வாழ வேண்டியதுதான் என்று உறுமுகிறார். அந்தத் தண்டனையை எதிர்த்துப் புலம்பி, மன்றாடு

வது போல் பாசாங்கு செய்து கொண்டிருக்கிறேன். என் பாசாங்கு வெளிப்பட்டு, அண்ணா இந்தத் தண்டனையை மாற்றுவதற்கு முன் பறந்து வாருங்கள். தந்தி மணியார்டரில் பணம் அனுப்பி யுள்ளேன்.

உங்களே உங்கள்
வீணா

பி.கு. : பெங்களூர்ப் பாதையில் தங்கள் மோட்டார் பைக் பறந்த வேகத்தை ஒருவர் பார்த்துப் பிரமித்து, உடனே அதைத் தனக்கு விலைக்கு வாங்கித் தரும்படி அண்ணாவைக் கேட் டிருக்கிறாராம். அவருக்கு அந்த மாதிரி பைக்தான் வேண்டு மாம்.

வீ

★

13. வெள்ளையனே! வெளியேறு!

மாடி அறை மன்மதருக்கு,

வணக்கம்.

தங்கள் வாயில் சிகரெட் இல்லாத நேரங்களில், 'மவுத் ஆர்கன்' என்ற இசைக் கருவியொன்று மாட்டிக் கொண்டு விழிப்பதை நாடும் நகரமும் இந்தத் தெருவும் நன்கு அறியும். தங்களது கல்லூரி இசைக் குழுவினரின் நிகழ்ச்சிக்காகத் தாங்கள் பயிற்சி செய்வதாக என் தம்பி தெரிவித்தான். தயவு செய்து

அந்தப் பயிற்சியை இரவு பன்னிரண்டு மணிக்கு முன்ன தாகவே முடித்துக் கொள்ள முடியுமா? தூக்க மாத்திரைகள் தற்சமயம் யானை விலை, ஒட்டக விலை விற்பதைத் தாங்கள் அறிவீர்களென நம்புகிறேன்.

நிற்க. என்னுடைய கைக்குட்டையொன்று தங்கள் அறையில் இருந்ததாக என் தம்பி சொன்னான். காற்றில் பறந்து வந்து அது தங்கள் அறைக்குள் விழுந்ததாகத் தாங்கள் கூறினீர்களாம். நியூட்டனுக்குப் பின்னர் உலகம் கண்ட மாபெரும் விஞ்ஞானி தாங்கள். கீழ் முற்றத்தில் உலர்த்தப்பட்ட பொருள்கள் மாடிக்குச் செல்லும் என்ற எதிராகர்ஷணத் தத்துவத்தைக் கண்டுபிடித்திருக்கிறீர்கள். தாங்கள் கண்ணை மூடியதும் தங்கள் மூளையை அக்கக்காகப் பிரித்து ஆராய்வார்கள் என்று எண்ணுகிறேன்.

சந்திரலேகா

★

குமாரி சந்திரலேகா,

தங்கள் கடிதத் துண்டு கிடைக்கப் பெற்றேன். வஜ்ரப் பசை தடவி அதை என் மார்பில் ஒட்டிக் கொண்டேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றிரவு முதல் எனது கர்ணாமிருத கீதம் தங்கள் செவியை எட்டாது என்று சத்தியம் செய்கிறேன். எனக்கு ஹாஸ்டலில் இடம் கிடைத்து விட்டது. இதோ அறையைக் காலி செய்து கொண்டு போகிறேன். திறந்த கூண்டிலிருந்து... போகுமிடம் வெகு தூரமில்லை....

இப்படிக்கு
மனமுடைந்த மார்க்கண்டன்

★

ஐயா மார்க்கண்டன்,

கைக்குட்டையைத் திருப்பித் தராமலே தாங்கள் போனது குறித்து நான் வருந்தவில்லை. மேற்படி கைக்குட்டையைப் பற்றித் தம்பியிடம் அடையாளங்களைத் தீர விசாரித்த பின்னர், அது என்னுடையதல்ல என்றும் என் அப்பாவினுடையது என்றும் தெரிய வந்தது. என் அப்பா பொடி போடும் வழக்கம் உள்ளவர் என்பது தங்களுக்குத் தெரிந்திருந்தால் அந்தக் கைக் குட்டையை அவ்வளவு ஆசையாக எடுத்துச் சென்றிருக்க மாட்டீர்கள். பரவாயில்லை.

வேறோர் விஷயத்துக்காக இக்கடிதத்தை எழுதலானேன். தாங்கள் காலி செய்த தினத்தன்று, என் அறையை நான் சுத்தம் செய்து கொண்டிருந்தேன். அப்போது, எனது புகைப்படம் கொண்ட கண்ணாடிப் படத்தை ஈரத் துணியால் துடைத்து, உலருவதற்காக வெளியில் வைத்திருந்தேன். தங்களது எட்டு ஜதை மிலிடரி பூட்ஸுகளுக்குப் பக்கத்தில் அதை வைத்தேன் என்று நினைவு. தாங்கள் போன பின்னர் பார்த்தால், படத்தை யும் பூட்ஸுகளையும் காணோம். தயவு செய்து உடனே திருப்பியனுப்புங்கள் — பூட்ஸை அல்ல, என் படத்தை.

சந்திரலேகா

★

அன்புள்ள சந்திரலேகா,

சே, சே! அப்படியா செய்தேன்? நோ, நோ! நம்பவே முடிய வேயில்லையே! படிப்புண்டு நானுண்டு என்றிருக்கும் என்மீதா இத்தகைய குற்றச்சாட்டு? காதல் இல்லாத சினிமா வந்தால் மட்டுமே பார்ப்பது என்ற விரதத்துக்காகக் கடந்த எட்டாண்டுகளாகத் திரைப்படத்தை ஏறெடுத்தும் பார்க்கா மல் இருக்கும் என்மேலா இப்படியொரு அபாண்டம்? கிடை யவே கிடையாது. கிடை, கிடை, கிடை, கிடையவே கிடையாது!

மார்க்கண்டன்

பி.கு. : ஓ, தங்கள் படம்தானா அது? சென்ற ஆண்டு சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடிய என் பெரியம்மா படம் என்று நினைத்து எடுத்து வந்து விட்டேன். இதோ திருப்பி விட்டேன்.

மா.

★

மறதிமிக்க மார்க்கண்டருக்கு,

ஞாபக மறதிக்குத் தாங்கள் ஏதாவது மருந்து அருந்தினால் நல்லது என எண்ணுகிறேன். என்னுடைய படத்தைத் திருப்பியனுப்புவதற்குப் பதிலாக, மிருகக் காட்சி சாலையில் எடுக்கப்பட்ட ஏதோ ஒரு படத்தை அனுப்பியிருக்கிறீர்களே?

சந்திரலேகா

பி.கு. : மன்னிக்கவும்; படத்தை இரண்டாம் தடவை உற்றுப் பார்த்ததில் அது தங்கள் திருவுருவம் என்று தெரிகிறது.

ச.

★

சந்திரா! லேகா!

இது கொஞ்சம் கூட நன்றாயில்லை. அதாவது, கேவலம் ஒரு புகைப்படத்துக்காக நாம் இப்படிக் கடிதம் எழுதிக் கொள் வது, நவீன காலத்து யுவர்களும் யுவதிகளும் இப்படித்தான் ஒழுக்கம் கெட்டலைந்து, தேசத்தின் கௌரவத்தையே குலைத்து விடுகிறார்கள். இது போன்ற பண்புக் குறைவான காரியத்தை நாம் இருவராவது தடுத்து நிறுத்தி, இளைஞர் - இளைஞி சமூகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினால் என்ன?

எனவே, நாம் இனி கடிதம் எழுத வேண்டாம். கௌரவ மாக, பண்பாடாக, தலை நிமிர்ந்து களங்கமற்று, கள்ளங் கப டில்லாமல், நேரில் சந்தித்து நமது பிரச்னைகளை விவாதித்து

முடிவு செய்வோம். இதற்குத் தகுந்த இடம் கடற்கரையே என்பது என் கருத்து. நாளை மாலை கூட்டமில்லாத இடத்தில், சந்தடி யில்லாத வேளையில், சந்திரனைச் சாட்சியாக வைத்துக் கொண்டு நாம் மனம் விட்டுப் பேசுவோமாக.

மார்க்கண்டன்

★

அன்பே சந்திரா! ஆருயிரே லேகா!

என்ன மோசமான, கொடிய உலகம்! காதலெனும் படு குழியில் விழக் கூடாதென்று நாம் எத்தனை உறுதியாயிருந்து என்ன பயன்? அந்தோ! நம் வயதும், சந்தித்த சூழ்நிலையும், நாம் எதற்காகக் கூடினோமோ அந்த விஷயத்தை அடியோடு மறக்கச் செய்து விட்டனவே! புகைப்படத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்யாமல் — ஏன் இரண்டு பேருமே நமது படங் களைக் கொண்டும் வராமல் — நிலவையும் நிலவன்ன முகங் களையும் பற்றிப் பேசிக் காலத்தைப் பாழ் செய்தோமே, சந்திரலேகா!

போகட்டும். உன் குவிந்த உதடுகளில் சிவந்த லிப்ஸ் டிக்காக இருக்க ஆசைப்படுகிறேன் என்றேன்; உன் பின்ன லின் நுனியில் விளையாடும் பட்டு ரிப்பனாகத் திகழ்வதற் காக, ஆணிப் படுக்கையின் மீது ஒற்றைக் காலில் நின்று இரு பத்திரண்டு வருடம் தவம் செய்யத் தயார் என்று அறிவித் தேன். என் நீல விழியாளே! நெஞ்சைக் கவர்ந்தவளே! ஏன் நீ அத்தனைக்கும் தலை கவிழ்ந்து, புன்சிரிப்போடு அமர்ந்திருந் தாய்? என் கன்னத்தில் பளாரென்று ஓர் அறை விட்டு, 'பாவப் படுகுழியில் விழாதேடா பாதகா!' என்று ஏன் புத்தி கூற வில்லை!

காதலால் கதி கலங்கிய

மார்க்கண்டன்

★

அன்பரே,

இன்னும் அதிக நாளைக்குத் தாங்கள் அவஸ்தைப்பட வேண்டியிருக்காதென்று எண்ணுகிறேன்.

இன்று காலை தங்கள் தந்தையார் என் தந்தையாரைப் பார்க்க வந்தார். உங்கள் அறைக்கு நேற்று வந்திருந்தபோது, உங்கள் அல்ஜிப்ரா புத்தகத்துக்குள்ளே என் போட்டோவைப் பார்த்து விட்டாராமே? உங்களைக் குடைந்து குடைந்து கேட்ட பிறகு, நீங்கள், 'முன்பு குடியிருந்த வீட்டில் கீழே இருந்த பெண்' என்று உண்மையை ஒப்புக் கொண்டீர்களாமே? ஆ! அப்பா என்றால் அப்ப(ா)டியல்லவா இருக்க வேண்டும்? மகன் மீது மாறாத பிரேமையால் என் தந்தையிடம் ஓடி வந்து, 'சம்மதமா? பெண் கொடுக்கச் சம்மதமா?' என்று கேட்டார். என் அப்பா என்னைக் கேட்க, நான் பலமாகத் தலையாட்டி விட்டேன். சுபம்! சுபம்! சுபம்!

சந்திரலேகா

★

ச.லேகா!

அசுபம்! அசுபம்! அசுபம்!

என் அப்பாவாவது, உன் அப்பாவிடமாவது, வந்தாராவது? என் தந்தை தமது நாற்பத்தெட்டாவது வயதிலே டைபாயிடு வசப்பட்டுப் புவி வாழ்வை நீத்த கதை நாடு அறிந்ததாயிற்றே! அவர் பிசாசு உருவம் எடுத்து வந்ததாகக் கூட இதுவரை வரலாறு கண்டதில்லையே!

ஹையோ சந்திரலேகா! ஹப்பா சந்திரலேகா! காத்திருந்தவன் காதலியை நேற்று வந்தவன் தட்டிக்கொண்டு போவதா? தலையையா அசைத்தாய், எவனோ ஒரு கழுதையை மணப்பதற்கு? இல்லை! என் உயிருக்கே நோட்டீஸ் விட்டு விட்டாயே பாவி!

சாவே! வா! என்னைத் தழுவு!

மார்க்கண்டன்

★

அன்பரே!

அப்படியா சேதி! எனக்கு ஏதும் புரியாமல், இட்டிலி யோடு ஸ்பூனையும் விழுங்கி விட்டவளைப் போலத் தவித் தேன், தடுமாறினேன், சிந்தித்தேன்.

புரிந்தது விஷயம்.

நீங்கள் என் வீட்டு மாடியறைக்கு வருவதற்கு முன்னால் அங்கே இன்னொரு குடிகெடுப்பான் இருந்தான். பாவி! வெள்ளை யன் என்று பெயர். போகும்போது எனக்கே தெரியாமல் என் போட்டோவை எடுத்துக் கொண்டு போனான் போலும். அப் பாவைக் கேட்டேன். ''ஆமாம். வெள்ளையனின் அப்பாதான் வந்தார். கேட்டார். சரியென்று சொன்னாயே?'' என்று சாவகாசமாக கேட்கிறார்!

மரணத்தைத் தாங்கள் தனியாக, ஒன்றியாக, தழுவ வேண்டாம். தங்களுக்குத் தைரியம் போதாது. நானும் துணைக்கு வருகிறேன். விஷப் புட்டியும் இரண்டு டம்ளரும் கிடைத்த தும் இந்த ஏழைக்குத் தெரியப் படுத்துங்கள்.

சந்திரலேகா

★

ச!

பொறு. பதறாதே, திட்டம் தீட்டுகிறேன். எல்லாம் நன் மைக்கே. அறஞ்செய விரும்பு. ஆறுவது சினம். உடையது விளம்பேல். ஊக்கமது கைவிடேல்...

மா.

★

ஹா!

எப்படி முடித்தீர்கள் அந்த அதிசயத்தை! வெள்ளைய னின் அப்பா வந்து, 'புரோகிராம் கான்சல்' என்று சொல்லி விட்டுப் போனாரே! எப்படி? எவ்வாறு? ஏன்? எதனால்?

உங்கள்
உயிர்

★

ச!

தேனில் தோய்த்தெடுத்த பலாச்சுளையே! ஐஸ்கிரீமில் கண்டெடுத்த அன்னாசித் துண்டே!

கதையைக் கேளடி, கண்ணே, கதையைக் கேளடி!

வெள்ளையன் எனப்படும் 1–ஆவது எதிரி எங்கள் ஹாஸ்டலில், அதுவும் என் அறைக்கு நேர் எதிர் அறையில் இருப்பதாக நம்பத்தக்க வட்டாரத்திலிருந்து தகவல் கிடைத் தது. சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று இரவு மணி 7–18 சுமாருக்கு அந்த அறையில் மார்க்கண்டன் என்ற வாலிபன் (அதாவது நான்) பிரவேசித்தான். அப்போது முதல் எதிரியும், அவ ருடைய தகப்பனாரான 2–ஆவது எதிரி மாணிக்கரங்கமும் அந்த அறையில் இருந்தார்கள்.

''பையனுக்குக் கல்யாணமாமே! கன்கிராசுலேஷன்ஸ்!'' என்று விசாரித்தேன்.

இரண்டு எதிரிகளும் ''ஆமாம்,'' என்று இளித்தார்கள்.

வெள்ளையனின் அலமாரியிலே இருந்த ஒரு புத்தகத்தைத் தற்செயலாகக் கண்டெடுத்த நான், அதனுள்ளிருந்த ஒரு புகைப் படத்தை வெளியே எடுத்து ''ஓ! இதுதான் மணப்பெண்ணா!'' என்று கேட்டேன்.

2-ஆவது எதிரி, அதை வாங்கிப் பார்த்து, "இதுவா? யார் இந்தப் பெண்?" என்று மைந்தனை விளித்தார். மைந்தன் விழித்தார்.

அதற்குள் நான், இன்னொரு புத்தகத்திலிருந்து இன் னொரு புகைப்படத்தை எடுத்து, "மன்னிக்க வேண்டும். ஒரு வேளை இந்தப் பெண்ணோ! சரிதான்!" என்றேன்.

அதை வாங்கிப் பார்த்த மாணிக்கரங்கம் இன்னொரு முறை முறைத்து, 'இது யார்?' என்று வினவினார். அதற்குப் பதில் கிடைப்பதற்குள், மூன்றாவது புத்தகத்திலிருந்து மூன்றா வது படம், நாலாவதிலிருந்து நாலாவது படம், ஐந்திலிருந்து ஐந்து, ஆறிலிருந்து....

ஆ! அக்காட்சியை என்ன சொல்வேன்! அந்தப் போட் டோச் சோலையில் அப்பனுக்கும் பிள்ளைக்கும் ஒரு காட்டா குஸ்தி நடைபெறுவதைக் காணச் சகியாதவனாக நான் வெளி யேறினேன்.

இப்போது சொல்லு: சுபம்.

என்றும் உன்
மார்க்கண்டன்

பி.கு. : எனது நண்பனும், மவுண்ட் ரோடு 'மல்லிகா போட்டோகிராபர்ஸ்' உரிமையாளனுமான திரு. சக்தி வேல னுக்கு நமது நன்றி உரித்தாகும். தன் கடையிலிருந்த நூற்றுக் கணக்கான யுவதிகளின் புகைப்படங்களை அவன் எனக்குக் கொடுத்து உதவியிராவிட்டால், அவைகளை நான் யாருக்கும் தெரியாமல் வெள்ளையனின் பல்வேறு புத்தகங்களில் வைத்திருக்க முடியுமா?

மா.

★

14. தொண்டையடிப்பொடி!

ஊர் பேர் தெரியாத அம்மணிக்கு,
முன்பின் தெரியாத மாணிக்கராஜ் எழுதிக் கொள்வது

கடற்கரையில் திருட்டுத்தனமாக இக்கடிதத்தை உங்கள் காலடியில் போடுவதைக் கொண்டு, இது ஏதோ காதல் கடித மாயிருக்கும் என்று சந்தேகப்படலாம்; பட வேண்டாம். எனக்குக் காதலிக்கத் தெரியாது; காதல் கடிதம் எழுத வராது.

சென்ற இருபத்து மூன்று நாட்கள், ஏழு மணி, நாற்பத் தொன்று நிமிடங்களாக நான் தங்களைப் பற்றியே சிந்தனை

செய்து வருகிறேன் என்பது உண்மை. காரணம், தினசரி மாலை வேளைகளில் நீங்கள் கடற்கரைக்கு வருகிறீர்கள். எனக்குக் கொஞ்ச தூரத்தில் அமர்ந்து கொண்டு கையைத் தூக்கி, தலையைச் சாய்த்து ஏதோ முணுமுணுக்கிறீர்கள். என்னிடம் நீங்கள் குரோதம் பாராட்டுவானேன் என்று யோசித்துப் பார்த்தும் விளங்கவில்லை.

இது நிற்க. நேற்று மாலை நீங்கள் ''மணி என்ன ஆகிறது?'' என்று கேட்டது என் காதில் விழாமல் இல்லை. தேனாய்க் கரும்பாய்த் தீஞ்சுவையாய் விழுந்தது. அப்படி விழுந்தும், நான் ஏன் மாடு திருடிய மடையன் போல விழித்தேன் என்று நீங்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம். அந்த ஆச்சரியத்தை அகற்றவே இதை எழுதலானேன்.

அதிர்ஷ்டவசமாக எனக்கு நல்ல சாரீர வசதி அமைந்திருக்கிறது. அந்த வசதியைச் சென்ற இருபத்து மூன்று ஆண்டுகளாக (என் வயது அதுவே) நான் பூரணமாகப் பயன்படுத்தி வந்த காரணத்தால், போன மாதம் என் தொண்டையில் கோளாறு ஏற்பட்டு விட்டது. ஒரு வாரம் முந்தி ஆபரேஷன் செய்யும்படி நேர்ந்தது. நான் இனி ஒரே ஒருவரிடம்தான் உரக்கப் பேசலாமென்றும், அவர் சாவுக்கரசனான எமதர்மன்தான் என்றும் என் டாக்டர் என்னை எச்சரித்தார்.

அத்துடன் நில்லாமல், நான் ஒரு மாத காலத்துக்குப் பேசாவிரதம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார். மிகுந்த சிரமத்தின் பேரில் அந்த விரதத்தை நான் கடைப்பிடித்து வருகிறேன். இத்தகைய சோதனையான நிலையில் தான் நீங்கள் மணி என்ன ஆகிறது? என்று கேட்டு, என்னைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தினீர்கள். தங்களையொத்த அழகியுடன் பேசுவதற்குத் தவம் பண்ண வேண்டியது போக, முறைத்துப் பார்த்தேனே – முட்டாள் நான்!

என் கைக்கடியாரத்தை உங்கள் முகத்தண்டை நீட்டி, நீங்களே பார்த்துக் கொள்ளும்படி காட்டியிருக்கலாம். ஆனால், மணி பார்க்கத் தெரியாமல் ஐம்பத்துக்குக் கடியாரம் கட்டிக் கொண்டிருக்கும் பேர்வழி நான் என நீங்கள் நினைத்து விடுவீர்களோ என்று பயப்பட்டேன்.

விளக்கம் உங்கள் வேதனையைப் போக்குவதாய் இருக்கும் என்று நிச்சயமாய் நம்பும்.

மாணிக்கராஜ்

★

திரு. மாணிக்கராஜ் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் என்னிடம் எறிந்த கடிதம் கிடைத்து, உறுத்திற்று; உங்கள் கடிதம் என் காலடியில் விழாமல் கண் மீது விழுந்ததே காரணம். இனியேனும் சரியாகக் குறி பார்த்து எறிவீர்களாக.

போகட்டும். தாங்கள் எழுதிய கடிதம் எனக்குச் சிரிப்பைத் தான் வரவழைத்தது. அனாவசியமாக ஒரு தவறான எண்ணத்தினால், தாங்கள் தங்களுக்குள்ள வியாதிகளையும். அவற்றுக்குச் செய்துகொண்ட சிகிச்சைகளையும் பற்றி அவ்வளவு நீளமாக எழுதியிருக்கிறீர்கள்.

நான் கடற்கரையில் கையைத் தூக்கியோ தலையை ஆட்டியோ பேசுவதெல்லாம் தங்களைப் பார்த்து அல்ல, மனோஹரைப் பார்த்து. 'மனோஹர் என் காதலன்' —அதுதான் எங்கள் 'யுவதிகள் கழகம்' அடுத்த மாதம் அரங்கேற்றப் போகும் நாடகம். நான் கதாநாயகி. என் வசனங்களை வீட்டில் உச்சரித்து நெட்டுருச் செய்யமுடியாமல், கடற்கரைக்கு வந்து சரி பார்த்துக் கொள்கிறேன். அவ்வளவே.

முந்தா நாள், நான் மணி என்ன ஆகிறது? என்று கேட்டதும் தங்களையல்ல. என் வசனத்தில் ஒரு பகுதி அது. மணி

என்று எனக்கு ஒரு தம்பி உண்டு — நாடகத்தில். அவனை அனாதையாக விட்டுவிட்டு நான் ஓடிப் போவதாகக் கதை. என் மனப் புயலின் எதிரொலி அந்தக் கேள்வி. ''மணி என்ன ஆகிறது?'' என்பதற்கு அடுத்த வசனம், ''அவனை அனாதை யாக விட்டுவிட்டு அறுநூறு மைல்கள் எப்படிப் போவது?'' என்பதாகும். துரதிர்ஷ்டவசமாக அது தங்கள் செவியில் விழவில்லை போலும்.

ஆகக்கூடி, தங்கள்மீது எனக்குக் கோபமும் இல்லை, வருத்தமும் இல்லை. ''தொண்டையைப் பறிகொடுத்த தீனப் பிறவி'' என்ற பரிதாபம் மட்டுமே இருக்கிறது.

இங்ஙனம்
ரேவதி

பின்குறிப்பு : நாடகத்தில் கதாநாயகராக நடிக்கக் கூடி யவர் யாரேனும் தங்களுக்குத் தெரியுமா? சரியான நபர் இன் னும் கிடைக்கவில்லை.

ரே.

★

திருமதி ரேவதி அவர்களுக்கு,

தங்கள் கடிதம் பார்த்து நான் பட்டபாடு, கத்திரிக் காய்க்கும், அரிவாள்மணைக்கும் இடைப்பட்ட புழுவும் படாது. அப்படித் துடித்துப் போனேன்.

ஏன்? ஏன்? சொல்கிறேன், கேளுங்கள் என் சோகக் கதையை.

முதலாவதாக, தாங்கள் பேசியது என்னைப் பார்த்தல்ல என்பதால் ஏற்பட்ட அதிர்ச்சி. ஐயோ! 'சும்மாக்கானும்', எனக்குச் சந்தோஷம் தருவதற்காகவேனும், ஒரு சின்னப் பொய், சிங்காரக் குட்டிப் பொய் சொல்லியிருக்கக் கூடாதா, ''ஹி... ஹி! உங்களைப் பார்த்துத்தான் பேசினேன்'' என்று?

இரண்டாவது அதிர்ச்சி, தங்கள் கடிதத்தில் கண்டிருந்த பின்குறிப்பால் விளைந்தது.

கதாநாயகனாக நடிக்கக் கூடியவரை எனக்குத் தெரியுமாவா? யாரைப் பார்த்து அம்மா இந்தக் கேள்வி கேட்டீர்கள், யாரைப் பார்த்து? அமெச்சூர் நடிகர்களின் காதல் திலகம், மேடையேறிக் கோடையிடியென முழங்கிய கர்ஜனைச் சிங்கம், ஹிரண்யகசிபுவாகவும், மகாபலியாகவும் தோன்றிப் பல்நூறு சபா மேடைகளைப் பதம் பார்த்த பராக்கிரம சேது, இந்த மாணிக்கராஜைப் பார்த்து இப்படிக் கேட்டிருக்கிறீர்கள்' ஆச்சரியம்! ஆச்சரியம்!

ஆனாலும் ரேவதி, அந்தோ ரேவதி, அம்மா ரேவதி, நான் என்ன செய்வேன்! கவலையை விடுங்கள், நடிக்க நானுண்டு! என்று சவால் விட முடியாத கதியற்ற நிலையிலன்றோ நான் இருக்கிறேன்? மாலை வேளைகளில் வாயைத் திறக்க முடியாத மாபாவியாக இருக்கிறேனே நான்?

எனக்கு அழுகை அழுகையாய் வருகிறது. தயவு செய்து, என்னருகே வந்திருந்து, இரண்டு வார்த்தை பேசி என்னைத் தேற்றுங்கள்.

உங்களையே நம்பி, உங்கள் நினைவாகவே உள்ள
மாணிக்கராஜ்

★

நண்பரே!

பிறவிக் குருடன் பார்வை பெற்று, டெக்னிகலர் சினிமாஸ்கோப் படம் பார்த்தாற்போல உங்கள் கடிதம் எனக்கு ஆனந்தம் தந்தது.

எங்கள் நாடகத்தில் நடிக்க ஏற்றவர் தாங்களே! தாங்களே! தாங்களே!

எதனால் இப்படிச் சொல்கிறேன்? கேளும், தொண்டை ஆபரேஷன் செய்து கொண்ட தயாளரே, கேளும்.

எங்கள் கதாநாயகர் ஓர் ஊமை.

நாடகத்தில் கடைசி வரை அவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசக் கூடாது! கதாநாயகி (அதாவது, சாட்சாத் நான்) சொல்வதற்கெல்லாம் தீனமாகப் பார்த்து, திருதிரு என்று விழிக்க வேண்டும். சைகை என்பது தண்ணீர் பட்டபாடாக இருக்க வேண்டும்.

மாணிக்கராஜ் மகானே! இத்தனை நாள் ஒத்திகையில் ஒருவர் கூடத் தேறவில்லை இந்த உயர் பதவிக்கு. உணர்ச்சி யோடு விழிக்காமல், திருட்டு விழி விழிப்பவர்கள் ஏராளம், ஏராளம்! வாயை மூடிக்கொண்டு இருக்கவாவது தெரிகிறதா? அதுவுமில்லை. அசந்தர்ப்பமாக ஏதாவது பேசி, அயனான கட்டத்தை அபத்தமாக்கும் அறிவிலிகளைக் கண்டு கண்டு வெறுத் திருந்த எனக்கு, தங்கள் கடிதம் தெவிட்டாத அமுதம்.

ஒத்திகை என்று தொடங்கலாம்?

உங்கள் அன்பு மறவா
ரேவதி

★

ரேவதி!

நான்தான் பேசாவிரதம் இருக்கிறேன். நீ பேசுவதற் கென்ன?

தெள்ளிய வெள்ளையலைகளைப் பார்; அதோ தொடு வானத்திலே நுனி காட்டும் கப்பலைப் பார்; இதோ, கரம் பட்டாணிக் கடலை விற்கும் கிழவரைப் பார்; அவர் பின்னா லேயே தத்திச் செல்லும் காக்கையைப் பார்.

இந்தச் சூழ்நிலையிலே நீ ஏன் வாயடைத்து மௌன மாய் இருக்கிறாய்?

உன்
மாணிக்கராஜ்

★

அன்பரே!

இப்படி ஊமையாகத் தினசரி தாங்கள் கடற்கரையில் கழிக்கும் நேரத்தில், வீட்டில் ஊமையன் பாகத்துக்கு ஒத்திகை பார்த்தாலும் பயனுண்டு என்று எண்ணுகிறேன்.

ரேவதி

★

ரேவதி!

உன் எண்ணம் சரியே.

மாணிக்கராஜ்

★

என் அன்புள்ள நண்பருக்கு,

நாடகம் நாளைய தினம் நடக்கிறது. மறக்க வேண்டாம்.

ரேவதி

★

ரேவதி!

பிய்த்து விடுகிறேன் பிய்த்து! கவலைப்படாதே. ஒத்திகை களில் எப்படி ஜமாய்த்துக் கட்டினேன் என்பதை நீ பார்க்க வில்லையா?

மா. ராஜ்

★

உயர்திரு மாணிக்கராஜ் அவர்களுக்கு,

இதுவே என் கடைசிக் கடிதம். எங்கள் நாடகத்தைக் குட்டிச் சுவரடித்து, எங்களை அவமானப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் தாங்கள் நடிக்க முன்வந்தீர்கள் என்பதை அறி யாத முட்டாளானேனே!

வேண்டுமென்றே, கடைசிக் காட்சியில் எதற்காக அப்படிக் கத்தினீர்கள், ரேவதி, ரேவதி! என்று? நான் நாட்டியமாட, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க, யாரோ ஒருவர் துப்பாக்கி யால் எங்கிருந்தோ சுட, நீங்கள் செத்து மடிவதாக அல்லவா கதை? அதை ஏன் கெடுத்தீர்கள்?

உங்கள் தொண்டை மேலும் மண்ணாகி, ரணமாகி, போர்க்களமாவதாக! இன்னுமொரு ஐந்நூறு தடவை டாக்ட ரின் கத்தி உங்கள் தொண்டையிலே விழுந்து புரண்டு விளை யாடுவதாக!

வணக்கம் — உங்கள் திக்குக்கே,

ரேவதி

★

ரேவதி! ரேவதி!

என்னை மன்னித்துவிடு. விளக்கம் இதோ வருகிறது. நேற்று மாலை வழக்கம்போல் டாக்டரிடம் போயிருந்தேன். 'உங்கள் மௌன விரதத்தை இன்றோடு முடித்துக் கொள்ள லாம். ஒரு மாதம் ஆகி விட்டது' – என்று தெரிவித்தார்.

என் ஆனந்தத்தை என்னவென்று சொல்ல? ஒரு மாதமாய் என் வாய்க்குப் போட்டிருந்த பூட்டு படீரென்று வெடித்து விட் டது! நாவுக்கிருந்த விலங்கு நொறுங்கி விட்டது! சுதந்திர புருஷன் நான்! 'விடுதலை! விடுதலை!' என்று ஆடிப் பாடி ஆனந்தக் கூத்தாடத் தோன்றியது.

உன்னைப் பார்க்க, உன்னோடு பேச, ஓட்டமாய் ஓடி வந்தேன் நாடகக் கொட்டகைக்கு. ஆனால் உன்னைக் காண வில்லை. கதாநாயகன் பாகத்துக்கான அழுக்குச் சட்டை, அழுக்குக் கோட்டுக்குள் என்னைத் திணித்து அரங்கத்துக்கு அனுப்பி விட்டார்கள்.

மேடையிலாவது உன்னோடு பேச முடிந்ததா? ஊமையின் பாகம். வாயைத் திறக்க முடியவில்லை. நாக்கு கெஞ்சிற்று; தொண்டை துடித்துத் தோப்புக் கரணம் போட்டது, உன்னோடு பேச வேண்டுமென்று பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருந்தேன். மனத்துக்குள் 'ரேவதி, ரேவதி' என்ற ஜபம் நிற்காமல் நடந்தது.

வில்லன் வந்தான் மேடையிலே; பல்லைக் காட்டினான் உன்னிடம்; நான் பேச நினைத்ததையெல்லாம் அவன் பேசினான். எனக்குக் கிட்டாத பேறு அவனுக்குக் கிட்டியதைக் கண்டு பொருமினேன்.

கடைசிக் கட்டம்; நீ நடனம் ஆடினாய். என்னுள் எதுவோ உறுத்திற்று, அதாவது, சட்டைக்குள். ஹைதர் காலத்துச் சட்டையை உதறாமலே மாட்டிக் கொண்டு வந்ததன் பலனாய், பல்லியோ, பூரானோ, தேளோ, சிங்கமோ என் முதுகை நக்கி ருசித்தது.

அப்படியும் பொறுத்தேன்.

திடீரென்று ஒரு கடி! முதுகில் சுரீரென்று ஒரு வலி!

''ரேவதி!'' என்று கத்தி விட்டேன். நாக்கு நுனியில் நின்றிருந்தது அந்த ஒரே சொல்தானாகையால், அபாய வேளையில் டபக்கென்று வெளியே வந்துவிட்டது. நல்லவேளை, நாடகக் கதாநாயகியின் பெயரும் ரேவதியாகையால், ரசிகர்கள் கலாட்டா பண்ணவில்லை.

போனது போகட்டும். உன் மனத்துக்கு ஆறுதல் தரும்படி இத்துடன் ஒரு பத்திரிகை வெட்டு அனுப்பியிருக்கிறேன். நமது நாடக விமரிசனம் அது. படித்துப் பார்.

என்றும் உன்
மாணிக்கராஜ்

...நடைபெற்ற நாடகத்தின் முடிவு மிகப் பிரமாதம். அசல் கதைப்படி முடிவு சப்பென்று இருந்தது. பிற்பாடு நிர்வாகிகள் அதை மாற்றினார்கள் போலும். கதாநாயகி அற்புதமாய் நடன மாட, பார்த்துக் கொண்டேயிருக்கும் ஊமைக் கதாநாயக னுக்கு உணர்ச்சி மேலிட்டு, 'ரேவதி!' என்று தன்னையறி யாமல் கத்தி விடுகிறான். அவனுக்குப் பேசும் சக்தி வந்து விட்டது திடீரென்று! ஆகா! எவ்வளவு பொருத்தமான முடிவு!...

★

அன்பே!

மன்னியுங்கள்! மன்னியுங்கள்! மன்னியுங்கள்! மன்னியுங் கள்!

ரேவதி

★

15. அம்மா, வராதே!

மாமி அவர்களின் பாதங்களில் பத்மா நமஸ்கரித்து எழுதிக் கொண்டது

இப்பவும் தாங்கள் கிராமத்துக்குப் போய் ஒரு வருடத்துக்கு மேலாகிறது. சாதாரணமாகத் தாங்கள் மூன்று மாதத்துக்கு மேல் அங்கு தங்குவதில்லையே. ஆகவே, இந்தத் தடவை தங்களுக்கு என் மீது ரொம்பக் கோபமென்றே நினைக்கிறேன். (தாங்கள் ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் நான் தங்களுக்குப் பிடிக்காத வெங்காய சாம்பார் வைத்ததும், அதற்காகத் தாங்கள் கோபித்துக் கொண்டதும் எனக்கு நன்றாய்

ஞாபகம் இருக்கிறது.) எதுவாயிருந்தாலும் இந்த மரு மகளைத் தாங்கள் பெரிய மனசுடன் மன்னித்து உடனே வர வேண்டும். அதுவும் இரண்டு மாதமாய் எனக்கு என்னவோ போல் இருக்கிறது உடம்பு. அம்மா இல்லாத என்னை நீங்கள் தானே கவனிக்க வேண்டும்? ஆகவே நீங்கள் புறப்பட்டு வரும் தேதியை உடனே தெரிவிக்கக் கோருகிறேன்.

இங்கே உங்கள் பிள்ளை சௌக்கியமாய், சமர்த்தாய் ஆபீஸ் போய்வந்து கொண்டிருக்கிறார். மாமாவுக்கு என் நமஸ் காரங்களைச் சொல்லுங்கள். எப்போதும் போல் காலையில் எழுந்ததும் சேர்ந்தாற்போல் ஐம்பது தும்மல் தவறாமல் போட்டு வருகிறாரா?

அன்புள்ள
பத்மா

★

அப்பாவுக்கு ராகவன் பணிவுடன்
எழுதிக் கொண்டது

இப்பவும் அம்மா இங்கே வந்து ஒரு வருடத்துக்கு மேலாகப் போவதால், எந்த நிமிடமும் இங்கே வந்து குதித்து விடுவாளோ என்று பயமாய் இருக்கிறது. அதுவும் இப்போது ஆபீசில் எனக்குப் பிரமோஷனுக்காகப் பரீட்சை நடக்கிறது. அதற்காக இரவும், பகலுமாய்ப் படித்துக் கொண்டிருக்கி றேன். இந்தச் சமயத்தில் அம்மா இங்கே வந்தால் வீடு குரு க்ஷேத்திரம்தான். அப்புறம் என் பாஸ் டப்பாஸ்தான். அத் தோடு பத்மாவும் ஏதோ உடம்பு பலவீனமாக இருந்து வரு வதால் அம்மாவோடு சண்டை போட முடியாது. வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்வாள். ஆகவே, அம்மா இங்கே வருவதாக ஒருவேளை எண்ணியிருந்தால், எப்படியேனும் தடுத்து நிறுத்திக் கொள்ளவும்.

தங்கள் அன்புள்ள குமாரன்
ராகவன்

மட சிகாமணியாக நான் பெற்றெடுத்த
மைந்தனுக்கு ஆசிர்வாதம்

சின்ன வயதிலிருந்தே எப்போதும் ஒன்று கடக்க ஒன்று செய்வதே உனக்கு வழக்கமாகி விட்டது. இன்றுதான் உன் மனைவி பத்மாவும் உன் அம்மாவுக்கு எழுதியிருக்கிறாள் உடனே புறப்பட்டு வரும்படி. அதைக் கவனித்தால், மடப் பயலே, பத்மா ஏதோ குளிக்காமல் கிளிக்காமல் இருக்கிற மாதிரியல்லவா தெரிகிறது? அப்படித் தோன்றிவிட்ட பிறகு சும்மா இருப்பாளா உன் அம்மா? இந்த நிமிடமே புறப் பட்டுத்தான் ஆகவேண்டும் என்று பறக்கிறாள். இனிமேல் ஈசுவரனே வந்தாலும் அவளைத் தடுத்து நிறுத்த முடியாது.

உன்
அப்பா

★

என் பிரியமுள்ள பத்மாக் கண்ணுவுக்கு,

உன் கடிதம் பார்த்ததிலிருந்து நான் படும் சந்தோஷத்தை இதில் எழுத முடியாது. ராகவன் ஒரு மண்டு. ஒரு மண்ணும் தெரியாது. இப்படி வயிறும் பிள்ளையுமாயிருக் கிற சிறிசை எப்படிப் பார்த்துக் கொள்வது என்று துளி தெரியுமா?

நான் வருகிற புதன்கிழமை கட்டாயம் புறப்பட்டு வரு கிறேனடியம்மா.

அம்மா

★

எப்படியாவது அம்மாவை நிறுத்தவும் — மிக முக்கியம். — கடிதம் தொடர்கிறது.

ராகவன்

★

அப்பாவுக்கு,

உங்களுக்குத்தான் ஒரு இழவும் தெரியவில்லை. கேவலம் ஒரு பெண் பிள்ளையை—அதுவும் உங்களுடைய சொந்தத் தாலி கட்டிய மனைவியை — அடக்கியாள உங்களால் முடிய வில்லையே? வெட்கமாயில்லையா? அம்மா இப்போது இங்கே வந்தால் — ஐயோ! நினைக்கவும் பயமாயிருக்கிறது. நான் ஐந்து வருடமாய் ரொம்ப ஆசையுடன் பிரயத்தனப்பட்டு வருகிற பிரமோஷன் இது. ஆபீஸ் பரீட்சையில் நான் கட் டாயம் பாஸ் பண்ணியாக வேண்டும்.

அம்மாவை நிறுத்தா விட்டால் நான் உங்கள் முகத் திலேயே விழிக்க மாட்டேன்.

ராகவன்

★

மாமிக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

உங்கள் கடிதம் பார்த்து ரொம்ப சந்தோஷம். ஆனால், நீங்கள் நினைக்கிறபடியெல்லாம் எனக்கு எதுவும் இல்லை. வெறும் பலவீனம்தான். இதற்காக நீங்கள் வராமல் இருந்து விட வேண்டாம். கட்டாயம் வரவும்.

பத்மா

★

அன்புள்ள குமாரன் ராகவனுக்கு,

உன் கடிதமும், தந்தியும் கிடைத்தன. இந்நேரம் உன் அம்மாவே அங்கு வந்து சேர்ந்திருப்பாளாகையால் இனிமேல் தடுக்கவும் முடியாது. பத்மா கூட தனக்கு வேறுவிதமாய் ஒன்றுமில்லையென்று எழுதியிருந்தாள். அப்படியும் உன் அம்மா புறப்பட்டு விட்டாள் — அதுவும் இரண்டு நாள் முன்னதாகவே.

என்னை நீ ரொம்ப மன்னிக்க வேண்டும். மகன் என்ற முறையில் தந்தையாகிய எனக்கு நீ ஆற்றிய உதவி இது. கடந்த ஒரு வருடமாக நான் உன் அம்மாவிடம் தன்னந் தனியே இந்தக் கிராமத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிற தவிப்பு எனக்கும் என்னைப் படைத்த தெய்வத்துக்கும் தான் தெரியும். அதனால்தான் அவளைத் தடுத்து நிறுத்த நான் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. உனக்கு ரொம்ப நன்றி. இந்த ஒரு வாரமாக நான் எவ்வளவு அக்கடாவென்று நிம்மதியாக இருக்கிறேன் தெரியுமா? எல்லாம் உன் கிருபை.

உன் பிரியமுள்ள
அப்பா

★

நீங்களும் அப்பாவா! இல்லை! எனக்கென்றே அவதரித்த எமன்! சொந்த சுகத்துக்காக பந்தமுள்ள மைந்தனைக் கொடுமைப் படுத்திய கபந்தன்! நீங்கள்... நீங்கள்....! க்ர் க்ர் க்ர்ர்ர்.....

ராகவன்

பி.கு. : பத்து நாளாய் வீடு சகிக்கவில்லை. படுரண களம். நான் ஆபீசிலேயே படுக்கை, சாப்பாடு வைத்துக் கொண்டு விட்டேன். இந்தப் பாவத்துக்கு நீங்கள்....

★

ராகவனுக்கு,

எனக்கு நாலு நாளா ப்ளூ ஜுரம். ஒண்டியாய்க் கஷ்டப் படுகிறேன். உடனே உன் அம்மாவை ரயிலேற்றி அனுப்பி வை.

அப்பா

★

கடிதத்துக்குப் பதில் இல்லை — ப்ளூ ஏறுகிறது — ஒரே பயம் — உடனே அம்மாவை அனுப்பு.

அப்பாவுக்கு மிக்க நன்றியுடன் ராகவன் எழுதிக் கொண்டது. நேற்றுக் காலை அம்மா பத்திரமாய் வந்து சேர்ந் திருப்பாள். நீங்கள் கடிதம் எழுதி, தந்தி போட்ட உடனே அவளை அனுப்பாததற்கு மன்னிக்கவும்.

காரணமாய்த்தான் அவளை நிறுத்தி வைத்துக் கொண் டிருந்தேன்.

நான் பயந்தபடி, மாமியாரும், மருமகளும் இரண்டாம் நாளே குடுமியைப் பிடித்துக் கொள்ள ஆரம்பித்து விட் டார்கள். நான் சகிக்க முடியாமல் ஆபீசிலேயே தங்க ஆரம் பித்தேன்.

அப்புறம்தான் ஓர் உண்மை தெரிந்தது. வீட்டில் இருந் ததைக் காட்டிலும், ஆபீசில் நன்றாய்க் கவனித்துப் படிக்க முடிந்தது! வீட்டில் இருந்தால் தெருக்கூச்சல், பக்கத்து வீட்டுக் குழந்தைகள் ரகளை, நண்பர்கள் வருகை — இப்படிப்பட்ட தொந்தரவு எதுவும் இல்லை ஆபீசில். நிம்மதியாகப் படிக்க முடிந்தது. இந்த உண்மை புலப்பட்டதும், ஆபீஸ் பரீட்சை முடிகிற வரையில் வீட்டில் சண்டையை நீட்டிப்பது என்று தீர்மானித்தேன். அதனால்தான் அம்மாவை உடனே அனுப்ப வில்லை. முந்தாநாள்தான் பரீட்சை முடிந்தது. வெகு நன்றாக எழுதியிருக்கிறேன். எல்லாம் நீங்கள் செய்த உதவியால்தான்.

நன்றியுடன்
ராகவன்

பி.கு. : நேற்று பத்மாவை டாக்டர் பார்த்துவிட்டு அவள் உடம்பு மிக நன்றாய்த் தேறியிருக்கிறதென்று சொன்னார். ஆக, அம்மாவோடு தினசரி சண்டை போட்டது அவளுக்குப் பெரிய 'எக்ஸர்ஸை'ஸாக இருந்தது போலிருக்கிறது. இனி மேல் எப்போது பத்மாவுக்கு வீக்காக இருந்தாலும் கடிதம் போடுகிறேன். அம்மாவை அனுப்புங்கள். ரா.

16. கேட்டாயா?

உலகமறியாப் பெண்ணின் வாழ்க்கைக்கு
உலை வைக்கவிருந்த உலுத்தரே!

திரு. வேதநாயகத்துக்கு வணக்கம்.

'கல்லூரி ஆசிரியர் என்ற போர்வையில் பதுங்கியுள்ள வல்லூறு' என்ற பட்டத்தை முதலில் தங்களுக்குச் சூட்டி விட்டு, விஷயத்தைக் கூறுகிறேன்.

இந்த ஆண்டு பரீட்சை எழுதிய மாணவ மாணவியரின் மார்க்குகளைக் கூட்டி, தலைவிதியைத் தீர்மானிக்க ஏற்படுத்தப் பட்ட கணக்கர்கள் குழுவில் தாங்களும் ஓர் உறுப்பினராகச் சேர்ந் தது தமிழ் நாட்டின் துரதிருஷ்டமே. என் சொந்தத் துரதிருஷ்டம் என்னவெனில், நண்பருக்கு நண்பர் என்ற வகையில் என் தந்தை தங்களுக்கு அறிமுகமானதே.

என் பரீட்சை எண்ணை ரகசியமாகத் தங்களிடம் என் தந்தை கொடுத்தார். முடிவை ரகசியமாயும் முன்னதாயும் தெரிவிக்கும்படி ரகசியமாகக் கேட்டுக் கொண்டார். அவ் வண்ணமே செய்வதாகத் தாங்கள் வாக்களித்தீர்கள்.

மறுநாள் என் தந்தை தங்களிடம் வந்தார்.

முடிவைக் கேட்டார்.

'பணால்' என்றீர்கள்.

தந்தை வீடு திரும்பினார். என்னைத் திட்டுத் திட்டென்று திட்டினார். பரீட்சைக்குப் படிக்காமல் நான் நாட்டியத்திலே நாட்டம் செலுத்தியதைச் சுட்டிக்காட்டிக் குற்றம் சாட்டினார். நாக்கைப் பிடுங்கி நடுச்சாலையில் எறிந்து விட வேண்டும் போல் எனக்கு அவமானமும் ஆத்திரமும் வந்தது. இருந்தும் பொறுத்திருந்தேன்.

இன்று பத்திரிகைகளில் முடிவுகள் வெளியாயின. என்ன கண்டேன்?

என் எண், பளீரென்று, தீபாவளி மத்தாப்பாய், தீபாலங்கார ஜோதியாய், எண்களின் நாயகமாய்க் காட்சியளிக்கிறது.

என்ன சொல்லுகிறீர்கள் இதற்கு? ஓர் இளம்பெண் ணின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட பாவத்தை எந்தக் கங்கையில் முழுகிப் போக்கப் போகிறீர்?

நான் மட்டும் சர்வாதிகாரியாக இருந்து, நீர்மட்டும் அந்த நாட்டிலே ஒரு பிரஜையாக இருந்திருந்தால் உமது தலை மட்டும் இந்நேரம் தரையில் உருண்டிருக்கும்! முன்னவை இரண்டும் இல்லாததால் பிந்தைய மூன்றாவது நடவாமற் போயிற்று. பிழைத்தீர்கள்.

குமாரி ஜமுனா

★

குமாரி ஜமுனா அவர்களுக்கு,

திரு. வேதநாயகத்துக்கு எழுதிய கடிதத்தை, தபால் காரர் என்னிடம் தந்தார் என்ற ஒரே காரணத்துக்காக உடைத் திருக்கக் கூடாதுதான். ஆனால் உறையின் மீது இருந்த கை யெழுத்து — ஐயோ! எழுத்தா அது? முத்தாரம்! மணியாரம்! பணியாரம்! — என்னை நெறி தவறி நடக்க வைத்துவிட்டது.

இவ்வளவு மாபெரும் தீங்கிழைத்த வேதநாயகத்துக்கு அவ்வளவு சாந்தமாகக் கடிதம் எழுதியிருக்கிறீர்களே! தங்க ளுக்கு ஒரு கோவில் கட்ட ஏன் உடனடியாக ஒரு நிதி திரட்டக் கூடாது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்து, திரு. வேதநாயகம் வேறு பலருக்கும் தப்புத் தகவல்கள் தந்துள்ளார். அவரைச் சொல்லியும் குற்றமில்லை. அவருக்குத் தகவல் தந்தவர்கள் அப்படிக் காலைவாரி விட் டிருக்கிறார்கள் அவரை. ஆனால், கத்தியும் கையுமாக அவரைக் காணக் காத்திருக்கும் சிலர் இந்தச் சமாதானத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்?

நிற்க. திரு. வேதநாயகத்தை வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஒரு வழி இருக்கிறது. கேளுங்கள். அவருடைய வீட்டி லேயே, அவருடைய சொந்த மருமான் ஒரு இளைஞன் இருக் கிறான். அவனைக் கண்டால் வேதநாயகத்துக்குத் துளியும் பிடிக் காது. நீங்கள் அந்த மருமானிடம் அன்பாய் இருப்பது போல

அடிக்கடி வந்து பேசுங்கள். வேதநாயகம் வயிறெரிந்து பேசு வார்; அல்சர் வந்து போவார். எப்படி?

தங்கள் நன்மை கோரும்
நாகசாமி

பின் குறிப்பு : அந்த மருமான் அடியேன்தான்.

நா.

★

ஐயா நாகசாமி!

நீங்கள் வேதநாயகத்துக்கு மருமானாயிருந்தாலும் சரி, தாத்தாவாகவே இருந்தாலும் சரி! கவலையில்லை. என் கடிதம் ஓர் ஆசாமிக்குப் புத்தி கூற எழுதப்பட்டது. அதை அவர் படிக்க வேண்டும். உடனே காட்டுகிறீர்களா அல்லது அதற்கு இன்னொரு நகலெடுத்து, ரெஜிஸ்டர் தபாலில் அவருக்கு நேரே அனுப்பி வைக்கட்டுமா?

அதிகப்பிரசங்கத்தை அடியோடு வெறுக்கும்
ஜமுனா

★

ஜமுனா தேவி!

இத்தனை சினம் வேண்டாம் தங்களுக்கு. கடிதத்தை அவரிடம் காட்ட ஆட்சேபம் இல்லை. ஆனால் என்னவோ பாருங்கள், தங்கள் கடிதத்தின் கீழே, ஏதோ நினைவில் 'ஜமுனா, ஜமுனா,' என்று பத்துப் பதினைந்து முறை நான் பாட்டுக்குக் கிறுக்கித் தொலைத்து விட்டேன். கடிதத்தைப் பார்த்து விட்டு, 'யார் இந்த ஜமுனா?' என்று மாமா கேட்டால் என்ன சொல்வது? அந்தப் பெண்ணின் மீது தீராக் காதல் என்று சொல்லுவது நன்றாயிருக்குமா? நமது அந்தரங்க விவகாரங்கள் அயலாரிடம் போகலாமா? ஆக, அதை அத்தோடு விடுங்கள்.

தவறு செய்வது யாருக்கும் சகஜம். உதாரணமாக, உங்கள் தந்தை கனகசபையையே எடுத்துக் கொள்வோம். என் அப்பா வின் சினேகிதராம் அவர். நான் வேலைக்காக அலைவதை அறிந்து, டவுனில் ஒரு கம்பெனியின் பெயரைச் சொன்னார். அங்கே போய், தன் பெயரைச் சொன்னால் கைமேல் வேலை என்று தலைமேல் அடித்தார்.

ஓடினேன் விழுந்தடித்துக் கொண்டு. என்ன கண்டேன்?

அருமையான அலிகார் பூட்டைத்தான்!

மேற்படி கம்பெனி கோவிந்தாவாகி ஆறு மாதம் ஆகிறதாம்.

ஏனையா பொய்த் தகவல் தந்தீர் என்று உங்கள் அப்பா மீது புலிப் பாய்ச்சல் பாய்வது பெருந்தன்மையாகுமா?

விட்டுத் தள்ளுங்கள்.

தங்கள்
நாகஜாமி

(பார்த்தீர்களா? இந்த 'ஜ' எழுத்து எதில் எடுத்தாலும் குறுக்கே புகுந்து கலாட்டா பண்ணுகிறது.)

பி.கு. : தங்களுடைய முதல் கடிதத்தில், நாட்டியம் என்று ஏதோ குறிப்பிட்டிருந்தீர்கள். அரங்கேற்றம் ஆகி விட்டதா?

நா.

★

திரு. நாகசாமி,

என் தந்தையை இழித்துரைப்பவரை என் தாய் தடுத்தாலும் விடேன். இக்கடிதம் எழுத அதுவே காரணம்.

என் அப்பா உங்களிடம் சொன்னது தப்பான செய்தி அல்ல. என்னுடைய ஒன்றுவிட்ட பெரியப்பா ஒருவர் டவுனில்

'ராஜேந்திரா கம்பெனி' என்று ஒன்று நடத்தி வருகிறார். அங்கே என் அப்பாவுக்கு அபார செல்வாக்கு. பிரமாதமாக நடைபெறுகிறது, அந்த ஸ்தாபனம். அதுவாவது கோவிந்தா ஆகவாவது! வேறு எதையோ பார்த்துவிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். நாளைக்கே என்னோடு புறப்பட்டு வந்தால் நானே அழைத்துப் போய், பெரியப்பாவிடம் உங்களைப் பற்றிச் சொல்லத் தயார். மூக்கை உடைத்துக் கொள்ளத் தயாரா தாங்கள்?

இங்ஙனம்
ஜமுனா

பி.கு.: நாட்டிய அரங்கேற்றம் ஆகி நாலு வருடமாகிறது. வேறு கச்சேரிதான் எதுவும் அமையவில்லை.

ஜ.

★

ஜமுனா!

உன் உதவிக்கு மெத்த நன்றி.

மாம்பலத்தின் மேலண்டை முனையில் 'செந்தில்நாதன் பூங்கா' இருக்கிறதே தெரியுமா? அங்கே நாளை நாலு மணிக்குக் காத்திருப்பேன். மிக அருமையான இடம். நல்ல சூழ்நிலை. நாலு விஷயமும் பேசலாம். அங்கிருந்து புறப்பட்டுச் சென்றால், நான் சொன்னது சரியா, உங்கள் அப்பா சொன்னது சரியா என்பதை மட்டைக்கு இரண்டு கீற்றாகப் புரிந்து கொண்டு விடலாம்.

நாகசாமி

★

அன்பே ஜமுனா!

க்யூவில் தவம் செய்தவனின் டிக்கெட்டைப் பறித்தாற் போல, நாடி நின்ற என்னை வாடவிட்டு ஓடினாயே நேற்று? நியாயமா?

உன் அழகில் மயங்கி அரை வினாடி பேச்சற்று நான் மரமானது உண்மை. பூச்செடிக்குப் பக்கத்தில் திடீரென ஓர் பொற்கொடி படர்ந்தது எப்படி என்று திகைத்துத் தடியனானதும் மெய்யே. அந்த மதிமயக்கத்தில் நான் அடுத்த சில வினாடிகளுக்கு என்னென்னவோ உளறியதையும் மறுக்கவில்லை.

ஆனால், ஐயோ! ஆனால், அதற்காக நீ அப்படிச் சடாரென என் அன்பை உதறிவிட்டு ஓடலாமா? சொல் ஜமுனா, சொல்!

உன்

நா

க

சா

மி.

(அதிர்ச்சியில், பேனா நிலையாக, நிற்க மறுத்து நடுங்குவதை நீயே பார்.)

★

உயர்திரு. நாகசாமி அவர்களுக்கு,

ஒரு கோடிக் கும்பிடு. தென்றலடிக்கும் வேளையில், நீங்கள் திங்கள் மயங்கும் சோலையில் என்னிடம் தத்துப் பித்தென்று கூறியது காதல் பேச்சானால் பொறுத்திருப்பேன். ஆனால், என் நாட்டியக் கச்சேரியைப் பற்றி விசாரித்தவர், திடீரென, 'மாமா வேதநாயகம்' என்று ஏதோ, ஆரம்பித்தது ஏன்? என்ன துணிச்சல் உங்களுக்கு, அந்தப் போக்கற்றவரின் பெயரை என் காதிலே போட?

முடியாது ஐயா, மன்னிக்க முடியாது.

பி.கு. : 'வேதநாயகம்' என்ற வார்த்தை வருமுன்னால் வேறு ஏதேதோ பேசினீர்களே, அதை ஒரு காகிதத்தில் குறித் தனுப்ப முடியுமா? அப்போது காதில் சரியாக விழவில்லை.

ஜ.

★

ஜமுனா! என் ஜமுனா!

வேத – சட்! அந்த ஆசாமியின் பெயரைக் குறிப்பிடவே நான் தயாராய் இல்லை — ஒழிக!

உடனடியாக ஒரு வேலை தேவை. அதற்கப்புறம்தான் எனக்குக் கல்யாணம் என்று என் அப்பா கூறிவிட்டார். உன் அப்பாவும் அதை ஆமோதிப்பதாகத் தெரிகிறது. வேலை! ஜமுனா! அது எங்கே இருக்கிறது?

டவுனுக்கு அழைத்துச் சென்று உன் பெரியப்பாவின் கம்பெனியில் சிபாரிசு செய்வாயா?

காத்திருக்கும் காதலன்
நாகசாமி

★

அன்பரே!

உங்கள் பொன்னான வாயால் ஒரு முறை புகலுங்கள், மன்னித்தேன் என்று. நேற்று உங்களை எவ்வளவு டஜன் இடுக்கண்களில் நான் சிக்க வைத்து விட்டேன். பிறர் தவறைச் சுட்டிக்காட்டி வந்த எனக்கு எத்தனை பெரிய குட்டு!

முதலாவதாக, டவுனில் பெத்தசாமி தெருவுக்கு எட்டாம் நம்பர் பஸ் போகுமென்று விடாப்பிடியாகப் பிடித்து, உங்களை யும் நம்ப வைத்து, ஏறச் செய்தேன். அடுத்த ஸ்டாப்பிலேயே இறங்க நேரிட்டது, ஒன்பதாம் நம்பருக்காக. ஒன்பதாம் நம்பர் பஸ்ஸில், மூன்றரையணாவுக்கு முப்பத்தேழு நயா

பைசா என்று கூறி, உங்கள் புத்தியைக் கலக்கி, கண்டக்டரிடம் பைத்தியக்காரப் பட்டம் வாங்கித் தந்தேன். அதையும் பொறுத்துக் கொண்டு என்னோடு வந்தீர்கள்.

'ராஜேந்திரா கம்பெனி' திறந்திருந்தது. அதுவே என் பெரியப்பா கடை என்று ஏரேயடியாய்ச் சாதித்தேன், இல்லை, பக்கத்தில் பூட்டிக் கிடந்த 'ரவீந்திரன் கம்பெனி'தான் அவருடையது என்ற உண்மை பத்தே நிமிடத்தில் புலப்பட்டது.

அதற்கு மேலும் உங்களுக்கு அருகே நிற்க எனக்கு அருகதை ஏது? சொல்லாமல் நழுவி வந்துவிட்டேன்.

ஊராரைப் பழி கூறிய இந்த உதவாக்கரையை மன்னிப்பீர்களா?

ஜமுனா

★

ஆருயிரே ஜமுனா,

கலங்காதே கண்மணி! கண்ணைத் துடைத்துக்கொள். எல்லாம் நன்மைக்கே.

ராஜேந்திரா கம்பெனி வாசலில் நீ மாயமாய் மறைந்த மர்மம் அறியாது திகைத்து நிற்கையிலே தோன்றினார் திரு. வேதநாயகம் — கோபிக்காதே! அவரும் நல்லவரே.

'ராஜேந்திரா கம்பெனி' மானேஜர், அரிச்சுவடியில் மட்டும் மூன்று வருடம் என் மாமாவோடு படித்தவராம். ஊருக்குத் திரும்புமுன் அவரைப் பார்க்கவென்று வந்தாராம். வேலை நாடிவந்த எனக்கு வாங்கித் தந்தார் அக்கணமே.

இது ஒரு கல்லில் அடித்த முதல் மாங்காய்.

இரண்டாவது மாங்காய், உன் நாட்டியக் கச்சேரி.

தனக்குத் தெரிந்த யாரோ ஒருவர் ஏதோ ஒரு சபாவின் செயலாளராக இருப்பதாய் முன்பொரு முறை மாமா கூறி இருந்தார். அதை அன்று பூங்காவில் சொல்ல வாயெடுத்த போதுதான் நீ சுர்ரென்று சீறி, சரேலென்று மறைந்தாய். இப்போது என்னவென்றால், அந்தச் சபாவின் அந்தச் செயலாளர் தான் இந்த 'ராஜேந்திரா கம்பெனி'யின் மானேஜர். அடுத்த மாதமே உனக்கு ஒரு சந்தர்ப்பம் தர அவர் ஒப்புக் கொண்டு விட்டார். இது தப்புத் தகவலல்ல. தாய் மீது ஆணையான சத்தியச் சொல்.

உன்ன்ன்ன்ன்
நாகசாமி

★

அன்பரே!

என் அப்பாவும் உங்கள் அப்பாவும் ரொம்ப ரகசியமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். முகூர்த்தம் என்ற பதம் மூச்சுக்கு மூச்சு அடிபடுகிறது. இதுவும் தப்பான தகவல் அல்ல.

கழுத்துத் துடிக்கக் காத்திருக்கும்
ஜமுனா

★

17. சுபாஷுக்கு ஒரு சபாஷ்

்டர் சுபாஷ் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களுக்கு வந்த ஒரு கடிதத்தைத் தபால்காரர் தவறுத கப் போட்டுவிட்டுச் சென்றதால் அதைத் தவறுதலாகப் த்து, தவறுதலாக வாசிக்க நேரிட்டது.

படித்து முடித்ததும், தாங்கள் எவ்வளவு தவறுதலான காரி கள் செய்கிறவர் என்பதைப் புரிந்து கொண்டேன். தாங்கள்

செய்வது சுத்தமாக நன்றாயில்லை. சுபாஷ் என்கிற பெயருக்கு ஒரு சபாஷ் போடும்படி இல்லவே இல்லை.

இங்ஙனம்
சுகுமாரி

★

மிஸ் சுகுமாரி அவர்களுக்கு,

(எடுத்த எடுப்பிலேயே ஒரு சந்தேகம். தங்கள் பெயர் சுகுமாரியா அல்லது சு. குமாரியா?)

வணக்கம். தங்கள் கடித உறையைப் பிரித்ததும் தாங்கள் எழுதியிருப்பதைப் படித்ததும், எனக்குப் பகீரென்றது.

ஏனெனில், அதனுள்ளே எனக்கு வந்த கடிதம் எதையும் தாங்கள் வைக்கவில்லை! மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது.

'தவறுதலாக' காரியம் நான் ஏதோ செய்திருப்பதாக அந்தக் கடிதத்திலிருந்து புலப்படுவதாக எழுதியிருந்தீர்கள். அதுதான் என் வயிற்றில் மேலும் அரைக் கிலோ புளியைக் கரைக்கிறது. காரணம், தவறுதலான காரியங்கள் பல செய்து, பல பேரிடம் சில விதத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறவன் நான். தங்கள் வீட்டில் தபால்காரர் போட்டு விட்டுச் சென்ற கடிதம் எந்தத் தவறுதலாக இருக்குமோ என்று ஒரே குழப்ப மாக இருக்கிறது.

உடனே பதில்.

சுபாஷ்

(பி.கு.: இப்படி ஒரே தெருவில் வசித்து வந்த போதிலும் நாம் கடிதம் மூலம் சந்தித்துக் கொள்கிறோமே தவிர, நேரில் பார்த்துக் கொள்ளாதது வேடிக்கையாக இல்லை? – சு.)

★

உயர் திரு. சுபாஷ் அவர்களுக்கு,

என் பெயர் சுகுமாரிதான். சு. குமாரி அல்ல. உங்கள் பெயரை சு. பாஷ் என்று எழுதினால் எவ்வளவு அபத்தமாக இருக்குமோ அதுபோல் என் பெயரைப் பிரித்தாலும் இருக்கும்.

நிற்க. தங்களுக்கு வந்த ஒரிஜினல் கடிதத்தை வைக்க மறந்து விட்டது குறித்து வருந்துகிறேன். இத்துடன் அதை அடக்கம் செய்துள்ளேன். தவணைக் கம்பெனியான நைனியப்பா அன்ட் கோவிடமிருந்து அது வந்துள்ளது என்றும், அவர்களிடம் வாங்கிய கடியாரத்துக்குத் தாங்கள் மூன்றாம் தவணைக்குப் பிறகு பணமே செலுத்தவில்லை என்றும் எழுதியிருப்பதைக் காண்க. அதைத்தான் யாம் எமது முந்திய கடிதத்தில் 'தவறுதலான காரியம்' என்று குறிப்பிட்டிருந்தோம்.

இங்ஙனம்

சுகுமாரி

(பி.கு. : நானும் தாங்களும் சந்திக்காதது பற்றி எழுதி இருந்தீர்கள். நான் தங்களைச் சந்தித்திருக்கிறேன். பல்கலைக் கழக ஸென்டினரி ஹாலில் மூன்று மாதம் முன்பு பிஸ்மில்லா கான் ஷெனாய் நிகழ்ச்சிக்கு நீங்கள் வந்திருந்த் போது, நான் பார்த்திருக்கிறேன். இடைவேளையின்போது, இரும்பு கேட் இடுக்கு வழியாகப் பாப்கார்ன் வாங்க முயன்றதும், கையை எடுக்க முடியாமல் தவித்ததையும் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்.)

★

அன்புள்ள சுகுமாரி,

அம்மாடி! தங்கள் கடிதம் பார்த்த பிறகே ஆறுதல் அடைந்தேன். ஆபீஸ் பணத்தை எடுத்து ஜாக்பாட் விளையாடினேனே போன மாதம். அதைத்தான் கண்டுபிடித்து யாரேனும் எழுதியிருந்தார்களோ என்று பயந்து கொண்டிருந்தேன்.

நைனியப்பா அன்ட் கோவுக்குத் தவணைப் பணம் கட்டாதது பற்றி நான் அவமானப்படத் தேவையில்லை. அது கடியாரமல்ல, மோசடி. வாங்கிய நாள் முதல் அது சரியாக ஓடவில்லை. மணி தப்புத் தப்பாய் அடிக்கிறது. அதை நம்பிப் பல காரியங்கள் குட்டிச்சுவராகியிருக்கிறது. அந்தக் கடியாரத் துக்கு நான் பணம்தான் கொடுக்கவில்லை. நீங்களாயிருந்தால் பேட்டரி கூடப் போட மாட்டீர்கள். ஆகையினால்தான் அந்தக் கடியாரத்துக்கு ஒரு பைசாகூடத் தரக்கூடாது என்று பிடிவாத மாக இருக்கிறேன்.

ஸென்டினரி ஹால் நிகழ்ச்சி பற்றி அறிய மிக்க மகிழ்ச்சி. ஹாஹ்ஹா.... நானும் அன்று தங்களைப் பார்க்காமல் இல்லை; பாப்கார்ன் வாங்குவதற்காகக் கையை மறுபக்கம் நீட்டிய பிறகே தங்களைக் கண்டேன். 'ஆ! நம் தெருவிலே வசிக்கிற ரதி அல்லவா இவள்!' என்று மகிழ்ச்சியினால் பூரித்துப் போனேன்! அதனால் என் கைகளும் பெருத்து விடவே, கம்பியிலிருந்து இந்தண்டை எடுக்க முடியாமல் போயிற்று. நீங்கள் அந்தண்டை சென்றதும், என் உள்ளத்தைச் சோக இருள் கப்பியது. உடல் மெலிந்தேன். உடனே கையும் மெலிந்தது. கம்பியிலிருந்து எடுக்க முடிந்தது. (ஏதோ சங்க காலச் செய்யுளில் கேட்ட மாதிரி இருக்கிறதே என்று நினைக்க வேண்டாம், யாவும் ஒரிஜினல்.)

இங்ஙனம்

சுபாஷ்

(பி.கு. : நமக்குள் பெயர் ஒற்றுமை பார்த்தீர்களா? என் பெயரும் 'சு'-வில் ஆரம்பிக்கிறது. உங்கள் பெயரும் 'சு'- வில் ஆரம்பிக்கிறது.)

★

மிஸ்டர் சு(த்த) மட சம்பிராணி,

உங்கள் கடிதத்தைச் சுக்குச் சுக்காகக் கிழித்துப் போட்டு விட்டேன் என்பதை அறியவும்.

நைனியப்பா அன்ட் கோவிடமிருந்து வந்த கடிதத்தை உங்களுக்கு அனுப்பிய போதே நான் சொல்லியிருக்க வேண்டும் ஓர் உண்மையை. தேவையில்லை என்று விட்டு விட்டேன். இப்போது அந்த நிறுவனத்தைப் பற்றி நீங்கள் தாறுமாறாக எழுதியிருப்பதைக் கண்டதும் என் ரத்தம் கொதித்தது. தாள முடியவில்லை ஆத்திரம். அதனால் சொல்கிறேன்.

என் சொந்த மாமா சங்கரலிங்கம் நடத்துகிற கம்பெனி அது. அங்கே விற்கப்படும் கடியாரத்தைப் பற்றி அவதூறாக எழுத உமக்கு என்ன துணிச்சல்! பாக்கிப் பணத்தைக் கட்டாத தோடு இந்த மாதிரி இழிவாகப் பிரசாரம் வேறா?

மரியாதையாக உடனே பணத்தை அனுப்பி வையுங்கள் என் மாமாவுக்கு.

இங்ஙனம்
சுகுமாரி

★

ஹரே சுகுமாரி,

பம்பு வைக்கப் போய்ப் பாம்பு கிளம்பிய கதையாக இருக்கிறதே!

தவணைக் கடியாரம். தவணை முறையில்தான் மணி காட்டுகிறது. அதாவது, இன்று பத்து, நாளை பதினொன்று, அதற்கு மறுநாள் பன்னிரண்டு என்று ஒரு நாளில் ஒரு மணி நேரம் தான் ஓடுகிறது. உனக்குச் சந்தேகம் இருந்தால் வந்து பார்.

அன்புடன்
சுபாஷ்

★

மிஸ்டர் சுபாஷ்,

நான் வந்து எதையும் பார்க்கத் தேவையில்லை. அதற்காக நீர் கொண்டு வந்து காட்டவும் வேண்டாம்.

சங்கர் லிமிடெட்டில் ஒரு ஸ்டெனோ வேலைக்கு மனுப் போட்டிருந்தேன். பேட்டிக்கு வரச் சொல்லி எழுதியிருக் கிறார்கள். இதோ போய்க் கொண்டேயிருக்கிறேன். உங்களைப் போன்ற அடாவடிக்காரர்களுக்குப் பதில் எழுதி வீணடிக்க எனக்கு நேரமில்லை.

கும்பிடுடன்
சுகுமாரி

★

சுகுமாரி,

கோபம் பிறகு வைத்துக் கொள்ளலாம். கேள்விக்கு முதலில் பதில் சொல்லு.

சங்கர் லிமிடெட்டில் பேட்டி என்னவாயிற்று?

சுபாஷ்

★

மிஸ்டர்!

அதைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டியது அனாவசி யம். வேலை கிடைக்கவில்லை. சந்தோஷமா?

சுகுமாரி

★

டியர் சுகுமாரி,

உனக்கு நைனியப்பா அன்ட் கோ எப்படி வேண்டிய இடமோ அதே போல்தான் எனக்கு சங்கர் லிமிடெட். அதா வது என் மாமாதான் இங்கே மானேஜர்.

உனக்கு வேலை கிடைக்காததைப் பற்றிக் கவலைப் பட்டவனாக உன் கடிதத்துடன் ஓடினேன் அங்கே. தேடினேன் மாமாவை. கூறினேன் விஷயத்தை.

அவர் என்ன சொன்னார் தெரியுமா? ''பையா சுபாஷ், எந்த வேலைக்கும் முதல் தேவை பங்க்சுவாலிட்டி. அது உன் காதலிக்கு இல்லை. (சத்தியமாக நான் உன்னைப் பற்றி அப்படி

எதுவும் சொல்லவில்லை. உன் மீது நான் காட்டிய அக் கறையை அவர் அப்படித் தப்பாக நினைத்துக் கொண்டு விட்டார்) காலை பத்தரை மணிக்கு இன்டர்வியூ என்றால், பதினொன்றரை மணிக்கு வருகிறாள் இந்தப் பெண். எப்படி வேலை கொடுப்பது அவளுக்கு?''

நான் விடாமல், 'ஏதோ ஒரு நாள் லேட்டாகியிருக்கலாம். அதை மன்னித்துவிடக் கூடாதா?' என்று உனக்காக மன்றாடி விட்டு வந்திருக்கிறேன்.

வேலை கிடைத்ததும் எனக்கு ஏதாவது தருவாய் அல்லவா?

உன்னே உன்
சுபாஷ்

★

ஐயா சுபாஷ்,

நீர்தான் புரட்டு என்று நினைத்திருந்தேன். உம்முடைய வம்சமே அப்படிப் போலிருக்கிறதே!

நானா லேட்டாக வந்தேன்? ஒரு நாளும் இல்லை.

தெருக் கோடிக்கு வந்தபோது மளிகைக் கடைக்கு அடுத்துள்ள ஒரு வீட்டில் கடியாரம் அடிக்கிற ஓசை கூடக் கேட்டது. அங்கேயே நின்று எண்ணினேன். சரியாய்ப் பத்து. என் கைக் கடியாரத்தைச் சரி செய்து கொண்டேன். ஜன்னல் வழியே தெரிந்த கடியாரத்தையும் பார்த்தேன். சின்ன முள் பத்திலும் பெரிய முள் பன்னிரண்டிலும் இருந்தது. அங்கேயே ஒரு ஆட்டோவும் கிடைத்தது. சங்கர் லிமிடெட்டின் ஆபீஸ் அங்கிருந்து ஒரே மைல் தூரம்தான். இரண்டே நிமிடத்தில் நான் சங்கரா லிமிடெட்டை அடைந்திருக்க வேண்டும். அடைந்து விட்டேன். ஏன் வீணாகப் பொய் சொல்கிறார் உங்கள் மாமா? வேலை இல்லையென்றால் இல்லையென்று சொல்லி விட்டுப் போகட்டுமே?

இப்படிப்பட்ட மோசடிக் கம்பெனியில் வேலை பார்ப் பதைக் காட்டிலும் நாக்கை வெளியே கழற்றி வைத்து விட்டுக் கடைசி மூச்சை விட்டு விடலாம். ஆகவே எனக்காக எவ்வித சிபாரிசும் நீங்கள் செய்யத் தேவையில்லை.

கோபத்துடன்
சுகுமாரி

★

சுகுமாரி,

நம்ம தெருவில் மளிகைக் கடைக்கு அடுத்த வீடு எது வென்று நினைத்தாய் மகளே! அடியேனுடையது தான்.

அங்கே ஒலித்த கடியாரம் எதுவென்று எண்ணினாய் பெண்ணே!

நைனியப்பா அன்ட் கோவில் தவணை முறையில் நான் வாங்கிய அதே கடியாரம்தான்! அது பத்துத் தரம் அடித்தால் மணி பதினொன்று என்று அர்த்தம். அதைக் குறைசொன்ன தற்குத்தான் உன்னுடைய அழகான மூக்கின் மேல் அவ்வளவு கோபம் வந்தது.

போகட்டும். என் மாமாவுக்கு டெலிபோன் பண்ணி இன் னொரு முறை உன்னைப் பேட்டி காணும்படி கேட்டுக் கொண் டிருக்கிறேன். கட்டாயம் போ. கேட்ட கேள்விகளுக்குச் சமர்த்தாய்ப் பதில் சொல்லு. முக்கியமாய் 'நீ சுபாஷின் காத லியா?' என்று கேட்டால் 'ஆமாம்' – என்று மறக்காமல் சொல்லு.

சுபாஷ்

சுபாஷ்!

என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை முடியா விட்டாலும் அரை வார்த்தையாவது சொல்லுங்கள்.

சுகுமாரி

★

18. காதல் பைனாகுலரில் தெரியும்

ஐயா,

உடனே.

மீரா

★

குமாரி மீரா அவர்களுக்கு,

வணக்கம்.

எடனே? (அதாவது, என்ன, ஏது, எப்படி, எப்போது எக்ஸட்ரா.)

கே.எஸ். வாஸ்

★

ஐயா வாஸ்,

உங்களுக்கு அறிவு லாஸ் ஆகவில்லையென்றால் போன ஞாயிறன்று எங்கே இருந்தீர்கள் என்பதையும், மாலை ஐந்தே முக்காலுக்கு என்னென்ன நடந்தது என்பதையும் கொஞ்சம் நினைவுபடுத்திப் பாருங்கள்.

மீரா

★

அன்புள்ள குமாரி மீரா,

நீங்கள் இவ்வளவு தூரம் திரும்பத் திரும்பக் கூறுவதிலிருந்து, போன ஞாயிற்றுக்கிழமை என் வாழ்விலே பொன்னான நாளாகத்தான் இருக்கவேண்டும். ஆகவே, ஞாபகப் படுத்திப் பார்க்கிறேன். இருங்கள். வந்து... வந்து...

அட! ஆமாம். போன ஞாயிற்றுக்கிழமை நான் வேடந்தாங்கலுக்கு வந்திருந்தேன். ஸ்கூட்டர் ரிப்பேர். சுகுமாரன் நாயர் என் ஸ்கூட்டரைச் சரி பண்ணிவிட்டதாயும் லண்டன் வரைகூட அதை ஓட்டிப் பார்க்கலாமென்றும் சொன்னதன் பேரில், வேடந்தாங்கல் வரை வெள்ளோட்டமாக வந்தேன். வண்டி கண்டிஷனாக இருந்தது. ஆனால், பேசியபடி நாயருக்கு ஐம்பத்துமூன்று ரூபாய் எண்பது பைசாவைத் தர வேண்டுமல்லவா? அதை மட்டும் மறந்து தொலைத்து விட்டேன். அதுதான் அந்த அற்பன் நான் போகிறபோதும் வருகிற போதும் தன் பீடிப் புகை வழியாக முறைக்கிறானா? இன்று சாயந்தரமே வீசியெறிகிறேன் அவன் முகத்தில்.

தக்க சமயத்தில் ஞாபகமூட்டி விட்டீர்கள். ரொம்ப நன்றி.

கே.எஸ். வாஸ்

★

மிஸ்டர் வாஸ்,

சுகுமாரன் நாயருக்கு நீங்கள் பாக்கியைத் தந்தால் என்ன, தராவிட்டால் என்ன, இரண்டு பேருமாய்ச் சேர்ந்து மாலம்புழா அணைக்கட்டில் விழுந்தால் தான் எனக்கென்ன?

அதையா ஞாபகப்படுத்தினேன் நான்? இல்லை, முக்காலும் இல்லை.

வேடந்தாங்கல் ஏரிக்கரையில் சிமென்ட் பெஞ்சுகள் போட்டிருக்கிறதே, நினைவிருக்கிறதா? அங்கே நீர் காலைப் பிடித்துக் கொண்டு (அதாவது, உமது காலை) உட்கார்ந்திருந் தீர்கள். நானும் வேறு சில உல்லாசப் பிரயாணிகளும் உங்களைத் தாண்டிக் கொண்டு போன பிறகுதான் கவனித்தீர்கள் — கோடியில் ஒரு மண்டபம் இருப்பதையும், எல்லோரும் படகில் ஏறிச் செல்வதையும். நீங்களும் ஓட்டமாய் ஓடி வந்து சேர்ந்து கொண்டீர்கள். ஆனால், தர்ம நியாயமாய்க் கடைசியில், முறைபிசகாக முண்டிக்கொண்டு முன்னால் சென்றீர்கள்.

மண்டபத்தின் மேல்தளத்தை அடைந்ததும் பைனாகுலரை நீங்கள் ஒருவரே ஆக்கிரமித்துக் கொண்டீர்களே, அது நினைவில்லை? பின்னால் பத்துப் பேர் நிற்கிறார்களே என்கிற பண்பாடு இல்லாமல், 'ஆஹா! அற்புதம்! என்ன கலர்! என்ன பியூட்டி!' என்றெல்லாம் துள்ளிக் குதித்தீர்களே. ஞாபகம் இல்லை? 'உடனே குறித்துக் கொள்ள வேண்டும்! குறித்துக் கொள்ள வேண்டும்!' என்று துடித்தீர்களே அதுகூடவா மறந்துவிட்டது? பையிலிருந்து ஒரு காகிதம் எடுத்து வைத்துக் கொண்டு, கீழே வைத்து எழுத எதுவுமில்லாமல் தவித்தீர்களே!

நினைவில்லை? தொலையட்டும் என்று நான் என் கையில் இருந்த புத்தகத்தைக் கொடுத்தவுடனே அதை அடியில் வைத்துக் கொண்டு என்னென்னவோ குறித்துக் கொண்டீர்களே, அதைத் தான் சென்ற பதினாயிரம் கடிதங்கள் மூலமாய் ஞாபகப் படுத்தி வருகிறேன்.

இப்போதாவது புரிகிறதா நான் எதைச் சொல்கிறேன் என்று?

இங்ஙனம்
அஞ்சல் துறைக்கு அழுது கொண்டிருக்கும்
மீரா

★

குமாரி மீரா அவர்களுக்கு,

நான் என்ன குறித்துக் கொண்டால் உங்களுக்கென்ன? அது என் தொழில். அது என் வயிற்றுப் பழைப்பு. யாருக்கும் எக்காரணம் கொண்டும் நான் என்ன குறித்துக் கொண்டேன் என்று சொல்லத் தயாராயில்லை.

இப்படிக்கு
நரசிம்ம பகவானின் தம்பி
கே.எஸ். வாஸ்

★

அட சட்!

நீங்கள் எந்த அழுக்குக் கணக்கை வேண்டுமானாலும் குறித்துக் கொள்ளுங்கள். எனக்கு அக்கறையில்லை.

நான் ஞாபகப்படுத்துகிற விஷயம்: உங்களிடம் நான் கொடுத்தேனே அந்தப் புத்தகத்தைத்தான்.

எவ்டுஷெங்கோவின் கவிதைத் தொகுப்பான அது, அமு தென்று பேர், என் உயிருக்கு நேர். (எனக்கு பாரதிதாசனும்

படிக்கும்.) பிரமாதமாய் அல்கட்ராஸ் பறவை மனிதன் மாதிரி வேடந்தாங்கலில் ஆகா ஊகூ என்று ரசித்தீர்களே தவிர, ஒரு கவிதைப் புத்தகத்தைத் திறந்து பார்க்கக் கூட உமக்குத் தோன்ற வில்லை. பிரித்துப் பார்த்திருந்தால், முதல் பக்கத்திலேயே என் பெயரும் முகவரியும் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். கண்டதும் ஓடோடி வந்து கொடுத்திருப்பீர்கள்.

அதை இப்போதாவது செய்யவும்.

கைக்குப் பெயின் பாம் தடவிக் கொண்டு இக்கடைசிக்
கடிதத்தை எழுதும்
மீரா

பி.கு. : உங்கள் விலாசத்தை எப்படிக் கண்டுபிடித்தேன் என்று கேட்கிறீர்களா? நீங்கள் பாக்கெட்டிலிருந்து ஒரு லெட் டர் ஹெட் காகிதத்தை எடுத்தவுடனேயே, பின்னாலிருந்த நான் அதிலிருந்த பெயர், விலாசத்தைப் பார்த்து விட்டேன். '19, எதிராஜ் தெரு,' என்று விலாசம் என் மனத்தில் உடனே பதிந்து விட்டது. ஏனெனில், முதலாவது, என் வயது. இரண்டாவது, என் கல்லூரி.

★

மீரா! மீர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ரா!

பெர்னார்ட் ஷாவின் நாடகத்தைக் காட்டிலும் அவர் முன் னுரை சுவாரசியமாயிருக்கும் என்பார்கள். அதுபோல், உன் மெயின் கடிதத்தைக் காட்டிலும் பின் குறிப்பு எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதுபோன்ற சுவையான சிறு துணுக்குகளை அடிக்கடி அனுப்பி வைக்குமாறு கோருகிறேன்.

நிற்க. மேற்படி கவிதைத் தொகுப்பை நான் பிரித்தே பார்க்க வில்லை என்பது உண்மையே. ஏன்? அதற்குக் காரணம் நீ தான் என்று, என் சுட்டுவிரலை உன் அழகிய மேனியின்

பக்கமே நான் திருப்பினால் நீ ஆச்சரியப்படுவாய் அல்லவா? ஆனால் அதுவே உண்மை. ஒவ்வொரு முறை அந்தப் புத்த கத்தை எடுக்கும்போதும், அதை நீட்டிய பட்டுக் கைகள் நினை வுக்கு வரும். பச்சை நரம்போடிய அந்தப் பொற்கரங்களின் வழியே கண்கள் ஏற, மெல்லிய பிளவுஸ் வழியாகப் பால் கோவா தோளைப் பார்த்து, ஸ்வீட்டோ ஸ்வீட்டான முகத்தைத் தரிசனம் பண்ணினேனே — அது அப்படியே நினைவுக்கு வரும். மெய் சிலிர்க்கும். கண்ணை மூடிக் கொள்வேன். மூடிக் கொண்டேயிருப்பேன்.

போகட்டும். அந்தப் புத்தகத்தைத் திரும்பக் கொண்டு வந்து தரத் தயார். அதற்கு முன்னால் நீ ஓர் உதவி செய்ய வாக்களிக்க வேண்டும். செய்வாயா?

என்றும் மீரா பஜனாகவே இருக்கும்,
வாஸ்

★

வாஸ்,

உரிய புத்தகத்தை உரியவரிடம் சேர்ப்பிப்பதற்குக் கூலி கேட்பது சரியல்ல. இருந்தாலும், என்ன உதவி என்று எழுதுங்கள். படித்துவிட்டுச் சொல்கிறேன்.

மீரா

★

மீரா!

இதைப் படித்ததும் என்னை ரொம்ப மட்டமாய் நினைப் பாய். என்ன செய்வது! உண்மை கசப்பானது மட்டுமல்ல, மட்ட மானதும்கூட. (இது கே. பாலசந்தரின் பொன்மொழியல்ல, என் சொந்தம்.)

அன்று நான் வேடந்தாங்கலில் 'ஆகா! அடடா! என்ன பியூட்டி!' என்றெல்லாம் சொன்னது — திடுக்கிடாதே —

பறவைகளிடம் மயங்கி அல்ல. அவைகளின் நிறத்தை என் வியாபாரத்துக்கு எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றுதான் உற்சாகம் கொண்டேன்.

'வாஸ் டெகரேடர்ஸ்' என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? அது என் கம்பெனிதான். அதாவது, வாஸ் கம்பெனிக்கு நான் பாஸ்.

'வாஸ் டெகரேட்டர்' என்ன பணி செய்கிறது என்றால்; வீடுகளையும் அலுவலகங்களையும் சினிமாத் தியேட்டர் களையும் ஓட்டல்களையும் என்னென்னபடி அலங்கரித்து அழகுபடுத்தலாமோ அதையெல்லாம் செய்கிறது. வேடந் தாங்கல் பறவைகளைப் பார்த்ததும், அவைகளின் நிறங்களில் பெயின்ட்கள் கொடுத்தால் எத்தனை குளுமையாக இருக்கும் என்றுதான் என் கற்பனை ஓடியது.

(ஓடாமல்) நிற்க. உன் கவிதைப் புத்தகத்திலிருந்த விரிவான விலாசத்திலிருந்துதான் உன் தந்தை யார் எனக் கண்டு கொண்டேன். சென்னை ஓட்டல் சக்கரவர்த்தியான உமைதாணுவா உன் தந்தை! முன்பே தெரியாமற் போயிற்றே!

மீரா! உன் அப்பா மவுண்ட்ரோடில் கட்டிக் கொண் டிருக் கும் ஆறடுக்கு ஓட்டலின் ஒரு பகுதிக்காவது டெகரேஷன் காண்டிராக்ட் எனக்கு வாங்கித் தருவாயா?

செய்வாயா மீராக் கண்ணே?

இப்படிக்கு
கே.எஸ். வாஸ்

★

என்ன மிஸ்டர்?

கை, கடிதத்துக்கு கடிதம் நீளுகிறதே, உடம்பு எப்படி இருக்கிறது?

நீங்கள் கேட்ட உதவியைச் செய்யலாம்தான். ஆனால் அப்பாவின் மவுண்ட்ரோடு ஓட்டல் முடிவடைந்து, அடுத்த வாரம் திறப்புவிழா நடக்கப் போகிறதே? இனிமேல் என்ன டெகரேஷன்?

மீரா

★

ஐயே மீரா!

உன் பெயரை இனி அப்பாவி மீரா என்று மாற்றிக் கொள்.

ஏனெனில், உன் தந்தையின் ஓட்டலில் பாதிக்குமேல் பாக்கி இருக்கிறது. திறப்பு விழா நடைபெறப் போகிற வாசல் பக்கம், வரவேற்பு அறை முதலிய இடங்களைத் தவிர மற்ற இடங்களெல்லாம் என் கை வண்ணத்துக்காகக் காத்திருக் கின்றன.

மீரா! நீயும் ஜோரா(ய்) கடைக்கண்ணால் என்னைப் பாரா(ய்).

இப்படிக்கு
கே.எஸ். வாஸ்ரா

★

அன்புள்ள மிஸ்டர் வாஸ்!

அப்பாவின் பர்ஸனல் செகரட்டரிக்குத் தெரியாமல் ஓர் அழைப்பிதழ் திருடி இத்துடன் அனுப்பியுள்ளேன். திறப்பு விழாவுக்கு வந்து சேரவும். அப்பாவிடம் அறிமுகம் செய்து வைக்கிறேன். பிறகு ஆண்டவன் துணை.

மீரா,

★

மீரா!

அழைப்பிதழ் பெற்றேன். ஆனந்தம் உற்றேன். உன் சொல்லைத் தற்றேன்.

சே!

நீரும் ஒரு மனிதரா! இப்படி அப்பாவை அவமானப் படுத்துவதென்று எத்தனை நாளாய் ரிஸ்ட் வாட்ச் கட்டிக் கொண்டிருந்தீர்கள்? நேற்றைய விழாவில் நீங்கள் செய்த ஒவ்வொரு பைத்தியக்காரச் செயலுக்கும் உடனே விளக்கம் தேவை. ஒரு நொண்டிப் பறவையை வைத்துக் கொண்டு என் அப்பாவைப் பித்துக்குளியாக்கிய கொடுமைக்கு உடனே சமாதானம் தேவை.

மட்டி மடச்சி மீரா

★

மன்னி மீரா!

என்னை மன்னி. அண்ணி ஆகிவிடாதே.

உன்னை முதன் முதல் சந்திக்கும் பாக்கியம் என்றைக்குக் கிட்டியதோ அன்றைக்கே 'டார்லிங்'கைச் சந்திக்கும் துர்ப் பாக்கியமும் கிடைத்தது. அதே வேடந்தாங்கலில்.

'டார்லிங்' என்பது வாத்தா, குருவியா, கொக்கா, பச்சைக் கிளியா—எனக்குச் சத்தியமாய்த் தெரியாது. வேடந்தாங்கலி லிருந்து திரும்பும்போது அதைப் பார்த்தேன். ராமரைச் சந் திக்கக் காத்திருந்த ஜடாயு போலக் குற்றுயிரும் குலையுயிரு மாகப் பாதையோரத்தில் கிடந்தது. ஐயோ பாவம் என்றெண்ணி, ஸ்கூட்டரிலிருந்த பையில் எடுத்துப் போட்டுக் கொண்டேன் — அது என் காதலுக்கு எமனாகி, கண்ணீருக்குக் காரணமாகும் என்பதை அறியாமல்.

அன்று தொட்டு அது என் அறையை விட்டு அகலா திருக்கிறது. பாதி நேரம் என் தலையில்தான் அதற்கு ஜாகை. மறு பாதி நேரம் என் தோளில். அக்பரின் புறங்கையில் உட்கார்ந்திருக்கும் கிளி போல அது என் உடல்-பொருள்-

ஆனந்தியாகிவிட்டது. 'டார்லிங்' என்று பெயரும் நான்தான் சூட்டினேன்.

முந்தா நாள் விழாவுக்காக நான் புறப்பட்டபோது அது தானும் வருவேன் என்று பிடிவாதம் பிடித்தது. 'உங்களுடன் வாழ்ந்து எனக்கென்ன சுகம்? ஒரு சினிமா டிராமா உண்டா, பீச் உண்டா, பட்டுப் புடவை உண்டா?' என்றெல்லாம் புலம் பியது. 'மூடு வாயை! அறைந்தேன்னா தெரியுமா?' என்று கத்தி விட்டுக் கிளம்பி விட்டேன். (எங்கள் உரையாடலைத் தயவு செய்து நம்பு. நாங்கள் இப்படி அடிக்கடி பேசிக் கொள் வது வழக்கம்.)

துரோகி 'டார்லிங்,' நான் தலைவாரிக் கொண்டிருந்த சமயம் ஸ்கூட்டர் பைக்குள் போய் ஒளிந்து கொண்டிருக் கிறது. அப்பாவி நான், தெரியாமல் கிளம்பி விட்டேன்.

வன தேவதை போன்ற அலங்காரத்துடன் கட்டழகி நீ வரவேற்று அழைத்துச் சென்ற அழகென்ன; உன் காலடிச் சுவடுகளை ஆயிரம் தடவை கண்ணில் ஒற்றிக்கொண்டு உன் பின்னேயே நான் நடந்த கம்பீரமென்ன; உன் தந்தை உமை தாணு தொப்பையில் கையை ரெஸ்ட் செய்து கொண்டு தலை அசைத்து முறுவல் காட்டிய ஆனந்த மென்ன; சுற்றியிருந்த நூற்றுக்கணக்கான பேரும், நான் இவ்வளவு சுலபமாக உன் தந்தையின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டதைக் கண்டு பொறாமை யினால் வயிறெரிந்த எரிச்சலென்ன —

அப்படிப்பட்ட அயனான வினாடி பார்த்தா சதிகார டார்லிங் குபுக்கென்று என் ஸ்கூட்டரிலிருந்து கிளம்ப வேண் டும்? என் தோள் மீது உட்கார்ந்து கொண்டு, சபையோரை ஒரு நோட்டம் விட்டுவிட்டு, உன் தந்தையின் மூக்கைத் தன் மூக்கி னால் ஸ்பரிசிக்க அந்த வேளைதானா கிடைத்தது? அத்துடன் நில்லாமல், உயர்திரு உமைதாணுவின் தலை மீது ஆரோ

கணிக்க வேண்டுமென்ற விபரீத ஆசை எழுந்து, அதை நிறை வேற்றிக் கொள்ளவும் முற்பட வேண்டுமா?

மீரா! என் பரிதாப நிலையைத் தயவு செய்து ஆலோசித்துப் பார்.

இன்னொரு சந்தர்ப்பம் தயவு பண்ணி ஏற்படுத்திக் கொடு.

கண்ணீரும் கம்பலையுமாக
கே.எஸ். வாஸ்

பி.கு. : இதை எழுதி முடித்த சமயம் இன்றைய தினசரி வந்திருக்கிறது. தலையில் 'டார்லிங்'குடன் காட்சி தரும் உன் தந்தையை எவனோ அயோக்கியன் போட்டோ பிடித்துப் போட்டிருக்கிறான். இது என் நிலைமையை அபிவிருத்தி செய்யவில்லை என்று ஒப்புக் கொள்கிறேன்.

★

மிஸ்டர் வாஸ் அவர்களுக்கு,

உங்கள் மீதுள்ள கோபம் சிறிதும் தணியவில்லை எனக்கு. எனினும் அனாதைப் பறவைகளுக்கு நீங்கள் வேடந்தாங்கலாக விளங்கினீர்கள் என்று தெரிந்ததால் ஓரளவு அனுதாபம் ஏற்பட்டது.

மேலும், உங்கள் டார்லிங் (பெயரை உடனே மாற்றவும். எனக்குப் பிடிக்கவில்லை.) தன் தலை மீது உட்கார்ந்து கொண்ட பறகு, பல வருடங்களாக இருந்து வந்த ஒற்றைத் தலைவலி குறைந்து விட்டதாக என் அப்பா கூறுகிறார். இது என்ன அதிசயமோ எனக்குப் புரியவில்லை.

ஆகவே, நாளை மாலை ஐந்து மணிக்கு மீண்டும் உங்களுக்கு 'எங்கேஜ்மெண்ட்' ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்.

மவுண்ட் ரோடில் அப்பாவுக்குச் சொந்தமான புது ஓட்டலில், இரண்டாவது மாடியில் உள்ள வரவேற்பு அறைக்குச் செல்லவும். அந்த அறை எந்தவித அலங்காரமும் இல்லாமல் இருக்கிறது. அதை எப்படி அழகுபடுத்துவீர்கள் என்பதை அப்பாவிடம் விவரிக்கவும்.

மீரா

★

ஹே மீரா!

என்ன சொல்வேன். மீரா! எப்படிச் சொல்வேன் என் துரதிருஷ்டக் கதையை!

குறித்த நேரத்துக்கு, குறித்த இடத்துக்கு, குறித்த பிரகாரம் சென்றேன். ஞாபகமாய் டார்லிங் சனியனை வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டுப் புறப்பட்டேன். ஆனால் வீடுகளுக்கு ஜன்னல் உண்டு என்பதையும், பறவைகளுக்குச் சிறகு உண்டு என்பதையும் மறந்து போனேன். அந்தக் கீச்கீச் என்னை மீண்டும் பின்தொடர்ந்து, என் தலைக்கு மேலாகவே பறந்து வந்திருக்கிறது. அதை நான் கவனிக்கவில்லை.

உன் அப்பாவின் பெருந்தன்மைதான் என்னே! திறப்பு விழா—தலை—பறவை—புகைப்பட நிகழ்ச்சிகள் மொத்தத்தையும் மறந்து மன்னித்து என்னுடன் கை குலுக்கினார். பேசினார். ஆர்டர் கொடுத்தார்.

மொத்தம் இருபது லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள காண்டிராக்டை எழுதி முடித்து, கையெழுத்திடப் போகும் தருணம் —

என் எமன், தத்தித் தத்தியோ, லிப்டு மூலமாகவோ அந்த இரண்டாவது மாடிக்கு வந்துவிட்டது. வரும் வழியிலே எவனோ வைத்திருந்த ஒரு திறந்த பெயிண்ட் டப்பாவைப்

பார்த்து, அதில் மகாமகத் தீர்த்தமும் ஆடிவிட்டு வந்திருக்கிறது.

அந்தப் பச்சைப் பெயிண்ட் பூசிய கால்களுடன் உன் அப்பாவின் அறை பூரா நடந்து, ஏறி, தாவி, குதித்து, பறந்து, சிறகடித்து —

ஐயோ! ஐயோ! அலங்கோலம்!

உன் அப்பா முகம் —

ஐயோ! ஐயோ! மாகோரம்!

தலை தெறிக்க வெளியே ஓடினேன்!

மீரா! விடை கொடு கண்ணே!

இதுவரை சுத்த சைவமாக இருந்த நான், இன்று முதல் அசைவமாக மாறப் போகிறேன். முதல் அசைவ ஐட்டத்துக்காக அந்தத் துரோகியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

நவீன அனார்கலி
கே.எஸ். வாஸ்

★

வாஸ்! டியர் மிஸ்டர் வாஸ்!

வேண்டாம். டார்லிங்கைப் புசிக்க வேண்டாம். பூசிக்க வேண்டும்.

ரகளைகளைச் செய்துவிட்ட நீங்கள் வெளியேறிய மறுகணமே ஒரு பிரெஞ்சுக்காரர் அப்பாவைப் பார்க்க அறைக்குள் நுழைந்தார். ஏதோவொரு சர்வதேச மாநாட்டுப் பிரதிநிதிகளின் ஜாகைக்கு அப்பாவின் புது ஓட்டல் வசதிப்படுமா என்று பார்க்கவே வந்தாராம் அவர்.

நுழைந்த வினாடியே ஹா என்று துள்ளினார்! ஹோ வென்று குதித்தார். கைதட்டினார். கைகுலுக்கினார். பாராட்டினார். கண்ணை மூடிக்கொண்டு அப்பாவின் ஓட்டலை அப்படியே அமர்த்தினார். இனி சென்னையில் நடக்கப் போகும் எல்லா மாநாடுகளுக்கும் இதுவே ஏற்ற இடம் என்று ஐ.நா. வுக்குப் போய்ப் பிரகடனம் செய்யப் போகிறாராம்!

ஏனா? உங்கள் 'டார்லிங்'கின் பாதச் சுவடுகள் அறையெங்கும் பளிச் பளிச் பளிச்சென்று விழுந்திருந்ததே, அதனால் தான்! ''இந்த மாதிரி மாடர்ன் ஆர்ட்டைப் பாரிசில்கூடப் பார்க்க முடியாது! என்ன அற்புதமான சுவரோவியங்கள்!'' என்று ஆனந்தம் கொண்டாராம்!

வாஸ்! உடனே என்னைச் சந்திக்க வா(ஸ்)!

டார்லிங்குக்கு என் சார்பில் கன்னத்தில் ஒன்று கொடுங்கள்.

உங்கள்
மீரா

★

மீரா!

டார்லிங்குக்கு மட்டும்தானா?

வாஸ்

நிறைந்தது

ரா.கி.ரங்கராஜன்: 5.10.1927-ல் கும்பகோணத்தில் பிறந்தார். தந்தை மகாமகோபாத்தியாய ஆர்.வி.கிருஷ்மாச்சாரியார் மிகப் பெரிய சமஸ்கிருத வித்வான். ரங்கராஜன் தனது 16வது வயதில் எழுத ஆரம்பித்தார். 1946-ல் 'சக்தி' மாத இதழிலும் 'காலச் சக்கரம்' என்ற வார இதழிலும் உதவி ஆசிரியராகத் தொடர்ந்தார். 1950-ல் 'குமுதம்' நிறுவனம் சிறிது காலம் நடத்திய 'ஜிங்லி' என்ற சிறுவர் இதழில் சேர்ந்து, குமுதம் இதழில் 42 ஆண்டு காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் 1500க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், 50 நாவல்களும், ஏராளமான கட்டுரைகளும், மொழிபெயர்ப்பு நாவல்களும் எழுதியுள்ளார். இவருடைய மூன்று நாவல்கள் திரைப்படமாக வெளிவந்துள்ளன. பல படைப்புகள் சின்னத்திரையிலும் இடம் பெற்றுள்ளன. ரங்கராஜன் 'சூர்யா', 'ஹம்ஸா', 'கிருஷ்ணகுமார்', 'மாலதி', 'முள்றி', 'அவிட்டம்' - போன்ற புனைப்பெயர்களில் தரமான சிறுகதைகள், வேடிக்கை நாடகங்கள், துப்பறியும் கதைகள், குறும்புக் கதைகள், மழலைக் கட்டுரைகள், நையாண்டிக் கவிதைகள் - என பலதரப்பட்ட எழுத்துக்களைத் தந்தவர். ஒவ்வொரு புனைப் பெயருக்கும் - நடையிலோ, கருத்திலோ, உருவத்திலோ எதுவும் தொடர்பு இல்லாமல் தனித்தனி மனிதர்போல் எழுதிய மேதாவி. இந்தப் பல்திறமைக்கு ஒரே ஒரு முன்னோடி தான் உள்ளார்

- **கல்கி**

'ரங்கராஜன் ஒரு கர்ம யோகி, குமுதம் ஸ்தாபன விசுவாசம், ஆசிரியர் எஸ்.ஏ.பி. மேல் பக்தி, கிடைத்தது போதும் என்கிற திருப்தி, சக எழுத்தாளர்கள் மேல் பொறாமையற்ற பரிவு, நேசம், வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி, நண்பர்களைக் கண்டால் கட்டியணைத்து முதுகில் ஒரு ஷொட்டு - இவை இவருடைய சிறப்புகள்.'

- சுஜாதா